பெப்ரவரி 2016

Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/142/News/2015

# சோதிடகேசரி

ISSN 2012-5143

மலர்: 8 இதழ்: 11

விலை ரூபா 75 /-

மாசி மாத இதழ்



மகா சிவராத்திரி விரதப் பலன்கள்!

பாகிஸ்தானில் சிவன் ஆலயம்!

மஞ்சள் நிற ஜோதி தியானம்!

ரோமில் மன்னராட்சிக்கு வழிவகுத்த சோதிடக்கலை!

ஆங்கில எழுத்துக்களில் பிரமிடு சக்தி




ஹரே கிருஷ்ணா

# இலங்கை மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

ISKCON 50

## கொழும்பு மாநகரில் அதி அற்புத ஆலயம்



"பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு அமைக்கப்படும் ஆலய திருப்பணியை ஆரம்பிக்கும் அல்லது அதில் பங்கு கொள்ளும் பக்தரின் ஏழு பிறப்பிற்குரிய பாவங்களும் நீக்கப்படுவதுடன் அவரின் மூதாதையரும் நரகலோகத்திலிருந்து மீட்சி பெறுவர்" என ஸ்கந்த புராணம் கூறுகிறது.

ஆலயத் திருப்பணி வேலைகளுக்காக 10 கோடி ரூபாவுக்கு மேல் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் அரைவாசி வேலைகள் முடிந்த நிலையில், நீங்களும் பகவான் கிருஷ்ணரின் ஆலயத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன் வந்து பங்கு கொண்டு பிறவிப் பயனை பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.



▲ நிர்மாணப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

நன்கொடைகளை ஹட்டன் நெஷனல் வங்கியில் அல்லது கொமர்ஷல் வங்கியில் பணத்தை வைப்புச் செய்யலாம்.

**Commercial Bank - Kotahena**
**A/C Name : ISKCON - Temple Fund**
**A/C No : 1120017042**


**Hatton National Bank - Kotahena**
**A/C Name : ISKCON**
**A/C No : 207010000891**

ISKCON
www.iskcon.lk

**சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம் - இலங்கை**
ஸ்தாபக ஆச்சாரியார் : அருட்திரு அ. ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா

**ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயம்**
இல. 188, புதுச்செட்டித் தெரு, கொழும்பு - 13.
தொ : 011 2433325 | மின்னஞ்சல் : iskcon@slt.lk

50 ஆண்டு நிறைவு 1965 - 2015



பக்திவேதாந்த சிறுவர் இல்லம் "கோகுலம்" சிறுவர்களுக்கு அன்பும் அரவணைப்பும் நல்வாழ்வும் அளிக்கும் கருணை இல்லமாக இயங்கி வருகிறது. இவர்களுக்கு சிறந்த கல்வியும் நற்பழக்கவழக்கங்களையும் கற்பிக்ககூடிய வகையில் இந்த இல்லத்துடன் இணைந்த பாடசாலையும் இங்கு உண்டு. தங்களின் அல்லது தங்களின் பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம்,தங்களின் திருமண நாள் உறவினர்களின் ஞாபகார்த்தம் பேன்ற எந்த தினங்களிலும் நன்கொடைகளை வழங்கி இச் சிறுவர்களுக்கு உதவலாம்.

தற்போதய சூழ்நிலையில் அவர்களை பராமரிக்க ஒரு நாளைக்கு ரூபா 25,000/- செலவாகிறது.

கருணை இல்லமாக விளங்கும்
பக்தி வேதாந்த சிறுவர் இல்லம்

**கோகுலம்**

Commercial Bank
A/C Name - ISKCON
A/C Number - 1050669901
Shift Code - CCEYLKLX

**COKULAM** No. 607A, Negombo Road, Mabola, Wattala. Tel: 011 2948398
Web: www.iskcon.lk

**OFFICE** No. 188, New Chetty Street, Colombo 13. Tel: 011 2433325
E-mail: iskcon@slt.lk

சோதிடகேசரி
SOTHIDA KESARI
Astrological Magazine - Tamil
மலர்: 8 | இதழ்: 11



# தனிமனித ஒழுக்கம் இறையருளைத் தேடித்தரும்!

நல்லொழுக்கங்களை மனிதர்கள் கடைப்பிடிப்பது என்பது போற்றுதற்குரிய ஒரு பண்பாகும். அதிலும் தனி மனிதர் நல்லொழுக்கங்களை பின்பற்றி வாழும் போது அதுவே ஒரு மிகச் சிறந்த ஆன்மீக சாதனையாகவும் அந்த மனிதரின் வாழ்வில் நிறைவு செய்கின்றது, அதனால் அவருக்கு இறையருளும் தேடாமல் கிடைக்கின்ற செல்வமாக அமைந்திடும். ஒருவர் தீயவனாக இருந்து கொண்டு, அதன் பொருட்டு தீய செயல்களை மட்டுமே செய்து கொண்டும் இருப்பாரேயானால் அது விஷ நாகத்தை எப்போதும் தோளிலே சுற்றிக் கொண்டு, நான் நிறைந்த ஆயுளோடு வாழ்வேன் என்று செப்பி திரிவதற்கு ஒப்பாகும். பசும் பயிர் தழைத்திட சூரிய ஒளி அவசியமாய் தேவைப்படுவது போல ஒவ்வொரு மனிதரும் வாழ்வில் கடைதேர்வதற்கு வாழ்க்கையில் நல்லொழுக்கம் என்பது ஒரு இன்றியமையாத பண்பாகும்.

இதையே தான் புராண காலத்து ரிஷிகளும் முனிவர்களும் "அறத்துடன் வாழ்வது" என வரையறுத்து கூறினார்கள். நல்லதையே எண்ணி, நல்லதையே செய்யும் போது பேச்சிலும் செயலிலும் அடக்கத்தன்மை தானாகவே குடிகொண்டு விடும். மேலும் நல்லவருக்கான இலக்கணமாய் இருந்திடுவதும் உயர்ந்த பண்புகளை உருவாக்குகின்ற நல்ல ஒழுக்கம் தான்.

நல்ல ஒழுக்கங்களுடன் நல்லவர்களாக வாழ்வதில் மற்றுமொரு அனுகூலம் என்னவென்றால் அனுதினமும் எதையாவது நெஞ்சில் நினைந்து அல்லல்படும் நிலை ஏற்படுவதில்லை. அத்துடன், ஒரு மிகப் பெரிய ஆலமரத்தை வளர்த்து உருவாக்கி அது மற்றவர்க்கும் நிழல் தரும் நிலையை ஏற்படச் செய்வது போல், நல்லொழுக்கம் பேணி வாழ்பவரின் சந்ததியும் எண்ணற்ற கொடுப்பினைகளை தவறாது அடைந்திடும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இம்மாத இதழில், புனித நாளாய் போற்றப்படும் மாசிமகத்திருநாள், மானுடத்தை மாண்புடையதாக்கும் மகாசிவராத்திரி, சதுரங்கம் ஆடும் துறவிகள், சீதையின் முற்பிறவி, ஓம்கார லிங்கேஸ்வரர் 108 போற்றிகள், தியாக வீரன் சதமன்யு, தென்னகத்து காசியாய் போற்றப்படும் ஸ்ரீ ராமநாதசுவாமி ஆலயம், எண் கணிதமும் ஜோதிடமும் அக்காள் தங்கையே, தியானத்தின் சக்தி ஆகிய கருத்துச் செறிவுள்ள கட்டுரைகள் பலவும், மாசி மாதத்திற்கான பன்னிரண்டு ராசிகளுக்கான பலன்களும் எமது அன்பு வாசகர்களுக்கு காணிக்கை ஆகின்றன.

ஆசிரியர்


## மன்மத வருடம் மாசி மாதம் 13.02.2016 முதல் 13.03.2016 வரை

| | | | |
|---|---|---|---|
| | சந்திரன் | | ல |
| சூரியன் கேது | ராசி<br>13.02.2016 மகர சுக்கிரன்<br>25.02.2016 கும்ப புதன்<br>27.02.2016 விருச்சிக செவ்வாய்<br>08.03.2016 கும்ப சுக்கிரன்<br>12.03.2016 மீன புதன் | | |
| புதன் | | | குரு (வ) ராகு |
| சுக்கிரன் | சனி (வ்) | செவ்வாய் | |

| | | | |
|---|---|---|---|
| புதன் | சந்திரன் | செவ்வாய் | ல கேது |
| | அம்சம்<br>08.03.2016 விருச்சிக குரு<br>11.03.2016 விருச்சிக ராகு<br>11.03.2016 ரிசப கேது | | |
| | | | |
| சுக்கிரன் குரு ராகு (வ) | சனி (வ) | சூரியன் | |

Publisher : Express Newspaper (Ceylon) Limited
185, Grandpass Road, Colombo - 14.
Tel. : +91 115 322700 (30 Lines) Fax: +94 112 439987
Website: www.virakesari.lk





# பெண்கள் போற்றி பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்!

“சாபம்” எனில் சாபமிடுதல், சபதம், கெட்ட சொல், திட்டுதல் எனப் பொருள்படுகிறது. “சுமங்கலி” எனில் நற்பெண் டிர். நல்ல குணம் உள்ள ஒரு பெண் சொன்னால் மழையும் பெய்யும். “பெய்யெனப் பெய்யும் மழை என்பது வள் ளுவன் வாக்கு. கற்புக்கு அரசியான கண்ணகி கூறிய வுடன் நகரே எரிந்தது.

பஞ்ச பூதங்களினால் ஆன இந்த சரீரத்தை அடைந்த இந்த ஆத்மா, பெண் உருவம் பெற்றவுடன், சாட்சாத் அந்த ஆதிசக்தியான பராசக்தியின் ஆற்றலைப் பெற்றுவிடுகிறது. அவர்கள் தங்களின் ஒழுக்கத்தினாலும் வாய்மையினாலும், மற்றவர் களைக் காட்டிலும் தனித்தன்மை உடையவர்களாக ஆகிவிடுகிறார்கள். ஆதலால் அவர்கள் சொன் னால் இயற்கையிலும் மாறுதல்கள் ஏற்படும்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் பெண்களின் சாபங்களை வாங்கக் கூடாது. பெண் எனில், பெண் தன்மையுடைய பெண்கள்! அவர்களின் கண்களில் இருந்து நீர் பூமியில் பட்டால், அந்தப் பூமி, மனிதர்கள் வசிக்கத் தகுந்த பூமி அல்ல என்று சாஸ்திரங்கள் விதிக்கின்றன.

### குருவே ஞானதீபம்!

குருவை நாடி நாம்தான் போகவேண்டும். தேடித் தேடித்தான் செல்லவேண்டும். மன இருளைப் போக்கும் ஞானவிளக்கு குரு ஆவார். அவர் இம்மையிலும் மறுமையிலும் நம்மைச் சூழ்ந்த, சூழ இருக்கும் அஞ்ஞான இருளை நீக்கும் ஞானதீபமாக விளங்குகிறார்.

இன்று பல குடும்பங்கள் கஷ்டப்படுவதற்கு முழுமுதற் காரணம் பெண்களின் சாபங்களே! பெண்கள் போற்றப்பட வேண்டும். பாதுகாக்கப்பட வேண்டும். சாபம் என்பது வாயினால் தவறாகச் சொல்ல வேண்டும் என்று இல்லை... அவர்கள் மனதில் தவறாக நினைத்தால்கூட அது நம்மைப் பாதிக்கும்.

ஜாதகம் என்பது ஒரு கண்ணாடி போல, தாங்கள் செய்த முன்ஜென்ம வினைகள், இப்போது நடந்து கொண்டிருக்கக் கூடிய காலம், எதிர்காலத்தில் அமையக் கூடிய சூழ்நிலைகள் என அனைத்தும் மிகத் தெளிவாக உணர்த்தப்பட்டிருக்கும்.

இதுபோன்று பெண்களின் (சுமங்கலி என்பது நல்ல மங்கலமுடைய பெண். அதாவது, நல்ல பெண் என்று அர்த்தம்) சாபங்கள் ஏதேனும் இருக்குமெனில் அவையும் உணர்த்தப்பட்டிருக் கும். அவற்றுக்குப் பல பரிகாரங்கள் உள்ளன. பெண்களின் புனிதத் தன்மையை உணர்ந்து போற்றினோமானால், நாம் நமது சாபங்களில் இருந்து விடுபட்டு உயர்ந்த பலன்கள் அடை வோம் என்பது உண்மை.

# ஓம் எனச் சொல்லி துவங்கப்படும் உத்தமச் செயல்கள்



**அர்ஜுனன்:** தானம், தவம், வேள்வி இம்மூன்றையும் எவ்விதம் தொடங்க வேண்டும்?

**கண்ணன்:** பரம்பொருளான பிரம்மத்திற்கு ஓம், தத், சத் என்று மூன்று பெயர்கள் உண்டு. இதைக் கொண்டு தான் முன்பு பிராமணர்களையும், வேதங்களையும், வேள்விகளையும் நான் தோற்றுவித்தேன். ஆகவே வேதம் அறிந்தவர்களால் வேத முறைப்படி செய்யப்படும் வேள்வி, தவம், தானம் ஆகிய மூன்றும் ஓம் என்று சொன்ன பிறகே தொடங்குகின்றன. பலன் கருதாமல் சொர்க்கத்தை நாடும் உத்தமர்கள் தத் என்று சொன்ன பிறகே அந்த முச்செயல்களிலும் ஈடுபடுகிறார்கள்.

நன்மை, உண்மை என்று இருபொருள் கொண்ட சத் என்ற சொல் எல்லா மங்கள நிகழ்ச்சிகளிலும் பயன்படுத்தப்படுகிறது. வேள்வி, தவம், தாளம், இவற்றில் நிலைத்திருக்கும் சொல் சத் எனப்படும். அது தொடர்பான மற்ற செயல்களும் கூட சத் என்றே சொல்லப்படும். அக்கறை இன்றி செய்யப்படும் வேள்வியும் தவமும், தானமும் அசத் எனப்படும். அது இக வாழ்விலும் உதவாது. பலலோகத்திலும் பயன்படாது.

• ச.மெய்யப்பன்

### அட்டை படத்தில்...

தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள ஈஷா தியான மையத்தில் ஒவ்வொரு ஆண்டும் மகா சிவராத்திரிவிழா மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. வாசகர்கள் இந்த இதழில் அட்டை படத்தில் காண்பது ஈஷா தியான லிங்கமேயாகும்.

**மன்மத ஆண்டு மாசி மாதம்**
**13.2.2016 முதல் 13.03.2016 வரை**




கருத்தான விடயங்களை மனதில் வைத்து திறம்பட செயல்படும் மேச ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு தனஸ்தானத்தை குரு பார்வை இடுவதும், சுக்கிரன் சனி பார்வை இடுவதும் பொருளாதாரத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்தும். சிலருக்கு திடீர் அதிர்ஷ்டம் கிடைக்கும்.

### பணியாளர்களுக்கு

உழைப்பிற்கு தகுந்த ஊதியம் கிடைக்கும் உண்மை, உழைப்பு, உயர்வு என்ற நிலையில் எதையும் நேர்மையாக இருக்க வேண்டுமென்று எண்ணுவீர்கள். விவசாயம் சார்ந்த தொழிலாளர்களுக்கு நன்மையான பலன்கள் கிடைக்கும்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொதுவாழ்வில் மற்றவர்களுக்கு உதவுவதில் எதையும் மறைக்காமல் செய்வீர்கள். அரசாங்க சலுகைகளும் ஆதரவும் நல்ல பலன்களை பெற்று தரும். புத்திசாலிகளை உருவாக்கப் பாடுபடுவீர்கள்.

### வியாபாரிகளுக்கு

தொழில் ஸ்தானத்தில் புதன் அமர்ந்து வியாபாரத்தில் நல்ல யுத்திகளை கையாண்டு விற்பனையைப் பெருக்கி கொள்ளும் வாய்ப்புகளை தருவார். இரும்பு, வாகனம் சார்ந்த விற்பனையில் நல்ல ஆதாயம் பெறுவீர்கள். தொலை தூர பயணம் நல்ல பலனை தரும். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினர்எதிர்பார்த்த வாய்ப்புகள் தாமதமாக கிடைக்கும். வெளிப்படையான விடயங்களில் உங்களை மேம்படுத்திக் கொள்வீர்கள். ஊக்கமும், ஆக்கமும் கொண்டு செயல்படுவீர்கள். பொருளாதார வளர்ச்சி பெறுவீர்கள்.

### பெண்களுக்கு

தன்னை பற்றி தெரிந்து கொள்வதை விட பிறரை பற்றி நிறைய தெரிந்து கொள்ளும் ஆற்றல் பெறுவீர்கள். அதிகம் பேசாமல் காரியத்தில் கவனமாக இருந்து செயல்படுவீர்கள். சுய தொழில் சிறப்பாக அமையும். பொருளாதாரம் பெருகும்.

### மாணவர்களுக்கு

கல்வியில் முன்பைவிட முன்னேற்றம் உண்டாகும். அறிவியல், தொழில் நுட்பம், சிவில் கல்வி நன்றாக அமையும். எதிர்கால சந்ததிகளின் வாழ்க்கை மேன்மை பெறும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

29.02.2016 திங்கள் மாலை 3.30 முதல் 02.03.2016 புதன் இரவு 01.18 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

#### அசுபதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

நினைத்த விடயத்தை குறித்த காலத்தில் செய்து முடிப்பீர்கள். தொழிலில் சில எதிர்ப்புகள் இருந்தாலும் உங்களுக்கு பாதிப்பை தராது. வேற்று மொழிக்காரர்களால் ஆதாயம் கிடைக்கும்.

#### பரணி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

பணியாளர்களின் பணியில் சில மாற்றங்கள் உண்டாகும். எதிர்ப்புகளை சாதாரணமாக எடுத்துக் கொள்வீர்கள். உங்களின் எண்ணத்தை செயல்படுத்தி காட்டுவீர்கள்.

#### கார்த்திகை 1ஆம் பாதம்

அன்னிய மக்களின் ஆதரவு உங்களுக்கு நல்ல பலனை தரும். அரசு சார்ந்த வேலைகள் சீக்கிரம் முடியும். பொதுநல காரியங்களில் உங்களின் ஈடுபாடு பாராட்டும்படி அமையும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** ஆரஞ்சு, வெண்மை, மஞ்சள்

**அதிர்ஷ்ட திசைகள்:** கிழக்கு, வடமேற்கு, தென்மேற்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்:** திங்கள், வெள்ளி, வியாழன்

### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

ஞாயிறு மாலை 04.30 முதல் 06.00 மணிக்குள் சிவன் கோவிலில் பைரவரை வணங்கி நெய் விளக்கு போட்டு சிவனை வணங்கி வர சகல காரிய அனுகூலங்களும் கிட்டும்.

### மனவளமும் மண்வளமும்



தவம் செய்வதற்கு முதலில் தேவைப்படுவது, தவம் செய்வதற்கேற்ற நல்ல மனம் தான். அத்தகைய "மனம்" இருந்தால் மார்க்கம் உண்டு. மண்வளம் பயிரின் வளர்ச்சிக்குக் காரணமாவது போல், மனவளம் ஆன்மீக வளர்ச்சிக்குக் காரணமாகிறது.

# கடவுளை தரிசிப்பதால் உயர்வு நமக்கே!

வழிபாடு என்பது அவரவர் மனம் சம்பந்தப்பட்டது. இவ்வுடல் கடவுளால் நமக்கு, நமது கர்மபலன்களைப் போக்கிக் கொள்ளக் கொடுக்கப்பட்டது. இந்த உடலின் இயக்கம் உட்பட, அனைத்து இயக்கங்களுமே அவனால் தான் என்று அறிந்தவர்கள் அவரின் பக்தர்கள்.

கடவுளை நாம் தரிசிப்பதினால் நமக்குத்தான் உயர்வே தவிர, அவருக்கு அதனால் எந்த மாறுதல்களும் ஏற்படப்போவதில்லை. அவர், "நித்ய திருப்தன்". எப்போதும் திருப்தியாக இருப்பவர். "செய்யச் செய்யச் சிறப்பு என்பார்கள். ஆதலால், இவ்வுடல் அனைத்தும் அவனுடையதே என்ற அர்ப்பணிப்பு புத்தியுடன், எவன் ஒருவன் தன்னுடைய மெய்யை வருத்தி கடவுளுக்கு அர்ப்பணிக்கிறானோ, அதனால் அவன் பெறக்கூடிய பலன்களும் உயர்ந்தவையாகவே இருக்கும்.

பொருள் விரயம் என்று எவன் ஒருவன் கடவுளின் காரியத்தில் நினைக்கிறானோ, அவன் நஷ்டத்தையே அடைவான். எப்படி ஒரு விதை விதைத்தால் அது பன்மடங்காகப் பெருகுகிறதோ, அதேபோன்று கடவுளுக்கு அர்ப்பணிக்கப்படும் பொருளும் நமக்குப் பன்மடங்காகப் பெருகும்.

இவை எல்லாவற்றையும் விட தாங்கள் ஒருமுறை எல்லாம்வல்ல கலியுக வரதன் ஐயப்பனை, அவன் அருளாட்சி புரிந்து வரும், சபரிமலைக்கு சென்று தரிசித்து வாருங்கள். அங்கு தங்களுக்கு ஏற்படக்கூடிய அனுபவம் வேறு எங்கும் கிடைக்காது.

இங்கிருக்கும் ஐயப்பனின் ஆலயங்கள், வயதானவர்களோ, பெண்களோ அல்லது உடல்நலம் முடியாதவர்களோ நேரில் சென்று தரிசிக்க முடியாதவர்களுக்காகக் கட்டப்பட்டது மூல மூர்த்தியை, முழு நம்பிக்கையுடன் நமது உடலை வருத்தி நாம் சென்று வழிபடுவோமானால், அதனால் ஏற்படக்கூடிய பலன்களும் அனுபவமும் மிக உயர்ந்தவையாகவே இருக்கும்.

## தன்னை அறிதல்!

தன்னை அறிதல் என்பது, தன்னுள் இருக்கும் இறைவனை அறிவதைக் குறிப்பிடுகிறது. முழுமையான தியான உணர்வு உடையவர் களால்தான் தன்னை அறிய முடியும். தன்னைஅறியும் அறிவே உண்மையறிவு அல்லது மெய்யறிவு மற்ற அறிவுகள் அனைத்தும் பொய்யறிவு.







மன்மத ஆண்டு


# மாசி மாதத்து சுபதினங்கள்

திருமணம், வாசல் கால் வைக்க, கிரக ஆரம்பம், கடன் வாங்க, புது வாகனம் வாங்க, தொழில் துவங்க, மாங்கல்யம் செய்ய உகந்த நாட்கள்



| மாதம் | கிழமை | திதி | நட்சத்திரம் | யோகம் | காலை | லக்னம் | பிறை |
|---|---|---|---|---|---|---|---|
| பெப்ரவரி 17 | புதன் | தசமி | மிருகசீரிடம் | சித்த | 06.00 07.30 | கும்பம் | வளர் |
| பெப்ரவரி 19 | வெள்ளி | துவாதசி | புனர்பூசம் | சித்த | 08.00 09.00 | மீனம் | வளர் |
| பெப்ரவரி 26 | வெள்ளி | சதுர்த்தி | ஹஸ்தம் | அமிர்த | 08.00 09.00 | மீனம் | தேய் |
| மார்ச் 06 | ஞாயிறு | துவாதசி | உத்திரட்டாதி | அமிர்த | 07.00 08.00 | மீனம் | தேய் |
| மார்ச் 10 | வியாழன் | துவிதி | உத்திரட்டாதி | சித்த | 09.00 10.00 | மேசம் | வளர் |
| மார்ச் 11 | வெள்ளி | திருதியை | ரேவதி | சித்த | 09.00 10.00 | மேசம் | வளர் |

## சத்திர சிகிச்சை செய்து குழந்தை எடுக்க



| திகதி | கிழமை | ராசி | நேரம் காலை |
|---|---|---|---|
| பெப்ரவரி 12 | சனி | கும்பம் | 07.15 08.00 |
| பெப்ரவரி 16 | செவ்வாய் | கும்பம் | 07.00 08.00 |
| பெப்ரவரி 17 | புதன் | கும்பம் | 06.30 07.30 |
| பெப்ரவரி 19 | வெள்ளி | கும்பம் | 06.30 07.30 |
| பெப்ரவரி 20 | சனி | கும்பம் | 06.30 07.30 |
| பெப்ரவரி 23 | செவ்வாய் | மிதுனம் | மாலை 02.00 03.00 |
| பெப்ரவரி 25 | வியாழன் | கும்பம் | காலை 06.00 07.00 |
| மார்ச் 01 | செவ்வாய் | கும்பம் | காலை 06.00 07.00 |
| மார்ச் 06 | ஞாயிறு | கும்பம் | காலை 06.00 06.30 |
| மார்ச் 07 | திங்கள் | மிதுனம் | காலை 08.00 09.00 |
| மார்ச் 10 | வியாழன் | மிதுனம் | மதியம் 01.00 02.00 |
| மார்ச் 11 | வெள்ளி | மிதுனம் | மதியம் 12.30 01.30 |
| மார்ச் 12 | சனி | மிதுனம் | மதியம் 12.30 01.10 |

## கிரக பிரவேசம்

| | | |
|---|---|---|
| பெப்ரவரி 17 | புதன் | அதிகாலை 06.00 07.00 |
| பெப்ரவரி 19 | வெள்ளி | அதிகாலை 06.00 07.00 |
| பெப்ரவரி 26 | வெள்ளி | அதிகாலை 06.00 07.00 |
| மார்ச் 06 | ஞாயிறு | அதிகாலை 05.00 06.00 |
| மார்ச் 10 | வியாழன் | அதிகாலை 05.00 06.00 |
| மார்ச் 11 | வெள்ளி | அதிகாலை 05,00 06.00 |

## சாந்தி முகூர்த்தம்


| | | |
|---|---|---|
| பெப்ரவரி 17 | புதன் | இரவு 09.00 10.00 |
| பெப்ரவரி 19 | வெள்ளி | இரவு 08.00 09.00 |
| பெப்ரவரி 24 | புதன் | இரவு 08.30 09.30 |
| பெப்ரவரி 26 | வெள்ளி | இரவு 08.00 09.00 |
| மார்ச் 03 | வெள்ளி | இரவு 08.00 09.00 |
| மார்ச் 06 | ஞாயிறு | இரவு 11.00 12.00 |
| மார்ச் 10 | வியாழன் | இரவு 12.00 01.00 |
| மார்ச் 11 | வெள்ளி | இரவு 11.00 12.00 |

## கடன் தீர்க்க


| | | |
|---|---|---|
| பெப்ரவரி 16 | செவ்வாய் | 12.00 01.00 |
| பெப்ரவரி 20 | சனி | 12.00 01.00 |
| பெப்ரவரி 26 | வெள்ளி | 01.00 02.00 |
| மார்ச் 01 | செவ்வாய் | 12.00 01.00 |
| மார்ச் 03 | வியாழன் | 12.00 01.00 |
| மார்ச் 06 | சனி | 12.00 01.00 |
| மார்ச் 12 | சனி | 12.00 01.00 |

## வாஸ்து நாள்

மார்ச் 22 சனி காலை
10.45 11.15 வரை



கணிப்பு: சோதிடர் வாடிப்பட்டி R.ஆனந்தன்



# மானுடத்தை மாண்புடையதாக்கும் மகா சிவராத்திரி!

அண்டசராசரங்களும் சிவனாகவே இருந்தும் சிவனை நினைக்கவென, சிவனாலேயே விரும்பப்படும் ஒரு ராத்திரி, உலகம் முழுவதும் உள்ள சைவர்களின் முக்கியத்துவம் நிறைந்த ஒரு ராத்திரி புராணங்களிலும் இதிகாசங்களிலும் வெகுவாகச் சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கும் ஒரு ராத்திரி, அதுவே மகாசிவராத்திரி ஆகும்.

மாதந்தோறும் சிவராத்திரிகள் நம்மை வழமையாய் கடந்து சென்ற வண்ணமே இருக்கின்றன. மாதந்தோறும் அமாவாசை நாளில் இருந்து வரும் 14ஆவது திகதியன்று சிவராத்திரி அல்லது பிரதோஷ நாட்களாக வழிபடப்பட்டு வரப்படுகிறது. ஒவ் வொரு மாதமும் கிருஷ்ணபட்ச தினத்தை இந்த தினமாகக் கடைப்பிடிக்கிறோம். ஆயினும், மாசி மாதத்தில் வரும் சிவராத்திரியே சிவனாருக்குப் பெரிதும் உகந்த மகா சிவராத்திரியாக மலர்கிறது. இந்த நாளின் சிறப்புகள் குறித்து கருட புராணம், கந்தபுராணம், பத்ம புராணம், அக்னி புராணம் உள்ளிட்ட பல்வேறு நூல்களிலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

அது ஒரு பிரளய காலம். பிரம்மனும் அவரால் சிருஷ்டிக்கப்பட்ட அனைத்து ஜீவராசிகளும் அழிந்துவிட்ட நிலையில், இரவுப் பொழுதில், உமா தேவி, பரமேஸ்வரனை நினைத்து பூஜை செய்தார். நான்கு ஜாமங்களிலும் இரவு முழுவதும் ஆகம விதிப்படி அர்ச்சனை செய்தார். பூஜையின் முடிவில் அம்பிகை ஈஸ்வரனை வணங்கி அடியேன் தங்களைப் பூசித்த இந்த இரவை தேவர்களும் மனிதர்களும் தங்கள் திருநாமத்தாலேயே அதாவது சிவராத்திரி என்றே கொண்டாட வேண்டும் என்று வேண்டினார். சிவராத்திரி அன்று சூரியன் மறைந்தது முதல் மறுநாள் காலை சூரியன் உதயமாகும் வரை தன்னை பூஜை செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு எல்லா விதமான பாக்கியங்களையும் தந்து முடிவில் மோட்சத்தையும் அளிக்க வேண்டும். அருள் புரியுங்கள் என்று இறைவியானவள் வேண்டிக்கொண்டார். சிவபெருமானும் அப்படியே ஆகட்டும் என்று கூறி அருள் புரிந்தார். அந்த இரவே சிவராத்திரி என வழங்கப்பட்டு அனைவராலும் கொண்டாடப்படுகிறது.

சிவராத்திரிக்கு முதல் நாள் ஒரு வேளை மட்டுமே உணவு உண்ண வேண்டும். சிவராத்திரி அன்று அதிகாலையிலேயே எழுந்து குளித்து விட்டு, சூரிய உதயத்தின்போது காலையில் வீட்டில் செய்ய வேண்டிய பூஜையை முடிக்க வேண்டும். அதன் பின் சிவன் கோவிலுக்குப் போய் முறைப்படி தரிசனம் செய்ய வேண்டும். பூஜை செய்யும் இடத்தை மலர்களால் அலங்கரித்து நண்பகலில் குளித்து மாலையில் சிவார்ச்சனைக்கு உரிய பொருட்களோடு சிவன் கோவில் சென்று ஏற்பாடுகளைச் செய்யலாம். மாலையில் மீண்டும் குளித்து வீட்டில் சிவபூஜை செய்ய வேண்டும். வீட்டிலேயே இரவின் நான்கு ஜாமங்களிலும் முறைப்படிப் பூஜை செய்தலும் நலம். வில்வ இலைகளால் அர்ச்சனை செய்தல் கூடுதல் உத்தமம்.


சிவராத்திரி தினத்தன்று முழு உபவாசத்தைக் கடைப்பிடித்தால் எம்பெருமான் வாழ்நாள் முழுவதும் காப்பாற்றுவதுடன் மகிழ்ச்சியையும் வாழ்வில் முன்னேற்றத்தையும் அளிப்பார் என்பது ஐதீகம். தவிர மகா சிவராத்திரி விரதம் இருப்போருக்கு நற்கதி கிடைப்பதுடன் இப்பூத உடல் மடிந்த பின் சொர்க்கத்தையும் இறைவன் அளிப்பான் என்பதே பின்னணித் தத்துவம். இத்தனை மகத்துவமிக்க இப்புனித தினத்தன்று சிவனை நினைந்து, நம் மக்களனைவரினது சுபீட்சத்துக்காகவும், மூலவனைத் தொழுது வழி படுவோமாக!

நவநீதம்



# புனிதநாளாய் போற்றப்படும் மாசி மகத்திருநாள்!

இந்து சமயத்தவர்களிடத்தும் சகல சோதிட அபிமானிகளிடத்தும் பெரும் எதிர்பார்ப்பையும் மகத்துவத்தையும் கொண்டது மாசி மாதத்தின் மகம். ஆண்டுதோறும் சந்திரபகவான் மகத்தில் பிரவேசிக்கும் அந்நாளை மாசி மகம் என்று சிறப்பித்துக் கொண்டாடுகிறோம்.



மாசி மாதத்தில் வருகின்ற மக நட்சத்திரத்தோடு கூடிய புண்ணிய காலமே மாசி மகம் என அழைக்கப்படுகின்றது. முன்னொரு காலத்தில் அதர்ம வழியில் கோலோச்சிய, கொடுஞ்செயல்கள் பலவும் புரிந்த அரசன் ஒருவன் இருந்தான். அரசனுடைய குருவானவர். அரசனின் தீய செயல்களைப் பொறுத்துக் கொள்ள இயலாதவராய், அரசனை வெல்லுவதற்கான உபாயத்தை வருண தேவனிடத்தில் எடுத்துரைக்க இருள் நிறைந்த நேரத்தில் சென்றார். வருவது பகைவரோ என்றெண்ணிய வருணன் கொஞ்சமும் சிந்திக்காது பாணத்தை அவர்மேல் வீசியெறிய குரு அவ்விடத்திலேயே மாண்டு போனார். பாவமேதும் புரியாத குரு கணப்பொழுதில் வருணனால்தவறுதலாய் கொல்லப் பட்டவுடன் அக் கொலைப் பாவத்தின் பயனாய் ஒரு கொடிய பிசாசு தோன்றியது. அது வருணனை இரண்டு கால்களையும்,இரண்டு கைகளையும் கழுத்தோடு இணைத்துக் கட்டி சமுத்திரத்துக்குள்ளே தள்ளிவிட்டுச் சென்று விட்டது.

கைகால்கள் கட்டப்பட்ட துன்பமான நிலையில் சமுத்திரத்திலேயே வருணன் நெடுங்காலம் கஷ்டம் அனுபவித்துக்கிடந்தான். இதனையறிந்த மண்ணுலகத்தவரும் விண்ணுலகத்தவரும் வருணனின் துன்பத்தை நீக்கியருளும்படி சிவபெருமானை நோக்கி வேண்டிக் கொண்டனர். சிவபெருமானும் இவ் வேண்டுதலுக்கு இயைந்து, துயர வெள்ளத்தில் மூழ்கியிருந்த வருணனை கட்டவிழ்த்து விடுவித்தருளினார்.

விடுதலை பெற்றெழுந்த வருணன் சிவபெருமானை வணங்கி அண்ட சராசரங்களையும் ஆதரவளித்துக் காக்கின்ற லோகநாயகரே, எனக்குத் திருவருள் புரிந்த மாசி மகமாகிய இத்தினத்திலே, இத்துறையில் நீராடினவருடைய பாவத்தை நீக்கி



முக்தியைக் கொடுத்தல் வேண்டும். தேவரீரும் அத்தருணத்தில் இத்துறையில் எழுந்தருளுதலும் வேண்டும் எனப் பிரார்த்தித்து வரங்களைப் பெற்றான்.

சிவபெருமான் வருணனின் வருத்தத்தைப் போக்கிய இச்சரித்திரத்தைப் பற்றி வியாக்கிரபாத முனிவர் இரணியவர்மச் சக்கரவர்த்தியிடம் விவரித்துக் கூறினார். அடுத்தாற் போல் வந்திட்ட மாசி மக தினத்தன்று சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் நடராஜப்பெருமானுக்குக் கொடியேற்றுவித்தான் இரணியவர்மன். தேவர்கள், முனிவர்கள் முதலானோர் வந்து மாசி மக விழாவைத் தரிசித்துக் கனக சபைக்குத் தலைவரே, அருள் பாலிக்க வேண்டுமென, வேண்டிக் கொண்டனர்.

தேவர்கள் சிவபெருமான் சமுத்திரத்துக்கு எழுந்தருளும் வழியினை அலங்காரம் செய்தார்கள். சிவபெருமான் சமுத்திரத்துக்கு, வருணனுக்குக் கொடுத்த வரத்தின்படி அனைவரும் மகிழ்துய்யும்படியும் எழுந்தருளினார். தில்லையம்பலத்துச் செம்மலை வருணன் எதிர்கொண்டு வணங்கி நின்றான். இறையனாரும் வருணன் பாசத்தை நீக்கியருளிய துறையிலே திருமஞ்சனமாடி அடியார்களுக்கு அனுக்கிரகித்து கனகசபையினுள்ளே புகுந்தருளினார்.

சிதம்பரத்துப் பத்துத் தீர்த்தங்களுள் வருணனின் பாசமறுத்த துறையும் ஒன்றாகும். சிதம்பரத்திலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் இத்துறை அமைந்துள்ளது. மாசி மக தினத்தில் இத்துறையினில் தீர்த்த உற்சவம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. 'மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக் கடலாட்டுக் கண்டாள்..'. எனத் திருஞான சம்பந்தப் பெருமான் பாடியிருப்பதும் மாசி மக தினத்தின் மகிமையைப் பெரிதும் விளக்குவதாக அமைந்துள்ளது.

உமையம்மை தக்கனுக்கு மகளாய், வலம்புரி சங்குருவில் வந்தவதரித்ததும் மாசி மக தினத்தில் தான். இறைவியே குழந்தையாய் வந்த இத்தினம் மகிமை பொருந்திய மாசி மகமாயிற்று. பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை இத்தினத்தில் வருகின்ற புண்ணிய நாளே மாமாங்கம் எனப்படும். இது ஒரு மிகப் பெரிய தீர்த்தத்திரு விழாவாகும். இவ்விழா மகாமகம் என்றும் அழைக்கப்படுகின்றது.

கும்பகோணம் நகரின் நடுவில் அமைந்துள்ள இந்தத் தீர்த்தக் குளத்திற்கு மகாமகக் குளம் என்றும் மாமாங்கக்குளம் என்றும் பெயர்கள் உள்ளன. சப்த தீர்த்தங்களாகிய கோதாவரி, காவிரி, யமுனை, கங்கை, தாவி, பொற்றாமரை, புட்சரணி தெண்ணீர், கோவிளயாடு, குமரி ஆகிய புண்ணிய நதிகள் இப்புண்ணிய காலத்தில் இம்மகாமகக் குளத்தில் வந்து தங்குவதாக புராணங்கள் கூறுகின்றன. இவ்வொன்பது நதி களும் மகாமகத்தன்று மாமாங்கக் குளத்தில் வந்து மூழ்கி தங்கள் பாவங்களைக் கழுவிக் கொள்கின்றன என்பது ஐதீகம். இப்பூவுலகில் வாழுகின்ற மக்களும் இப்பெரும் பேற்றினைப் பெற்ற மாமாங்கக் குளத்தில் மூழ்குவார்களாயின், இம்மையிலும் மறுமையிலும் நற்பேறு பெற்றிட இறைவன் திருவருள் கிடைக்கப் பெறுவார்கள் என்பது திண்ணம். மாசி மகத்தில் புனித தீர்த்தமாடினால் பாவங்கள் தொலையும், புண்ணியங்கள் தழைக்கும். பூலோகத்தை விட்டகன்ற நம் முன்னோருக்கான தர்ப்பணம், பிதுர்க்கடன் என்பவற்றைச் செய்தால், அவர்களின் ஆத்மா முக்திப்பேறு பெறும் என்பார்கள்.

ஒத்தகடைராமன்



## ஆன்மீகப் பயணத்தின் முடிவே இறைவன்

சொல், செயல், சிந்தனையால் நாம் எதனோடு சேர்கிறோமோ அதன் மயமாக ஆகிறோம். கடலை எட்டும் நதிதான் கடலாக ஆகும். அதுபோல் இறைவனை நாடுபவர்களே இறைவன் ஆகிறார்கள். கொடி, மரத்தை நோக்கிப் படர்வது, ஜீவன் இறைவனை நாடிச் சென்று படர வேண்டும். ஆன்மீகப் பயணம் சென்று முடியும் இடம் இறைவன்.



# தேகம் என்பது ஒரு மகா இயந்திரம்

தேகம் என்பது ரொம்ப இழிவானது. அதிலிருந்து கிளப்ப வேண்டும் என்று பெரியவர்கள் பாடி வைத்திருப்பதெல்லாம் உண்மைதான். ஆனால் இன்னொரு நிலையில் பார்த்தால் இந்த தேகம் என்பது ஒரு மகா அற்புதமான மெஷினாக இருக்கிறது. ஒரே மெஷினில் ஒவ்வொரு பாகம் ஒவ்வொரு தினுசாக காரியத்தைச் செய்கிறது. கண் என்று ஒன்று வெளிச்சத்தையும், வர்ணங்களையும் பார்க்கிறது. காது என்று ஒன்று சப்தங்களைக் கேட்கிறது. இருக்கிறதெல்லாம் ஒரே ஆத்மா. இத்தனை அவயங்களுக்குள்ளேயும் ஒரே ஜீவன்தான் இருக்கிறது என்றாலும் கண்ணும், காதும் கிட்டக்கிட்ட இருந்தும் கூட கண்ணால் கேட்க முடிவதில்லை. காதால் பார்க்க முடிவதில்லை பக்கத்திலேயே வாய் என்று ஒன்று அதற்குத்தான் ருசி தெரிகிறது. பேசுகிற சக்தியும் அதற்கே இருக்கிறது. தொண்டையில் பல தினுசாகக் காற்றைப் புரட்டி அழகாகக் கானம் செய்ய முடிகிறது. பல வாஸ்துகளைப் பிடிப்பதற்கு ஏற்றமாதிரி கையும் விரல்களும் அமைந்திருக்கின்றன. இந்த அமைப்புக் கொஞ்சம் வேறு விதமாக இருந்தாலும், இப்போது நாம் பண்ணுகிற காரியங்களைப் பண்ண முடியாது.

அடி எடுத்து வைத்து மேலே போவதற்கு வசதியாக காலின் அமைப்பும் இருக்கிறது. நடக்கிறபோது கூடிய மட்டும் ஜீவராசிகள் நசுங்காதபடி பூரான் மாதிரியானவற்றின் மேலேயே நாம் பாதத்தை வைத்தால் கூட அவை நெளிந்து கொண்டு ஓட உள்ளங்காலில் கழி வைத்தாற் போல் ஏற்பாடு. சப்பணம் கட்டி உட்கார வசதியாக முழங்காலில் நரம்புகளின் அமைப்பு என்று இப்படி ஒவ்வொன்றைப் பார்த்தாலும் பராசக்தி எத்தனை சூட்சுமமான கற்பனையோடு ஒரு சரீரத்தைப் பண்ணி இருக்கிறாள் என்று ஆச்சரியமாக இருக்கிறது. ஆகாரத்தை செரிக்க ஓர் அங்கம், செரித்ததை ரத்தமாக்க ஓர் அங்கம், மூச்சு விட ஒன்று ரத்தத்தைப் பம்ப் பண்ண ஒன்று எல்லாவற்றுக்கும் மேலே சகல காரியங்களையும் டைரக்ட் பண்ணி, கண்ட்ரோல் பண்ணும் மூளை என்றெல்லாம் விசித்திரமாகப் பகவான் சரீரத்தைக் கல்பித்திருக்கிறார்.

சதை, ரத்தம், மஸில்ஸ், நரம்பு, எலும்பு என்று ஒவ்வொன்றும் ஒரு "பாபஸ்" இருக்கிறது. எலும்புக்குள்ளே கூட "மஜ்ஜை" என்ற ஜீவசத்து ஓடுவது ஓர் அதிசயம். மனித சரீரத்தில் இருக்கும் கோடிக்கணக்கான செல்களில் ஒவ்வொன்றும் ஓர் அற்புதலோகம்.

இப்படித் தனித்தனியாக ஒவ்வொரு பாகமும் ஓர் அற்புதமான மெஷினாக இருப்பதோடு மட்டுமல்லாமல், எல்லாமாக ஒன்றுக்கொன்று இசைவாக சகாயம் செய்து போஷித்துக் கொள்வதும் மகா அதிசயமாக இருக்கிறது.

ஆனாபடியால் எவனோ லட்சத்தில் ஒருவன் தேகம் பொய், மனஸ் பொய் என்று ஞானியாக ஆகிறவன் ஆனாலும், பாக்கி எல்லாரும் பகவான் தந்திருக்கிற இந்த அற்புதமான மெஷினை வைத்துக் கொண்டு தர்மமாக வாழத்தான் முயற்சி பண்ண வேண்டியவர்களாக இருக்கிறோம்.

கவிஞர் கண்ணதாசன்

மன்மத ஆண்டு மாசி மாதம்

13.02.2016 முதல் 13.03.2016 வரை




தன் தேவைகளை கருத்தில் கொண்டு செயல்படும் ரிஷபராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு குரு பார்வை படுவதுடன் ராசியை சனி பார்வை இடுவதும் முன்னேற்றமான வழிகளை ஏற்படுத்தி தரும் தொழில் ஸ்தானம் அதிக பலம் பெறுவதும் உங்களுக்கு தொழில் வாய்ப்புகளை பெற்று தரும்.

**பணியாளர்களுக்கு**

இடர்களை கடந்து வளமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள பல வழிகளில் யோசித்து செயல்படுவீர்கள். தொழிற்கூடங்களில் முன்பை விட பணிகளின் வளர்ச்சியும் பொருளாதார ஏற்றமும் கிடைக்கும். சுயநலம் கலந்த பொதுநல சேவைகளை செய்வீர்கள்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

எதையும் முன் யோசனையுடன் செய்வீர்கள். எதிலும் கவனமும், அவசரமும் இருக்கும். குறித்த காலத்தில் செய்து முடிக்க வேண்டுமென்று எண்ணம் வெளிப்படும் பொது கருத்தில் ஆழமான விடயங்கள் இருக்கும். பொருளாதாரத்தில் தன் நிறைவு இருக்கும்.

**வியாபாரிகளுக்கு**

அன்றாடம் விளையும், அழியும் பொருட்களுக்கு அதிக எதிர்பார்ப்பு இருக்கும். செய்யும் தொழிலில் நீங்கள் முழுமையான நம்பிக்கையை வைப்பீர்கள். அன்னியரின் உதவியும், ஆதரவும் வியாபாரத்தில் புதிய வரவுகளை உருவாக்கும். தீவிரமான முய்ற்சிகளால் நல்ல பலனை பெறுவீர்கள்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினர் சில நேரம் வேலை வாய்ப்புகள் இல்லாமல் இருந்தாலும் உங்களின் தேவைகள் நிறைவேறும். இரவு நேர நிகழ்ச்சிகளில் பங்கு பற்ற வேண்டியதிருக்கும். தொலை தூர பயணம் மேற்கொள்வீர்கள்.

**பெண்களுக்கு**

பெண்களின் சுயதொழிலில் சற்று அதிக கவனம் செலுத்த வேண்டி வரும். கணவன் மனைவி உறவில் அடிக்கடி சிறு சர்ச்சை உண்டாகும். பொருளாதார நிலையில் பெரிய மாற்றம் இருக்காது.

**மாணவர்களுக்கு**

கல்வியில் வளர்ச்சி பெறுவீர்கள். உயர் கல்வி வாய்ப்புகளுக்கு சிலரின் சிபாரிசுகளை பெற வேண்டி வரும். எலக்டிரிக்கல், இலத்திரனியல் தொழில் நுட்ப கல்வி சிறப்பாக அமையும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

02.03.2016 புதன் இரவு 01.19 முதல் 05.03.2016 சனி காலை 06.38 மணி வரை

**நடசத்திர பலன்கள்.**

**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள்**

விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் உங்களுக்கு ஊக்கத்தையும், ஆக்கத்தையும் தரும். வரவுக்கு தகுந்த வியாபார யுக்திகளை பெறுவீர்கள். கொடுத்த கடனை வசூல் செய்ய பல முறை சென்றால் வசூலாகும்.

**ரோஹிணி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

செயல்பாடுகளில் உண்மை இருந்தாலும் உங்களை பலமுறை கேள்வி கேட்ட பின் தான் எதையும் ஒத்துக்கொள்வார்கள். பொருளாதார வளர்ச்சி வரவுக்கும் செலவுக்கு உகந்ததாக இருக்கும்.

**மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

சகோதரரின் மூலம் தடைப்பட்ட சில காரியம் நடைமுறைக்கு வரும். காத்திருந்த பல நாட்கள் அலைச்சலை தந்த விடயம் இனி நடைமுறைக்கு வரும். வாகனம் சார்ந்த தொழில் நன்றாக இருக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** பழுத்த வெண்மை, நீலம், இளம்பச்சை

**அதிர்ஷ்ட திசைகள் :** தெற்கு, தென்கிழக்கு, வடக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள் :** வெள்ளி, புதன், ஞாயிறு

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

வெள்ளி, செவ்வாய்க்கிழமை ராகு காலத்தில் அம்மன் வழிபாடு செய்து நெய் விளக்கு போடவும். சனிக்கிழமைகளில் நந்தியையும் சிவனையும் வணங்கி வர சகல காரியத்திலும் வெற்றியை பெறுவீர்கள்.



**வினைப் பயன்**

மனிதன் ஈட்டும் நல்வினைகளே அவனைக் காக்கும் கவசங்களாக விளங்குகின்றன. மனிதன் செய்யும் தீவினைகளோ அவனை அதலபாதாளத்தில், கடுநரகத்தில், மீளாத்துயரத்தில் ஆழ்த்துகின்றன.



# ஞான மார்க்கத்தின் தந்தையாய் போற்றப்படும் ஸ்ரீ ரமண மகரிஷி

தமிழகத்தை சார்ந்த ஆன்மீக செம்மல் ஸ்ரீரமண மகரிஷி அத்வைத வேதாந்த நெறிகளை தமிழகமெங்கும் பரப்பினார்.


ரமணரின் முக்கியமான உபதேசமாக "தன்னையே தான் அறிந்து கொள்வது" என்னும் ஆன்ம விசாரமாகும். ஞான மார்க்கத்தில் இதுவே முக்தி பெறுதலுக்கான வழியாகவும் கருதப்படுகின்றது. ரமண மகரிஷியின் உபதேசங்களில் உபநிடதங்கள் மற்றும் அத்வைத வேதாந்த நெறிகளின் சாரம் அனைத்தையும் காணலாம். இவரது உபதேசங்களின் தொகுப்பாக "நான் யார்" என்ற புத்தகம் முதன்மை பெற்று விளங்குகின்றது.

தமிழ்நாட்டில் விருதுநகர் மாவட்டத்தில் திருச்சுழி என்னும் ஊரில் ஒரு எளிய பிராமண குடும்பத்தில் 1879ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ஆம் திகதி சுந்தரம் ஐய்யர் மற்றும் அழகம்மாள் தம்பதியருக்கு மகனாக அவதரித்தார் ரமண மகரிஷி. இவரது இயற் பெயர் வேங்கடராமன் என்பதாகும். இவர் மதுரையின் ஸ்காட் நடுநிலை பள்ளியில் கல்வி பயின்றார்.

சிறு வயது முதலே இவருக்கு ஆன்மீக விடயங்களில் அதிகப்படியான நாட்டம் இருந்து வந்தது. ஒரு முறை இவரது இல்லத்திற்கு வருகை தந்த திருவண்ணாமலையை சார்ந்த பெரியவர் ஒருவரின்

வாயிலாக புண்ணியத் தலமான திருவண்ணாமலை பற்றியும் அருணாசலேஸ்வரர் ஆலயத்தைப் பற்றியும் கேட்டு அறிந்து கொண்டார். பின் வந்த நாட்களில், பெரிய புராணம் போன்ற ஆன்மீக நூல்களை பயின்று இறையடியார்கள் மீதும் இறைவனை பற்றி அறிந்து கொள்வதிலும் நாட்டம் மிக கொண்டார். இதைத் தொடர்ந்து மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்திற்கு அடிக்கடி சென்று வரும் பழக்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டார்.

ரமணருடைய 17ஆவது வயதில், மதுரையிலிருந்த அவரது சித்தப்பா வீட்டிற்கு சென்ற போது, ஒரு நாள் திடீரென மரணம் பற்றிய அனுபவம் அவ ருக்கு கைகூடிற்று. அதன் பயனாக



மரணிப்பது என்பது என்ன, மரணிப்பது உடல் மட்டுமே என்னும் தத்துவ ரீதியான உண்மைகளை உணர்ந்து கொண்டார். இப்பூவுலகில் உடல் சில நாள் தங்கி மரணித்த பின் வேறு உருக்கொண்டு வருகின்றது.

அந்த உடலின் உள்ளே இருக்கின்ற ஆன்மா வானது ஒரு போதும் அழிவதில்லை என்றும் இந்த ஆன்மாவே எல்லாம் வல்ல பரம்பொருளாய் இருக்க வேறொன்றும் இல்லாத நிலையில் எல்லாவற்றையும் ஸ்ரீ ரமணர் அறிந்து தெளிந்தார்.

இவ்வாறு தம் இளம் வயதிலேயே ஆன்மீக தெளிவினை பெற்ற ரமணர், தன் உற்றார் உறவினர் அனைவரையும் துறந்து விட்டு புகையிரதம் ஏறி திருவண்ணாமலையை வந்து அடைந்தார்.

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தில் சிறிது காலம் தியானம் செய்தார். ஆனால் அங்கு அமைதியாக தியானத்தை மேற்கொள்ளாதவாறு சிறு பிள்ளைகளின் விஷமத் தனங்கள் அவருக்கு இடையூறாக அமைந்தன.

இதைத் தொடர்ந்து ஆலயத்தின் அருகில் அமைந்துள்ள பாதாள லிங்கத்தின் அருகில் சென்று தியானத்தில் அமர்ந்தார். ரமணர் தன்னுடைய தியானம் அமைதியாகவும் தடையின்றியும் நடைபெற விருப்பாக்ஷி குகை, கந்தாசிரமம், பாலாகொத்து எனப்படுகின்ற பல இடங்களில் வாசம் செய்து தியானத்தை மேற்கொண்டார்.

கடைசியாக திருவண்ணாமலை அடிவாரத்தில் தங்கி தம்முடைய தியானத்தை தொடர்ந்தார். அந்த இடத்திலேயே ரமணாச்சிரமம் உருவானது. ரமணருக்கு அவருடைய ஆன்மீக சேவையில் தியானத்தில் பங்குபற்றுவதற்கு சீடர்கள் பலரும் முன் வந்தார்கள். இவரது சீடர்களில் மிக முக்கியமானவராக கருதப்படும் காவிய கண்ட கணபதி முனி என்கின்ற சமஸ்கிருத பண்டிதர் இவர் தான் ரமணருக்கு 'ரமண மகரிஷி' என்ற பட் டத்தைச் சூட்டினார்.

அதுவரையிலும் வேங்கடராமன் என்னும் திருநாமத்தை தாங்கியிருந்த அவரை மக்கள் அனைவரும் பிராமண சுவாமி என்றே அழைத்து வந்தார்கள். ரமணரின் முக்கியமான உபதேசமாக விளங்குவது "நான் யார்" என்னும் ஆன்ம விசாரமாகும். இதுவே ஞான மார்க்கத்தில் தன்னை அறிதலுக்கும் அல்லது முக்தி பெறுதலுக்கும் நோக்க மாக இருக்கின்றது.

ஜகத்குரு ஆதிசங்கரரின் ஆக்கமான "ஆத்ம போதம்" என்னும் நூலை தமிழில் வெண்பாக்களாக மாற்றி ரமணர் வழங்கியுள்ளார்.

தம் வாழ்நாள் முழுவதும் ஆன்மீக நெறிகளை திருவண்ணாமலை ஆசிரமத்தில் இருந்து கொண்டு மக்களுக்கு பரப்பி வந்தார் ரமண மகரிஷி. இவர் எப்போதுமே எளிமையை கடைப்பிடித்து மிகத் தூய்மையான ஆன்மீக வாழ்க்கையை கைக் கொண்டிருந்தார்.

உலக புகழ் பெற்ற ரமணர் ஆசிரமத்தை நிறுவிய ரமண மகிரிஷி 1950ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் நாள் முக்தி பெற்றார்.

• A.A.ராமன்

# தன்னிச்சையாக ஈ.எஸ்.பி. உணர்வுகள் தெரிய வரும்

நமது உணர்வு இல்லாமலேயே சில சமயம் உடம்பில் ஒரு நடுக்கம் வரலாம் கண் இமைகள் நம்மையறியாமலேயே படபடவென்று சில சமயம் மிக வேகமாகத் துடிக்கும்.

சில சமயம் வயிற்றில் பட்டாம்பூச்சி பறக்கும் உணர்வுகூட ஏற்படும். இத்தகைய அனுபவங்களை (Motor Automations) தன்னிச்சையாக இயங்குதல் என்பார்கள்.

உங்களுக்கு இது போலக் கண் இமைகள் படபடவென்று துடித்தாலோ அல்லது ஒரு கனமான சூட்கேசை கையில் தூக்கிக் கொண்டு போகும் போது சில சமயம் உங்களை அறியாமல் அல்லது கை நடுக்கம் ஏற்பட்டிருக்கலாம். இதைத்தான் தானியங்கி மோட்டார் சிஸ்டம் என்று மேலே குறிப்பிட்டுள்ளது.

இது உங்களை அறியாமலேயே ஏற்படுகிறது.


இதைக் கட்டுப்படுத்த எப்படி உங்களால் இயலும் ஒரு முக்கியமான பேட்டிக்கு சந்திக்கப் போகும் போது கூட இது போல் வயிற்றில் ஒரு பட்டாம் பூச்சி பறக்கிற உணர்வு ஏற்படும்.

பல தெய்வாம்சம் பெற்ற சைக்கிக்குகள் எனப்படும் (Psychics) தாந்திரீகர்கள் இது போன்று திடீரென்று நடுக்கம் வரும் போது எலும்புகளிலும் அவர்களது கைவிரல்களிலும் ஊசி குத்துவது போன்ற உணர்வுகள் தெரியும் என்கிறார்கள்.

சமீப காலத்தில் ஆராய்ச்சி செய்து பார்த்ததில் இரத்த அழுத்தம் கூட குறைந்தும் அதிகமாகியும் செயல்படுவதும் ஈ.எஸ்.பி. உணர்வுகளால்தான் என்கிறார்கள்.

இதுபோன்று தன்னிச்சையாக ஏற்படும் உணர்வுகளை அதாவது ஈ.எஸ்.பி. சிக்னல்களை (Signals) கையிலும் தோள்களிலும் பெண்டுலத்தை (Pendulum) பிடித்து பார்த்து மிகச் சுலபமாக உணரலாம்.

ஒரு சின்ன கனமான பெண்டுலத்தை 12 அங்குல கயிற்றில் கட்டித் தொங்கவிட்டு அதை பெருவிரல், ஆள்காட்டி விரல் ஆகிய இரு விரல்களால் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தால் ஈ.எஸ்.பி. சக்தி கைகள் வழியே பாய்ந்து பெண்டுதலத்தை அசைக்கும் நகர்த்தும் இந்த பெண்டுலத்தைத்தான் நிலத்தடி நீரைக் கண்டு பிடிக்க (Dowsers) அல்லது வாட்டர் டிவைனர்கள் உபயோகிக்கிறார்கள் படத்தைப் பாருங்கள்.




AB யை நோக்கி பெண்டுலம் அசைத்தால் "இல்லை"

CD மேலும் கீழுமாக அசைந்தால் "ஆம்".

இந்த படத்தில் உள்ளது போல ஒன்பது அல்லது ஆறு அங்குலத்துக்கு ஒரு வட்டம் வரைந்து கொள்ளவும்.

ஒரு பிரச்சினையை மனதில் எண்ணி அது சரியாகி விடுமா என்று கேட்டால்

பெண்டுலம் இடது வலதாக அசைந்தால் இல்லை என்று சொல்கிறது சரியாகாது என்று தெரிந்து கொள்ளவும்.

பெண்டுலம் மேலும் கீழுமாக அசைந்தால் "ஆம்" என்கிறது தீர்ந்துவிடுமா என்று கேள்விக்கு ஆம் என்று பதில் ஆகவே அந்தப் பிரச்சினை தீர்ந்து விடும்.

விஞ்ஞான ரீதியாக இதை ஆராயும் போது ஒரு சக்தியானது (cosmic consciousness) பிரபஞ்சத்தின் உணர்வானது நமது உள் மனதில் வந்து இணைகிறது. அதன் தன்மையை உணர்வால் அல்லது எண்ணத்தால் உணர்ந்து கொள்ளலாம்.

ஆனால் உள் மனத்தில் இருந்து வெளி மனதுக்கு இச்சக்தி உடனடியாகக் கிடைக்காது அதாவது உள் மனதுக்கு சக்தியானது பிரபஞ்சத் திலி



ருந்து வந்து சேர்ந்தது தெரியும். ஆனால் மனம் என்கிற வெளி மனதுக்கு அது தெரிய வராது.

ஆகவே உள் மனதுக்கும் வெளி மனதுக்கும் தொடர்பை ஏற்படுத்த ஓர் உபாயம் இருக்கிறது.

பிரபஞ்சத்தில் இருந்து வரும் சக்திப் பிரவாகத்தை உள்மனம் (subconscious) பெற்று அங்கிருந்து (Mind) மனதுக்குக் கொண்டுவர ஒரு பொதுவான (Psychological tool) அசாதாரணமான கருவி ஒன்றுள்ளது. அதைத்தான் (Pendulum) பெண்டுலம் என்கிறார்கள்.

மனோ தத்துவ சிகிச்சையாளர்கள் பெண்டுலத்தை உபயோகப்படுத்தி உள் மனதில் இருக்கும் சக்தியை வெளி மனதுக்குக் கொண்டு வரு வார்கள்.

அது போல (Metaphysicians) ஆத்ம தத்துவ விசாரகர்களும் பெண்டுலம் மூலமாகவே உள் மனதின் ஆற்றலை வெளி மனதுக்குக் கொண்டு வருவார்கள்.

படம் 3 இல் உள்ளது போல் ஒரு பெண்டுலம் அல்லது ஓர் ஈய உருண்டை அல்லது ஏதாவது ஒரு சிறு கனமான வஸ்துவை ஓர் அடி நீள நூல் (String) கயிற்றில் கட்டித் தொங்கவிட்டு உபயோகிக்கலாம்.

இந்த பெண்டுலத்தை மேசைக்கு மேல் கை விரல்களால் தூக்கிப் பிடிக்க இந்தக் கயிறு போதுமானது.

• என்.தம்மண்ணன்




## எல்லாம் ஆண்டவன் சித்தம்!

"இறைவன் திருவுள்ளப்படியே அனைத்தும் நடைபெறுகிறது" என்று நினைப்பது முதிர்ந்த உள்ளத்தின் அடையாளமாகும். சிறிய விடயமாக இருந்தாலும், பெரிய விடயமாக இருந்தாலும் இறைவனின் சங்கல்பத்திற்குக் கீழ்ப்படிந்து இறைவனிடம் சரண் புகுந்தவர்கள் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும் நடந்து கொள்வார்கள். தங்கள் முயற்சி வெற்றி பெற்றாலும், தோல்வியடைந்தாலும் இறைவனிடம் சரண் புகுந்தவர்கள் தங்கள் மனத்தைச் சமநிலையில் வைத்திருப்பார்கள். இறைவனிடம் சரண் புகுந்து, "நாம் இறைவனின் கருவி" என்ற மனநிலையை வளர்த்துக் கொள்ளும் அளவிற்கேற்ப நம்மிடம் நற்குணங்கள் இடம் பெறும்.

பிராரப்த கர்மம் என அழைக்கப்படும், தனக்கு விதிக்கப்பட்ட கர்மத்தை முழுமையாக கரைந்துவிட்டவர் இருந்தால், அவர் விழிப்புணர்வில்லா நிலையில் இல்லாமல் விழிப்புணர்வாய் உயிர் விட நம்மால் உதவ முடியும். ஏனெனில், அவரிடம் ஏதுவான சூழ்நிலை அமைந்திருக்கும். அவர் கரைவதற்கும் முக்தி அடைவதற்கும் வாய்ப்புள்ளது. ஆனால், பெரும்பாலானோர் தனக்கு விதிக்கப்பட்ட பிராரப்தத்தை முழுமையாய் கரைப்பதில்லை. ஒருவரது பிராரப்தம் நிறைவு பெறுவதற்குள் அவர் வியாதியுற்று இறந்தால், அது வேலை செய்யாது. அப்போது அந்த மனிதர் சற்று மேம்பட்ட உணர்வுடன் உயிர்விட நம்மால் உதவ முடியும். அதன் பின், வேறெங்கோ ஓரிடத்தில் அவர் சற்றே மேம்பட்ட வாழ்க்கை வாழ்வார்.

ஒருவர் தன் பிராரப்தத்தை முழுமையாக கரைத்திருந்தால், அனைத்தும் முடிந்து போகும். அவர் ஒரு குறிப்பிட்ட வெளியில், கர்ம இடைவெளியில் இருப்பார். தன் வாழ்நாள் முழுவதும் ஏனெனில், அவர்கள் அப்படியொரு ஆசீர்வதிக்கப்பட்ட நிலைக்கு வந்துவிட்டார்கள். அவர்களிடம் கர்ம பந்தங்கள் கிடையாது. வேறெங்கோ அவர்களுக்கான கையிருப்பு இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இங்கோ, கர்மமற்ற ஒரு சிறிய வெளி இருக்கிறது. கர்மம் இல்லாது போனால், அந்த மனிதரிடம் தனிப்பட்ட குணமும் இல்லை. அங்கு தனி மனித இயல்புகள் நடைபெறுவதற்கான சமாச்சாரங்களே இல்லை. நீங்கள் கிட்டத்தட்ட முற்றிலும் கரைந்து போவது போன்ற ஒரு சூழ்நிலையில் இருக்கிறீர்கள். அடுத்தகட்ட கையிருப்பு இன்னும் விடுவிக்கப்படவில்லை. அல்லவா? இப்பிறப்பிற்கான பங்கை தீர்த்து விட்டீர்கள். அப்போது கரைவது மிகச் சுலபம். ஒருவர் இந்த நிலையை அடையாத பட்சத்தில் உடல் காயமுற்றோ, நோயுற்றோ இறப்பினை அணுகிக் கொண்டிருந்தால், அந்த மனிதர் இன்னும் சற்று மேம்பட்ட உணர்வு நிலையில் உடல்விட நம்மால் உதவி செய்ய முடியும். இதன்மூலம், பின்னர் அவர் இன்னும் சற்று மேன்மையான வாழ்க்கை வேறிடத்தில் வாழ்வார்.


# இறப்பிலும் முக்தியிலும் குருவின் பங்கு!



அடிமுட்டாளாக வாழ்ந்தவர்கள் கூட, தன் இறுதி நாட்களில் மிகுந்த விழிப்புணர்வுடன், ஞானத்துடன் இருப்பதை காண முடியும். ஏனெனில் அவருக்கு விதிக்கப்பட்டிருந்த பிராரப்த கர்மம் நிறைவிற்கு வந்துவிட்டது. சொற்ப விடயங்களே எஞ்சி இருக்கும். அவருக்கான அடுத்தக்கட்ட பங்கு கரைக்க வேண்டிய பங்கு இன்னும் உள்ளே நுழையவில்லை. அதனால் அதனை ஆசீர்வதிக்கப்பட்ட காலகட்டம் என்றே சொல்ல வேண்டும்.

அறியாமையில் வாழ்க்கை வாழ்ந்திருந்தாலும் திடீரென அவருக்கு சில விடயங்கள் தெரியத் துவங்கும். "அடுத்த 3 நாட்களில் நான் இறந்து விடுவேன்" எனவெல்லாம் சொல்லத் துவங்குவார். வயதான காலத்தில் முழு ஆரோக்கியத்துடன் இருப்பவர்களுக்கு இது துல்லியமாகத் தெரியும் அவர்களை நம்மால் கரைத்துவிட முடியும்.

கிடங்கு உள்ளதே. ஒரு லொறி லோடு வெளியே எடுக்கப்பட்டு இந்த முறை கரைக்கப்படுகிறது. ஆனால், கிடங்கு உங்கள் மண்டையில் அமர்த்திருக்கிறதே! சம்யமா வகுப்பில் நாம் பிராரப்த கர்மாவிற்குள் செல்வதில்லை. சஞ்சித கர்மாவிற்குள் செல்கிறோம். அதாவது கிடங்கிற்குள் செல்கிறீர்கள். இதனால்தான், ஆன்மீகப் பாதையில் செல்லும் ஒருவர், சூழ்நிலையை சரியாகக் கையாளாவிட்டால், பிறரைவிட, அதிக பாதிப்புகள் அவருக்கு ஏற்படும் என்று சொல்கிறோம். ஏனெனில் அவர் அதிகளவிலான கர்மத்தை தன் கைகளில் எடுக்கிறார். இயல்பு வாழ்க்கையில் இருப்போர், தனக்கு விதிக்கப்பட்டதை மட்டுமே கழிப்பார்கள். ஆனால், ஆன்மீகத்தில் இருப்பவர்களோ, மொத்த கிடங்கினையும் கையில் எடுக்கப் பார்க்கின்றனர். படிப்படியாக செல்லாமல் ஒரு



பொதுவாக, மக்கள் தங்கள் மன, உணர்ச்சி சார்ந்த பிராரப்தத்திற்காக செயல் செய்கிறார்கள். அந்த பிராரப்தத்தை நீங்கள் கரைக்கும் பட்சத்தில் உடல் சார்ந்த பிராரப்தம் மட்டும் எஞ்சியிருக்கிறது. அதனால் நீங்கள் தொடர்ந்து உயிர் வாழ்கிறீர்கள்.

நாளிலேயே பிஹெச்டி பட்டம் வாங்க நினைக்கின்றனர். இதனால் தான். யோகப் பாரம்பரியத்தில் நிறைய ஒழுக்க முறைகள் எடுத்து வரப்பட்டன. உங்களை நாம் நினைப்பில் அழுத்தும்போது, உங்களுக்கு அந்தச் சூழ்நிலையைக் கையாளக்கூடிய பக்குவம் ஏற்படும். அப்படி இல்லாத பட்சத்தில், நீங்கள் தயாராய் இல்லாத ஏதோ ஒரு விடயத்தை உங்களுக்குத் திறந்து காட்டுகையில் கர்மப் பிடிப்பு உங்களை திக்குமுக்காட வைத்து விடும்.

நான் இதுபோன்ற சூழ்நிலைகளில் இறப்பு பற்றி பேசவில்லை. நான் உங்களது தற்போதைய வாழ்க்கையைப் பற்றி பேசுகிறேன். இதனால், நீங்கள் வாழ்வினை அர்த்தமுள்ளதாய் வாழ முடியும். இறக்கும் வரை எப்படியோ வாழ்ந்து விட்டு, இறக்கும் தறுவாயில் நான் அடைப்பானைப் பிடுங்கிவிடுமாறு எதிர்பார்க்காதீர்கள். நான் உங்களுக்கு பயிற்சிகளைச் சொல்லிக் கொடுக்கிறேன். அதை செய்து, உங்கள் வாழ்வினை உங்கள் கைகளில் எடுத்துக் கொள்ளுங்கள். அருளுடன் அறிவுடன் வாழுங்கள் எனச் சொல் கிறேன். உங்கள் வாழ்வை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் ஞானோதயத்தை நோக்கி செயல்படுங்கள். இங்கு வாழும்போதே மேன்மையான வாழ்வினை வாழ்ந்திடுங்கள்.

**உள்ளமே**
**இறைவனின் கோயில்!**

உள்ளத்தை இறைவனின் கோயிலாக வைத்திருப்பதால், ஏற்கெனவே நம்மிடமுள்ள தீய இயல்புகள் நம்மிடமிருந்து வெளியேறி விடும். மேலும் புதிய தீய இயல்புகள் நம் உள்ளத்தில் நுழையவும் நுழையாது. இறைவனின் கோயிலாக வாழ்வதைவிட, பெரும் சிறப்பு ஒருவருக்கு உலகில் வேறு என்ன இருக்க முடியும்?

தன் சாதனாவிற்கு தன்னை முழுமையாய் கொடுத்தவர்கள், ஒரு கணம் கூட, தன் முக்தியைப் பற்றி வருத்தப்பட தேவையில்லை முக்தி உத்திரவாதம். ஆனால், வாழ்வினை நேர்த்தியாக வாழ்கிறீர்களா என்பதற்கு உறுதியில்லை. அது நீங்கள் சம்பாதித்துக் கொள்ள வேண்டிய ஒரு விடயம். அதற்கு மாற்று வழியே இல்லை.

நாம் சாதனா செய்யும் காரணம், வாழ்க்கை 100 சதவிகிதம் உங்கள் கைகளில் இல்லை. மக்கள் தன் முழுமையான பிராரப்தத்தைக் கழிப்பதில்லை. ஒன்று விபத்தினாலோ வியாதியினாலோ, ஏதோ ஒரு காரணத்தினால் உயிர்விடுகின்றனர். இன்று பெரும்பாலான மக்கள், தன் பிராரப்தத்தை முழுமையாய் கழிக்காமல் மருத்துவமனைகளில் உயிர் விடுகின்றனர். இன்று எத்தனை பேர், வியாதி இல்லாமல், வெறும் முதுமையினால் உயிர் விடுகின்றனர் என நினைக்கிறீர்கள்? வெகு சொற்பமான சிலர் மட்டுமே அப்படி.

நீங்கள் ஒரு குறிப்பிட்ட விழிப்புணர்வு நிலையை உருவாக்குவதற்காகவே சாதனா செய்கிறீர்கள். இதன்மூலம், நீங்கள் கர்மத்தை கழிக்கும் செயலையும் துரிதப்படுத்துகிறீர்கள். வேக வேகமாய் கர்மம் கழிகிறது. உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பிராரப்தத்தின் சில அம்சங்களை நீங்கள் கரைத்துவிட்டால், நெடுநாட்களுக்கு நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கை வாழலாம்.

பொதுவாக, மக்கள் தங்கள் மன, உணர்ச்சி சார்ந்த பிராரப்தத்திற்காக செயல் செய்கிறார்கள். அந்த பிராரப்தத்தை நீங்கள் கரைக்கும் பட்சத்தில் உடல் சார்ந்த பிராரப்தம் மட்டும் எஞ்சியிருக்கிறது. அதனால் நீங்கள் தொடர்ந்து உயிர் வாழ்கிறீர்கள். ஆனால், அந்த வாழ்வில் தடுமாற்றம் இல்லை. திண்டாட்டம் இல்லை, மனப் போராட்டங்களும் இல்லை. இது ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு நிலை. உடலது பிராரப்தமும் முடிந்தால், பிறகு இந்த உடல் விழுந்துவிடும். இதன்மூலம், முக்திக்கான சாத்தியங்கள் மிக மிக அதிகம்.

◂ சத்குரு ஜக்கி வாசுதேவ்

# பாகிஸ்தானின் பழைமைமிக்க கட்டஸ்ராஜ் சிவன் ஆலயம்!

**சமயம் என்பது வழிபாட்டிற்கு வழி வகுக்கக் கூடிய ஒரு வாழ்க்கை முறையை தேர்ந்தெடுப்பதாகும்.**

இந்து சமயத்தை தழுவியிருக்கும் மக்கள். உலகின் எந்த பகுதியில் வாழ்ந்த போதிலும் தம்முடைய ஆன்மீக தேவைகளை மற்றும் சமய கோட்பாடுகளை பூர்த்தி செய்யும் பொருட்டு ஆலயத்தையே பெரிதும் நம்பியிருக்கிறார்கள். வேலை, கல்வி மற்றும் தொழில் நிமித்தமாக இந்து சமயிகள் இந்த உலகின் எந்த பகுதியில் வாழ்ந்த போதிலும் தமக்கானதொரு ஆலயத்தை அற்புதமாக அமைத்துக் கொண்டு அங்கு வாழ்ந்து வரும் அங்கத்தினர்களை ஒன்றிணைத்து வழிபாடுகள், விழாக்கள், பண்டிகைகள் மற்றும் தனிமனித வைபவங்கள் முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்து கொள்கின்றார்கள். இது மனிதர்களின் இயற்கையான மற்றும் நியாயமான தேவை என்பதையே சுட்டிக் காட்டுகின்றது. ஆலய வழிபாடு என்பது ஒவ்வொருவருக்கும் மன அமைதியையும், ஆத்ம திருப்தியையும், எதிர்காலத்திற்கான நம்பிக்கையையும் அளிக்க வல்லது என்பது மறுக்க முடியாததாகும்.

இவ்வாறாக இந்துக்கள் மிக குறைந்த அளவிலே வாழக் கூடிய நாடுகளிலும் கூட இந்து கடவுள்களுக்கு ஆலயங்கள் சிறப்பாக எழுப்பி வழியாடுகளை குறைவின்றி செய்து வருகின்றார்கள் இந்து சமயிகள். இவ்வாறு எழுப்பப்பட்ட புராண பெருமைகள் நிறைந்த ஆலயம் தான் பாகிஸ்தானின் கட்டஸ்ராஜ் சிவன் ஆலயம். இந்த ஆலயம் பாகிஸ்தானில் பஞ்சாப் மாகாணத்தில் சக்வால் மாவட்டத்தில் கட்டடஸ் என்னும் பசுமை மிக்க கிராமத்தில் சவோ சைதன்ஷா அருகினில் இந்த ஆலய வளாகம் அமையப் பெற்றுள்ளது. இவ்வாலயம் சிவனுக்காக அர்ப்பணிக்கப்பட்டதாகும்.


பழைமையான இந்து புராண சரித்தரங்களின்படி, இச்சிவாலயம் மகாபாரத காலத்திலிருந்தே இருந்து வருகின்றது எனவும் இதன் காரணமாக இது மிக மிக பழைமையானது எனவும், பாண்டவர்கள் தம்முடைய வனவாசத்தின் போது பெரும் பகுதியை





அதாவது சுமார் நான்காண்டு காலத்தை இங்கே தான் கழித்தார்கள் எனவும் அறியப்படுகின்றது. பின் வந்த காலத்தில் கிருஷ்ணரே, இந்த ஆலயத்திற்கான அடிக்கல்லை நாட்டினார் எனவும், தன் கையால் உருவாக்கப்பட்ட சிவ லிங்கத்தையே இங்கு பிரதிஷ்டை செய்தார் எனவும் அறியப்படுகின்றது.

பாகிஸ்தான் அரசு இந்த பழைமை மிகுந்த புராதன சிவாலயத்தை உலக பாரம்பரிய இடங்களில் ஒன்றாக அங்கீகரித்துள்ளது தனிச்சிறப்பாக கருதப்படுகின்றது. தனது தொன்மை தன்மையினால், பல சிதலங் களை சந்தித்திருக்கும் இந்த ஆலயத்தை புனர மைப்புச் செய்ய பாகிஸ்தான் அரசு 2007ஆம் ஆண்டிலேயே முடிவுகளை மேற்கொண்டது. ஆனால் என்ன காரணத்தினாலோ ஆலய புனரமைப்பு நடவடிக்கைகள் மிகுந்த தாமதத்திற்கு உட்படுத்தப்பட்டன. இந்த ஆலயத்தில் அமைந்துள்ள புகழும் புனிதமும் நிறைந்த தீர்த்தக் குளமானது 2012ஆம் ஆண்டில் முற்றிலுமாக வற்றிப் போனது. இப்பகுதியில் அதிகப்படியான உருவாகியிருந்த தொழிற்சாலைகளின் தொடர் நீர் பயன்பாட்டின் காரணமாக நிலத்தடி நீர் இந்த பகுதியில் பெரிய அளவில் குறைந்து போனது காரணமாக சொல்லப்படுகின்றது.



கட்டஸ்ராஜ் சிவனாலயத்தைச் சுற்றிலும் இரண்டிரண்டாக எழுப்பப்பட்டுள்ள சிறிய ஆலயங்கள் சுமார் தொளாயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்தவை எனச் சொல்லப்படுகின்றது. இவற்றில் மிகப் பழைமையான ஆலயங்கள் ஆறாவது நூற்றாண்டைச் சார்ந்தது எனவும் சொல்லப்படுகின்றது. 1947ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் வெள்ளையர் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்ற பின்பு கட்டஸ் கிராமத்தில் வாழ்ந்த இந்து பெருமக்கள் கிழக்கு பஞ்சாபிற்கு குடி பெயர்ந்து சென்றுவிட்ட படியினால் இந்த ஆலயத்தைச் சுற்றிலும் வாழ்ந்து கொண்டிருந்த இந்து குடும்பங்கள் பெருமளவில் குறைந்து போயின. ஆனால் சில காலங்களில் இரண்டு நாடுகளிலும் அமைதி முழுமையாக திரும்பிய பின் மீண்டும் இந்து சமயிகள் இங்கு வந்து குடியேறினர். எது எப்படியாயினும் இந்த ஆலயம் அமைந்திருக்கும் தலமானது யாத்திரிகர்கள் தொடர்ந்து வருகின்ற புண்ணிய பூமியாக கருதப்பட்டு வருகின்றது. இவ்வாலய திருக்குளமானது சிவன் சதியை பிரிந்து துயர் உற்ற போது சிவனின் கண்களிலிருந்து உருவான கண்ணீரால் ஆனது என்பதால் மிகவும் புண்ணியம் நிறைந்த குளமாக கருதப்படுகின்றது.

பல தசாப்த காலமாக இந்த ஆலய வளாகம் மோசமான நிலையிலேயே இருந்து வந் துள்ளது. புண்ணியம் நிறைந்த தீர்த்தக்குளம் குப்பை கொட்டும் இடமாக உருவெடுத்தது. இருந்த போதிலும் தற்போது இந்த ஆலயத்தை எல்லா விதத்திலும் புனரமைக்க வேண்டிய முக்கியத்துவத்தை பாகிஸ்தான் அரசு தற்போது உணர்ந்து துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இந்த ஆலயத்தின் கும்பாபிசேகத்தை மிக விரைவில் நடத்த வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. இவ்வாலயத்தில் பல இடங்களிலும் அற்புதமான சிற்ப வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. சரித்திர மற்றும் புராண முக்கியத்துவம் வாய்ந்த இச்சிவாலயம் விரைவில் புத்துயிர் பெற வேண்டு மென மனதார வேண்டிக் கொள்வோமாக!

அபிதா மணாளன்

# பாவத்தால் சேர்ந்த செல்வம்!

ஓர் ஊரில் இரண்டு சகோதரர்கள் வசித்து வந்தனர். அவர்கள் இருவரும் அந்தண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அதிகமான படிப்பும் அவர்களுக்கு இல்லை. எனவே வறுமையில் வாடினர். கொடிய வறுமையில் வெறுப்புற்று அவர்கள் வீட்டை விட்டுப் புறப்பட்டனர். செல்வத்தைத் தேடும் நோக்கத்தோடு கடற்கரைக்கு வந்து சேர்ந்தனர். அது மீனவர்களின் குடியிருப்புப் பகுதி.

சகோதரர் இருவரும் பெரிய தலைப்பாகை, சந்தனப் பொட்டு, புத்தகக்கட்டு ஆகியவற்றுடன் சென்று மீனவர் மத்தியில் தங்களுடைய சோதிடப் புலமையைச் சரமாரியாகக் காட்டினர். பாவம்! அந்த ஏழை மீனவர் இவர்கள் இருவரையும் சிறந்த சோதிடப் புலிகள் என்று நம்பித் தங்கள் வயிற்றையும் வாயையும் கட்டிச் சேர்த்த பணத்தையெல்லாம் இவர்களுக்குக் கொடுத்ததுடன் இவர்களின் வாக்கைத் தெய்வ வாக்காகவும் நம்பத் தலைப்பட்டனர். மந்திரம் என்ன, தந்திரம் என்ன, மாந்திரிகம் என்ன என்று சகோதரர் இருவரும் தடபுடல் செய்து ஒன்றுமறியாத அப்பாவி மீனவர்களை நன்றாக ஏமாற்றி விட்டனர்.

கொஞ்ச நாட்களுக்குள்ளாகவே நிரம்பப் பணம் சேர்த்துவிடவே இருவரும் வீட்டை நோக்கிப் புறப்பட்டனர். கையில் கொஞ்சம் பணம் அதிகமாகவே அவற்றையெல்லாம் பொற்காசுகளாக மாற்றி ஒரு பையில் போட்டுக் கொண்டு நடந்தனர்.

வழியில் சென்றபோது பணமூட்டையை ஒருவர் மாற்றி ஒருவர் முறைப்படி எடுத்துச் சென்றனர். அவர்களுடைய மனநிலை மிகவும் விசித்திரமாக இருந்தது. எவனிடம் அந்த மூட்டை இருந்ததோ அவனுடைய மனதில், "நானே இந்த மொத்தப் பணத்தையும் அடைந்தால் எப்படி இருக்கும்! அதற்காக என் சகோதரனைக் கொன்று விட்டால் என்ன?" என்ற எண்ணம் தோன்றியது.

உடன் பிறப்புகளான அந்தச் சகோதரர்கள் ஒருவரை மற்றவர் மிகவும் உள்ளன்போடு நேசித்தனர். அவர்களின் உள்ளத்தில் இருந்த ஆழ்ந்த அன்புதான் அவர்களின் மனதில் பயம் காரணமாகத் தோன்றிய பாவ எண்ணத்தைச் செயற்படுத்த முடியாமல் தடுத்து வந்தது. வீட்டின் அருகில் வந்தபோது ஒரு வேடிக்கை நடந்தது. பண மூட்டை எவன் கையில் இல்லாமலிருந்ததோ அவன் பணப்பையை வைத்திருந்தவனிடம், "அண்ணா என்னை மன்னித்துவிடு, என்னிடம் பணப்பை வந்த போதெல்லாம் உன்னைக் கொன்றுவிட்டு அந்தப் பணம் முழுவதையும் நானே அபகரித்து கொள்ள வேண்டும் என்ற கெட்ட எண்ணமே எனக்கு வந்து கொண்டிருந்தது. எனவே அந்தப் பொல்லாத பணம் எனக்கு வேண்டாம். அதை நீயே வைத்துக் கொள் என்றான்.

வீட்டின் அருகில் குப்பைகளைக் கொட்டும் பெரிய பள்ளம் இருந்தது. அதில்தான் அவர்கள் தினமும் குப்பை கூளங்களைப் போடுவது வழக்கம். இருவருமாகச் சேர்ந்து அந்தப் பணப்பையை அதில் தூக்கி எறிந்து விட்டு அதைத் திரும்பிக் கூடப் பார்க்காமல்



நிம்மதியான மனதுடன் வீட்டிற்குள் நுழைந்தனர். தூக்கிப்போட்ட பணப்பையை எவர் கண்ணிலும் படாமல் மூட வேண்டுமே என்ற எண்ணங்கூட அவர்களுக்குத் தோன்றவில்லை.

அதே நேரத்தில் ஊரிலிருந்து சிறிது நாள் தங்குவதற்காக வந்திருந்த அவர்களது சகோதரி வீட்டிற்குள் சமையலுக்குக் காய்கறிகள் நறுக்கி முடித்துக் குப்பைகளைத் தூக்கிக் குப்பைமேட்டில் போடுவதற்காக வெளியே சென்றாள். வீட்டின் கொல்லைப்புற வழியாகச் சென்றதனால் சகோதரர்கள் அவளைக் கவனிக்கவில்லை. அங்கே குப்பைமேட்டில் அவள் கண்ட காட்சிதான் என்ன!



ஒரு பை வாய் வழிந்து கிடந்தது. அதிலிருந்து பொற்காசுகள் சிதறிக் கிடந்தன. அவள் குப்பையைப் போட்ட அதே வேகத்தோடு பொற்காசுகளைத் திரட்டி அதே பையில் போட்டுக் கட்டித் தன் புடைவைத் தலைப்பில் மறைத்து இடுப்பில் கட்டிக் கொண்டாள். அன்று இரவே அதை ஒருவருக்கும் தெரியாமல் தன் கணவனிடம் சேர்ப்பித்து விட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு, அவள் வீட்டிற்குள் வரத் திரும்பினாள். அதே சமயம் அவளுடைய அண்ணன்கள் இருவருள் மூத்தவனின் மனைவி ஏதோ வேலையாக வெளியே வந்தவள் தன் நாத்தி குப்பைமேட்டிற்கு அருகே நின்று கொண்டு ஏதோ செய்வதைக் கவனித்துவிட்டாள்.

எனவே, அது என்ன என்று அறியும் ஆவலில் அவள் அருகே சென்று, இங்கே என்னம்மா செய்து கொண்டிருக்கிறாய்? என்று கேட்டாள்.

நாத்தியின் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது. "அண்ணி பொற்காசுகளைப் பார்த்துவிட்டாளோ! அப்படியானால் இதை அவள் அனைவரிடமும் கூறிவிடுவாளே! என்ற எண்ணம் அவளுக்குத் தோன்றியது. கையிலோ காய்கறி நறுக்கும் கூரிய கத்தி இருந்தது. சிறிதும் யோசிக்காமல் அவள் அதைக் கொண்டு அண்ணியின் வயிற்றில் குத்திவிட்டாள்!



## அமர வாழ்வளிக்கும் தெய்வ பக்தி!

இறைவனை வணங்குவது நாம் நல் வாழ்வு வாழ்வதற்காக ஆகும். மனத்தை இறைவனை நோக்கிச் செலுத்தினால் மனம் தெளிவாக இருக்கும். சாந்தமாக இருக்கும். நடுநிலையில் இருக்கும். இறைவன் எல்லா நன்மைகளையும் உடையவன். பரிபூரணன், நாம் இறைவனை வழிபடுவதன் நோக்கம், இறைவனுக்குரிய நற்பண்புகளை நாமும் பெற வேண்டும் என்பது தான். தெய்வபக்தி, இறுதியில் மரணமற்ற அமரவாழ்வை அளிக்கும்.

குத்தப்பட்ட மனைவியின் அலறலைக் கேட்டு அவளது கணவன் அந்த இடத்திற்கு ஓடோடி வந்தான். அண்ணனைக் கண்டதும் பயத்தால் நடுநடுங்கிய தங்கை ஓட நினைத்தாள். முடியவில்லை. கால்கள் நகர மறுத்தன. உடனே தன் அண்ணியின் வயிற்றில் பாய்ச்சிய அதே கத்தியால் ஓங்கித் தன் வயிற்றிலும் குத்திக் கொண்டு கீழே சாய்ந்தாள்.

இந்தக் கோரக்காட்சியைக் கண்ட சகோதரர்களுக்கு ஏற்பட்ட துயரத்தை வர்ணிக்கவே முடியாது. பெரியவன் தம்பியைப் பார்த்து, "தம்பி! பாவத்தால் ஈட்டிய பொருளைத் தூக்கி எறிந்த பிறகும் இத்தனை அனர்த்தங்கள் விளைந்து விட்டனவே!" என்று கூறிக்கொண்டு தலையில் கை வைத்தபடி அங்கேயே உட்கார்ந்து விட்டான்.

பாவத்தால் சேர்க்கும் பணம் எந்த நிமிஷமும் எவருக்கும் ஆபத்தையே உண்டாக்கும். ஆகவே நேரிய வழியில் பொருள் சேர்த்து வாழ்வதே நல்வாழ்வாகும். கள்விற்றுக்கள்ளப்பணம்சம்பாதிப்பதைவிடக் கற்பூரம் விற்றுக் கால் பணம் சம்பாதிப்பது மேல்.

◂ சுவாமி கமலாத்மானந்தர்



# கண்கவரும் சிற்பங்கள் அமையப்பெற்ற அருள்மிகு தேனுபுரீஸ்வரர் ஆலயம்!

இந்தியாவின் தமிழ்நாட்டில் சென்னை மாவட்டத்தில் தாம்பரத்திலிருந்து சுமார் 10 கி.மீ தூரத்தில் அமையப் பெற்றுள்ளது புராண பெருமைகள் வாய்ந்த, சிற்ப செழுமைகள் நிறைந்த அருள்மிகு தேனு புரீஸ்வரர் ஆலயம். இச்சிவாலயத்தின் கர்ப்பகிரகத்தில் மூலவர் சதுர பீடத்தில் சுமார் ஒரு சாண் உயரத்தில் சிறிய மூர்த்தியாக காட்சியளிக்கின்றார். மூலவர் லிங்கத்தின் அகலம் மூன்று விரற்கிடையில் அளவு மட்டுமே இருக்கின்றது. இந்த லிங்கத்தில் புராண நிகழ்வுகளின்படி பசு மிதித்த தழும்பும் கல்லடி பட்ட பள்ளமும் காணப்படுகின்றன. லிங்கத்தைச் சுற்றிலும் சிறிய மண்டபம் போன்ற அமைப்பும் நாக பரணமும் உள்ளன.

சிவன் சன்னதிக்கு எதிரிலுள்ள நந்திக்கு மேல் உள்ள சுவரில் அஷ்டதிக் பாலகர்கள் வாகனத்தில் அமர்ந்தபடி காட்சி தருவது விசேடமாகும். இவ்வாலய தாயாராகிய தேனுகாம்பாள் தனிச் சன்னதியில் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார். முன் மண்டபத்தில் உள்ள தூணில் கபிலர் கையில் லிங்க பூஜை செய்த சிற்பம் இருக்கின்றது. இந்த ஆலயத்தின் விமானம் கஜபிருஷ்ட விமானம் என அழைக்கப்படுகின்றது.

விநாயகர், முருகன், வடுகபைரவர், சரபேஸ்வரர் ஆகியோர் பிரார்த்தனை தெய்வங்களாக வீற்றிருக்கின்றார்கள். கிரக மற்றும் நாக தோஷமுள்ளவர்கள் இந்த ஆலயத்திற்கு வந்து இங்குள்ள சரபேஸ்வரரிடம் தம்முடைய தோஷங்களை நீக்கிட வேண்டிக் கொள்கின்றார்கள். ஜாதக ரீதியாக வக்கிர தோஷமுள்ளவர்கள் மூல ஸ்தானத்தில் அமைந்துள்ள சிறிய லிங்கத்தில் மல்லிகை பூ மாலை அணிவித்து வேண்டிக் கொள்கின்றார்கள். இதனால் தோஷங்கள் நிவர்த்தியாவதாக நம்பப் படுகின்றது. இங்குள்ள வடுக பைரவருக்கு




திராட்சை மாலை அணிவித்தும் வெள்ளை பூசணியில் நெய் விளக்கு ஏற்றியும் பக்தர்கள் தங்கள் நேர்த்தி கடன்களை செலுத்துகின்றார்கள். மூல லிங்கேஸ்வரருக்கு விசேட திரு மஞ் சனம் செய்து வஸ்திரம் அணிவித்து பக்தர் கள் தம்முடைய நேர்த்தி கடன்களை நிறைவேற்றுகின்றார்கள். சிவ வழிபாட்டில் தர்ம நெறியை மீறியதன் காரணமாக, சிவனின் சாபத்திற்கு ஆளாகி பசுவாக பிறந்தார் கபில மகரிஷி. இவர் தம்முடைய சாபம் நீங்கிட இத்தலம் வந்து சிவனை வழிபட்டு பாவ விமோசனம் அடைந்து முக்தியும் பெற்றார். பின் வந்த காலங்களில் இப்பகுதியை ஆண்ட மன்னர் ஒருவர் இங்கு ஆலயம் எழுப்பினார். பசு வடிவில் கபிலர் வழிபட்ட தலம் இது என்பதால் இங்குள்ள சுவாமியை "தேனுபுரீஸ்வரர்" என அழைக்கின்றார்கள். தேனு என்றால் பசு என்பது பொருளாகின்றது.

இந்த ஆலயம் இதன் அற்புதமான கண்ணை கவருகின்ற, நுட்பமாய் வடிக்கப் பட்டுள்ள சிற்பங்களுக்கு பிரசித்தி பெற்ற தாகும். இவ்வாலயத்தின் தூண்களில் எண் ணற்ற பல தெய்வ வடிவங்கள் பேசும் சிற்பங்களாய் செதுக்கப்பட்டுள்ளன. ஒரு தூணில் சரபேஸ்வரர் காட்சி தருகின்றார். இவருக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை வேளையில் விசேட பூஜைகள் நடத்தப் படுகின்றன. அதே சமயத்தில் உற்சவரும் உலாவிற்கு புறப்பாடு ஆகின்றார். மற் றொரு தூணில் விநாயகர் கையில் வீணை யோடு காட்சி தருகின்றார்.

இன்னும் ஒரு தூணில் முருகன் யானை மீது அமர்ந்த கோலத்தில் இருக் கின்றார். அவரது இடது கையில் சேவல் இருக்கின்றது. சிவனை வணங்கியபடி திருமால் மற்றும் பிரம்மா, கங்கா பார்வதியுடன் சிவன், வாசுகி நாகத்தின் மீதுள்ள தாமரையில் அமர்ந்த சிவன், மனைவியருடன் தட்சிணாமூர்த்தி மற்றும் பைரவர், மடியில் சீதையை அமர்த்தியிருக்கும் ராமபிரானின் பாதங் களை வணங்கும் ஆஞ்சநேயர், ஐந்து முகங்களுடன் பிரம்மா ஆகிய சிற்பங்கள் காணும் பக்தர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகின்றன.

பக்தியோடு இங்குள்ள தெய்வங்களை வணங்கிய பின், இங்கே காணப்படுகின்ற அபூர்வமான தெய்வச் சிற்பங்களை கலைக் கண்களோடு காண வேண்டியது அவசியமாகின்றது.

• S.ஆகாஷ்










# அமெதிஸ்ட் ஜெம் கற்களின் குணங்கள்!



அமெதிஸ்ட் பர்ப்பிள் வண்ணம் கொண்ட குவார்ட்ஸ் இனத்தைச் சேர்ந்த உபரத்தினக்கல் ஆகும். (Semi Precious Stone).

அமெதிஸ்ட் கல்லானது ஞானயோக தியானம் செய்து உயர்நிலையை அடைய பெரிதும் உதவி செய்கிறது. இது பல பிரச்சினைகளையும் தீர்க்கிறது. தியானம் செய்வதற்கு மிகவும் உதவி செய்கிறது.

இந்தக் கல் போதையில் இருப்பவர்களை குணமாக்குகிறது. அமெதிஸ்ட் கல்லை தலை யணைக்கு அடியில் வைத்து உறங்கும் போது தூக்கத்தில் உள்உணர்வுகளை விழிப்படையச் செய்து மனதில் கிரியா சக்திகளை வெளிக் கொணர்ந்து ஆக்கப்பூர்வமாகச் செயல்பட்டு கனவின் மூலமாக பல உண்மைகளைத் தெரி வித்து வழிகாட்டி உதவுகிறது. அமெதிஸ்ட் கற்கள் உடலில் சோர்வை நீக்கி உடல் இறுக் கத்தைக் குறைத்து மனதை அமைதிப்படுத்தி நல்ல சுகமான நிலைக்குக் கொண்டு வருகிறது.



அமெதிஸ்ட் கற் களால் ஆன மாலை அல்லது பெண்டுலம் அணிந்து வருவ தால் அதுமனதை அமைதிப் படுத்தி உள் உணர்வுகளை அதிகப் படுத்துகிறது. இந்தக்கற்களை மாலையாகவோ, மோதிரமாகவோ அணிந்திருப்பவர்களை நெகடிவ் எண்ணங் கள் அதாவது கெட்ட எண்ணங்கள் வராமல் தடுத்து பாதுகாக்கிறது.

முக்கியமாக கம்ப்யூட்டர் உபயோகிப்பவர்கள் Word Processor என்னும் கம்ப்யூட்டர் கருவிகளை உபயோகிப்பவர்கள் ஒரு சிறிய அமெதிஸ்ட் கல்லை VDU ஸ்கிரீனில் வைத்து விட்டால் கம்ப்யூட்டர் கருவிகளில் இருந்து வெளியேறும் கெடுதலான கதிர்வீச்சுக்களில் இருந்து தங்களை காப்பாற்றிக் கொள்ளலாம். கம்ப்யூட்டர்களில் இருந்து வரும். கெடுதலான கதிர்வீச்சுக்களை அமெதிஸ்ட் கற்கள் தடுத்து விடுகின்றன.

அமெதிஸ்ட் பாறைக்கற்கள் பட்டை தீட்டப் படாத பெரிய கல்கற்றைகளை அறையில் வைத் திருந்தால் அவை நாம் சுவாசிக்கும் காற்றை சுத்தப் படுத்துகின்றன. அற்புதமான ஜீவசக்திகளை அமெதிஸ்ட் வெளியிடுகிறது. Positive ions என்ற சக்தியானது அமெதிஸ்ட் கல்லில் இருந்து வெளி யாகிறது. இதன் சக்திகள் நமது சுற்றுச்சூழலை சுத்தப்படுத்துகின்றன.

புத்தகம் எழுதும் புத்தக எழுத்தாளர்கள் அமெதிஸ்ட் அணிந்து கொள்வதால் அவர்களது கற்பனை வளம் பெருகுகிறது. அவர்களது கிரியா சக்திகளை பலப்படுத்தி புதுப்புது எண்ணங்கள் உற் பத்தியாக உதவி செய்கிறது.

ஆகவே அமெதிஸ்ட் கல்லை உங்களது உயிர் நண்பனாக ஆக்கிக் கொள்ளுங்கள். அதை விடாதீர்கள். எப்போதும் அமெதிஸ்ட் அணிந்து கொள்ளுங்கள். நீங்கள் ரி. வி பார்த்துக் கொண்டி ருக்கும் போதும் புத்தகங்கள், வாரப் பத்திரிகைகள் படிக்கும் போதும் ஒரு கையில் அமெதிஸ்ட் கல்லை வைத்துக் கொண்டு படியுங்கள். அற்புதமாக இருக்கும். அமெதிஸ்ட் கல்லின் அற்புதமான, அமைதி யான தன்மைகள் உங்கள் உடலில் பரவி உடலை பரி பூரண அமைதிய டையச் செய்கி ன்றன. மனதிலும் அமைதி நிலையை ஏற் படுத்தி கவனத்தை சிதற விடாமல் ஆழ்ந்து படிக்க பார்க்க சிந்திக்க உதவி செய் கின்றன.

நீங்கள் வருடக்கணக்காக உங்களிடம் சேர்த்து வைத்திருக்கும் பிரச்சினைகள், மனக்குழப்பங்கள், குழப்பங்கள் எல்லாவற்றிலிருந்தும் உங்களை அமெதிஸ்ட் கற்கள் விடுதலை செய்கின்றன. ஆகவே அமெதிஸ்ட்டை எப்போதும் அணிந்து கொள்ளுங்கள்.

மோதிரமாகவோ, மாலையாகவோ அணிந்து கொள்ளலாம். பேப்பர் வெயிட் போல கைக்கு எட்டும் தூரத்தில் உங்கள் அலுவலக மேசையில் வைத்துக் கொள்ளவும். அதை கையில் வைத்துக் கொண்டு போனில் பேசலாம். வியாபாரிகளிடம் பேசலாம். அலுவலக அதிகாரிகள் மற்றும் பேட்டி காண வருபவர்களிடம் பேசும் போதெல்லாம்



அமெதிஸ்ட்டின் சக்தி உங்களது கிரியா சக்தி மனதை ஊக்குவித்து அற்புதமான புதுப்புது எண்ணங் களையும் கருத்துக்களையும் கொடுக்கும். சினிமா வசனகர்த்தாக்கள், நாடக ஆசிரியர்கள், பாட்டு வசனம் புத்தகம் எழுதுபவர்கள் கவிஞர்கள் கலைஞர்கள் ஆர்ட்டிஸ்ட்டுகள் ஆகிய வர்களின் கற்பனை வளங்களை கிரியா மனதில் இருந்து அமெதிஸ்ட் கற்களின் சக்தி அபரிமிதமாக வரவழைத்து உதவி செய்யும்.

டெலிவிஷனில் பேசுபவர்கள் விளம்பர தாரர்கள் ஆகியவர்களும் அமெதிஸ்ட் கல்லை அணிந்து கொள்வதால் அவர்கள் திறமை அதிகரிக்கிறது. மன அமைதியை நாடுபவர்கள் தியானம் அமைதியாகச் செய்து உயர்நிலையை அடைய விரும்புபவர்கள் எல்லாம் அமெதிஸ்ட்டை அணிந்து கொண்டால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

இந்த அமெதிஸ்ட் கல் வயலட் வண்ணம் உடையதால் இது சகஸ்ரதளச் சக்கரத்தின் வண்ண மாக திகழ்கிறது. ஆகவே இக்கல்லின் தெய்வீகத் தன்மையை இதன் வண்ணத்தைக் கொண்டே உணரலாம்.

அமெதிஸ்ட் கற்களின் சக்திகளால் புருவ மத்தி யில் நெற்றிக்கண்ணை செயல்பட வைக்க முடியும். நெற்றிக் கண்ணில் பலவிதமான வண்ண ஒளி பிரகாசங்களையும் காண உதவி செய்கின்றன. நெற்றிக்கண்ணின் திறமைகளை அதிகப்படுத்தி அதனால் பார்க்கவும், கேட்கவும் கூடிய சக்திகளை ஊக்குவிக்கின்றன. உடலில் டென்ஷனைக் குறைத்து தலைவலியைப் போக்கி கண்களில் ஏற்படும் பிரச்சினைகளை குணப்படுத்து கிறது.


பலருக்கும் நோய்களை குணப்படுத்த முன் அத்தி யாயங்களில் சொன்னது போல அமெதிஸ்ட் கல்லை கையில் வைத்துக் கொண்டு கிரிஸ்டல் சிகிச்சை அளித்து வந்தால் விரைவில் நோய்கள் குணமடைகின்றன என்பது தெரியவருகிறது.

மேலும் கான்சர் நோய் உள்ளவர்கள் அமெதிஸ்ட் கற்களால் ஆன மாலையை அணிந்து கொண்டால் அது மன வேதனையைக் குறைக் கிறது. அமெதிஸ்ட்டில் சிவப்பு வண்ணமும் கலந்து இருப்பதால் அது இரத்தத்தில் இரும்புச்சத்தை சேர்த்து கான்சர் நோயின் கடுமையைக் குறைக்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் தற்போது கண்டுபிடித்துள்ளதாக பிரிட்டிஷ் ஜெம் கற்கள் நிபுணர் கூறுகிறார். அமெதிஸ்ட் தசை நார்களை பலப்படுத்தி இரத்தத்துக்கு சக்தியைக் கொடுத்தும், கேன்சர் கிருமிகள் பரவுவதைத் தடுத்து மிகவும் முக்கியமான பணியைச் செய்கிறது. அமெதிஸ்ட் அணிந் திருந்தால் போதைப் பொருள் மது வகைகள் சாப்பிட மனம் மறுத்துவிடும்.

பிளட்ஸ்டோன் (Blood stone) என்ற கல்லுடன் அமெதி ஸ்ட் கல்லையும் சேர்த்து இரத்தம் கட்டிப்போன (Blood clot) இடத்தில் 15 நாட்கள் வைத்திருந்தால் இரத்தத்தைக் கரைத்து இரத்த ஓட்டத்தை சீர் செய்கிறது.

அமெதிஸ்ட் பிளட் ஸ்டோன் ஆகிய இரண்டு கற் களையும் எப்போதும் மாலை யில் அணிந்து வருவதால் இரத்த உறைவைத் தவிர்க்க லாம். உணவில் விஷத் தன்மை இருக்குமானால் அருகில் அமெதிஸ்ட் கல்லை கொண்டு போனால் அதன் நிறம் மாறி விடும். இதைக் கொண்டு உணவில் விஷத்தன்மை இருப் பதைத் தெரிந்து கொள்ளலாம்.


◂ ராஜயோகி



## வரத ஹஸ்தம்!

இறைவன் அல்லது இறை வியின் இடக்கை உள்ளங்கை எதிரில் இருக்கும் பக்தர்களின் பக்கமும், விரல்கள் திருவடி களைச் சுட்டிக் காட்டும் நிலையி லும் இருக்கும் வடிவம் வரத ஹஸ்தம் அல்லது வரத முத்திரை எனப்படும். இதில் இறைவன் அல்லது இறைவி, "என் திருவடிகளை நீங்கள் சரண டைந்தால், அனைத்து நன்மை களையும் அடைவீர்கள். முழுமை பெறுவீர்கள் என்று உணர்த்தும் கருத்துகள் அடங்கியுள்ளன.


# கடமை செய்ய உடலே ஆதாரம்!



உடல் பற்றிய இந்த ஆராய்ச்சியை எல்லாம் பார்க்கும் போது உயிரை வளர்க்க வேண்டிய நாம் உடலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதாகத் தோன்றலாம். உயிருணர்வு (Spiritual Consciousness) பெற்றவர்கள் இப்படி உடலுணர்வைப் பற்றி (Material Consciousness) இவ்வளவு அக்கறை கொள்ளவும். ஆராய்ச்சி செய்யவும் வேண்டுமா என்று தோன்றலாம். இந்தக் கருத்துச் சரியல்ல.

நாம் சமுதாயத்தில் ஓர் அங்கம். இந்த உடல் சமுதாயத்தின் சொத்து. அதனைக் கெடுப்பதற்கு நமக்கு அதிகாரம் இல்லை. இந்த உடலுக்காக நாம் சமுதாயத்தில் கடன்பட்டிருக்கிறோம். மற்றும் அன்றாட அனுபோகப் பொருட்களையும் அதனிடமிருந்து பெற்று அனுபவித்து வருகிறோம். இந்தக் கடனைத் திருப்பித்தரும் வழியே கடமை எனப்படுகிறது. அவர்களது உடலாற்றலையும், அறிவாற்றலையும் அந்தந்த நேரத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றபடி குறைவில்லாமல் சமுதாய நலத்திற்கு அர்ப்பணமாகச் செலவிடல்தான் கடமை. உடலைக் கொண்டு தான் இந்தக் கடமையை ஆற்ற வேண்டும்.

உடல் நலக்குறைவு ஏற்படும் போதும். நலிவுற்ற போதும் சமுதாயம் நம்மைக் கவனிக்க வேண்டி வந்து விடுகிறது. இதனால் சமுதாயத்திற்கு வரவேண்டிய வரவும் நின்று போய் மருந்தென்றும் உபசரணை என்றும் நம்மால் சமுதாயத்திற்கு இழப்பு உண்டாகிறது. எனவேதான் கடமையை வகைப்படுத்தும் போது உடல், குடும்பம், சுற்றம், ஊர், உலகம் என்று உடல் கடமைகளை மற்றவற்றின் முன்னால் வைக்கப்பட்டது.



இனி ஆன்மீக நோக்கில் உடல் நலத்தின் அவசியத்தை ஆராயலாம். இது வரை மனிதனிடம் ஏற்பட்டுள்ள களங்கங்கள் பாவப்பதிவுகள் நீங்கினால்தான் உயிருக்கு வீடுபேறு, விடுதலை கிடைக்கும். பாவப்பதிவுகள் எப்படிப் போகும். உடலை எடுத்தால்தான் அந்தப் பாவப்பதிவுகள் துன்பமாக அனுபோகமாகி நீங்கும். அல்லது யோக சாதனைகள் மூலம் நீக்கிக் கொள்ளலாம். அதற்குத்தான் இந்த உடலை உயிர் எடுத்து வந்தது. உயிர் தன் மூலத்தை அறிந்து கொள்ள எடுக்கின்ற முயற்சிக்கும் இந்த உடல் தேவைப்படுகிறது. ஆகவே உடலை உயர்வாகக் கருதி, சீர்கேடு அடையாமல் போற்றிப் பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் ஆன்மீகப் பயணம்

தடைப்படாமல் இருக்கும்.

"ஊனுக்குள் நீ நின்று உலாவினதைக் காணாமல்
நானென்றிருந்து நலனழித்தேன் பூரணமே"

என்று பட்டினத்து அடிகள் கூறியபடி உடலுக்குள்ளாக இறைவன் உறைவதை அறியாமல் உடலால் பெறும் புலன் இன்பங்களில் மனதைச் சிக்கவைத்துக் கொண்டு உடல் இருப்பது தவறு, இழுக்கென்று கருதுவது மடமையாகும். உயிர் உய்ய வேண்டும். அறிவிற்கு முழுமைப்பேறு கிட்ட வேண்டும். வீடுபேறு வேண்டும். இதை ஒரு பயணமாகக் கருதினால் அப்பயணத்திற்கு உடல் தானே வாகனம். இந்த வாகனத்தைப் பேணிப் பாதுகாத்தால்தான் இந்த ஆன்மீகப் பயணத்தை வெற்றியோடு முடிக்க முடியும். எனவேதான் திருமூலர்,

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிராணார்க்கு வாய் கோபுர வாசல்
தென்னத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே



உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்மை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்மை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

உடம்மை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே"

என்று கூறியுள்ளார்.

எனவே இந்த உடலை ஆரோக்கியத்தோடு வைத்துக் கொள்ளவும், அதற்காகச் சில முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். சில ஆசனங்களும் உடற் பயிற்சி முறைகளும் பெரியோர்களால் வகுக்கப் பட்டுள்ளன. நோய் வராமல் தடுத்துக் கொள்ளவும், நோய் வந்தால் போக்கிக் கொள்ளவும் உடலுக்கு முடியும். இது உடலில் சுழன்றோடும் உயிராற்றல் கவனித்துக் கொள்கிறது. இருந்தாலும் மேலும் ஊக்குவிக்க உடற்பயிற்சி மிக மிக அவசியமாகிறது.

## உடற்பயிற்சி

உலகத்திலே பலவித உடற்பயிற்சி முறைகள் உள்ளன. அவற்றை எல்லாம் சேர்த்துக் கூட்டி Synthesis செய்து மருத்துவத்துறையில் உள்ள அனுபவத்தையும் கொண்டு பலகாலம் செயல் படுத்திப் பலன்களையெல்லாம் கணித்து இவ்வுடற் பயிற்சியினை உருவாக்கியிருக்கிறேன்.

இந்தப் பயிற்சி உடல் உறுப்பு எதனையும் வருத்தாமல் அதிக நேரமும் எடுத்துக் கொள்ளாமல் பயிற்சிகளை முடித்துக் கொள்ள இயலுகிறது.

இந்த உடற்பயிற்சி, தவம் இவை இரண்டும் பாவப் பதிவுகளை எல்லாம் போக்க வல்லவை. எவ்வாறு என்றால் நாம் முன்பின் செய்த தவறுகள் காரணமாக உடல் அணு அடுக்குச் சீர் குலைந்து அதன் மூலமாக சீர்குலைந்த இடத்தில் மின்சாரக் குறுக்கு (short circuit) ஏற்பட்டு மனத்திலேயும் உடலிலேயும் நோய் தோன்றி அது பரவிப் பின்னர் நிலைத்தும் இருக்கிறதே அது வினைப்பதிவாகும். அதுதான் வித்தின் வழியாகக் குழந்தைகளுக்குக் கூட போவது. இந்தப் பழிச்செயல் பதிவுகளிலிருந்து அதனால் விளையும் துன்பங்களிலிருந்து நீங்கிக் கொண்டு விடுதலை பெற்றுத் தூயவர்களாக உடலாலும் உள்ளத்தாலும் நன்மக்களாக வாழ வேண்டும் என்ற ஒரு நல்ல நோக்கத்தோடு இந்த யோகமானது வகுக்கப்பட்டது.

உடலில் ஏற்கனவே இருக்கக்கூடிய நோய்களைப் போக்கிக் கொள்வது என்பது முறை. அதைச் சிகிச்சை (Curer) என்று சொல்வார்கள். நோயைத் தீர்த்துக் கொள்வதற்கும் மேலான சிறந்த ஒரு முறை என்ன என்றால் நோய் வராமலே தடுத்துக் கொள்வது (prevention) என்பதாகும். அவ்வாறு தடுத்துக் கொள்ளக்கூடிய ஒரு விழிப்பு அதற்குரிய செயல் ஒழுங்கு முறைகள் அவற்றைக் கைக்கொண்டால் நோய் வந்தபிறகு தீர்த்துக் கொள்வதை விடத் தடுத்துக் கொள்வது சுலபமானது எனத் தெரியவரும்.

◀ வேதாத்ரி மகரிஷி



### யோகத்தின் முதல் வாயில்படி!

ஆதிசங்கரர் இயற்றிய விவேக சூடாமணி என்ற நூலிலுள்ள 367ஆம் சுலோகம் இவ்விதம் கூறுகிறது. "1. மௌனம், 2. உடலைக் காப்பாற்றுவதற்கு அவசியமில்லாத பொருளை ஏற்றுக் கொள்ளாமல் இருத்தல் (அபரிக்ரகம்), 3. வைராக்கியம், 4. அவாவின்மை, 5. எப்போதும் தனிமையில் நாட்டம்" ஆகியவை யோகத்தின் (ஆன்மிக வாழ்க்கையின்) முதல் வாயில் படியாகும்.

மன்மத ஆண்டு மாசி மாதம்
13.02.2016 முதல் 13.03.2016 வரை




எதை செய்தாலும் அதில் ஆழமான சிந்தனையை வைத்து கருத்துடன் செயல்படும் மிதுன ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு சந்திரனும் சனியும் சாதகமான சூழ்நிலையில் இருப்பதால் தொழிலில் நல்ல வெற்றியை பெற்று வளமுடன் வாழ்வீர்கள். முன் யோசனைகளுடன் செயல்படுவீர்கள். பொருளாதாரத்தில் வளர்ச்சியை பெறுவீர்கள்.

**பணியாளர்களுக்கு**

சங்கடங்கள் விலகி தெளிவுகளை பெறுவீர்கள். குறுகிய காலத்தில் பல மாற்றங்கள் உண்டாகும். நீங்கள் தேர்வு செய்த தொழிலை விட்டு மாறி வேறு தொழிலில் ஈடுபட வேண்டி வரும். தொழிற்சங்க கூட்டங்களில் உங்களின் கருத்துகளை தெளிவாக வெளிபடுத்துவீர்கள்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொது நலனில் அக்கறை காட்டும் நீங்கள் உங்களின் குடும்பத்தில் சச்சரவுகளை அடைவீர்கள். தடைகளை எல்லாம் படிப்படியாக உடைத்து எறிவீர்கள். மருத்துவ உதவிகளை செய்து மக்களுக்கு ஆதரவாக செயல்படுவீர்கள். மேலும் பொருளாதார வளர்ச்சியும் பெறுவீர்கள்.

**வியாபாரிகளுக்கு**

தொழில் சார்ந்த வெளியூர் பயணம் மிகவும் பயனுள்ளதாக அமையும். தங்கநகை கடல் சார்ந்த பொருட்கள் விற்பனை நல்ல ஆதாயம் தரும். தொழிலாளர்களின் உதவியை பெற்று வியாபார வளர்ச்சியை மேம்படுத்திக் கொள்வீர்கள். வங்கிகளின் உதவியும் கிடைக்கும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினர் நல்ல மாற்றங்களை உருவாக்குவீர்கள். சமுதாயத்திலும், கோட்பாடுகளிலும் சில சீர் திருத்தமான வழிகளை உருவாக்கும் வாய்ப்புகள் அமையும். நடன கலை மேம்பாடுகளுக்கு பல உதவிகளை செய்து தருவீர்கள்.

**பெண்களுக்கு**

பெண்களின் மதிப்பு உயரும். பல சாதனைகளை செய்து முடிப்பீர்கள். பெண்களின் வளர்ச்சிக்கு பக்கபலமாக அமைவீர்கள். சுய தொழிலில் கவனமுடன் செயல்பட்டு வருவாயை பெருக்கிக்கொள்வீர்கள்.

**மாணவர்களுக்கு**

ஆற்றலும் சேவையும் கலந்த கல்வியை பெறுவீர்கள். குடும்பத்தில் சுபகாரியம் நிறைவேறும். வானியல் ஆராய்ச்சி, நிலம் சார்ந்த கல்வி சிறப்பாக முன்னேற்றம் தரும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

05.03.2016 சனி காலை 08.39 முதல் 07.03.2016 திங்கள் பகல் 01.37 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**

**மிருகசீரிடம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வும், சலுகைகளும் கிடைக்கும். கலைத்துறையினருக்கு வாய்ப்புகள் அமையும். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

**திருவாதிரை 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

வேலைவாய்ப்புகளுக்கு முயற்சி செய்து வந்தவர்களுக்கு வாய்ப்புகள் அமையும். சாதகமான சூழ்நிலை உண்டாவது உங்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையும். பொருளாதார நன்மைகளை பெறுவீர்கள்.

**புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு நல்ல வாய்ப்புகளும் தொழில் முன்னேற்றமும் உண்டாகும். கனவுகளை நனவாக அமைத்துக் கொள்வீர்கள். பொருளாதாரம் சிறக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** பச்சை, வெண்மை, நீலம்

**அதிர்ஷ்ட திசைகள் :** மேற்கு, வடமேற்கு, கிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள் :** புதன், திங்கள், சனி


**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

வெள்ளி, செவ்வாய்க்கிழமை ராகு காலத்தில் வீட்டில் விளக்கு ஏற்றி மகாலெட்சுமி ஸ்லோகம் சொல்லிவர பொருளாதார வளர்ச்சியை பெறுவீர்கள்.



**அன்ன வாகனம்**

பிரம்மாவின் வாகனம் அன்னம். என்றாலும் அன்னம் எல்லா தேவ தேவியருக்கும் பொதுவான வாகனமாகும். எனவேதான் ஆலயங்களில் அன்ன வாகனம், பல்வேறு தெய்வங்களுக்கும் உற்சவ காலத்தில் வாகனமாக இருப்பதை நாம் பார்க்கிறோம்.



# துர்வாச முனிவருக்கு பணிவிடை செய்தான் துரியோதனன்!

பாண்டவர்கள் வனத்தில் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதை துரியோதனனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவனது இதயம் கனன்று எரிந்தது. அவர்களை அழிக்க மீண்டும் நண்பர்களுடன் சேர்ந்து புதிய திட்டத்திற்கான ஆலோசனைகளில் ஈடுபட்டான்.

அந்த வேளையில் ஒரு நாள் துர்வாச முனிவர் தன் பத்தாயிரம் சீடர்களுடன் துரியோதனனைக் காண வந்தார். பணிவுடன் அவரை வரவேற்றான் துரியோதனன். அவரது சாபத்திற்கு பயந்து, தானே முன்னின்று அவருக்கு வேண்டிய பணிவிடைகளை எல்லாம் இரவு பகல் பாராமல் செய்தான். அவர் சில வேளைகளில் திடீரென்று, "பசியாக இருக்கிறது. உடனே உணவு கொண்டு வா" என்பார்.


அவசர அவசரமாக எல்லாம் தயாரித்து வைத்தால் நிதானமாகக் குளித்து முடித்து வெகு நேரம் கழித்து வந்து, "இன்று நான் எதுவும் சாப்பிடப் போவதில்லை" என்று கூறிவிட்டுச் சென்று விடுவார். சில வேளைகளில் நடுஇரவில் எழுந்து உணவு தயார் செய்யுமாறு கூறுவார். ஆனால் அதை உண்ணவே மாட்டார். துர்வாசரின் வினோதப் போக்குகளையோ நடத்தையையோ கண்டு துரியோதனன் சற்றும் கலங்கவில்லை. மாறாக, அவன் மனத்தில் பாண்டவர்களை அழிப்பதற்கான திட்டம் ஒன்று உருவாயிற்று.



சில நாட்களுக்குப் பின்னர் துர்வாச முனிவர் துரியோதனனை அழைத்து, உன் வேலைகளால் மகிழ்ந்தேன். எந்த வரமானாலும் கேள், தருகிறேன்" என்றார். இந்தத் தருணத்தைத் தானே எதிர்பார்த்துக் காத்திருந்தான் துரியோதனன்! எனவே மிகவும் பணிவுடன், "முனிபுங்கவரே, தங்களுக்கும் தங்கள் சீடர்களுக்கும் பணிவிடை செய்வதற்கான பேற்றை நான் பெற்றது போல, காட்டில் வாழ்கின்ற என் தமையனான யுதிஷ்டிரரும் மற்ற சகோதரர்களும் பெற வேண்டும். இது ஒன்றே நான் வேண்டும் வரம். தாங்கள் சிரமம் பாராமல் தங்கள் சீடர்களுடன் காம்யக வனம் செல்ல வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான். பாண்டவர்கள் உண்டு முடிந்த பின் முனிவரும் சீடர்களும் சென்றால் அவர்களுக்கு உணவளித்து திருப்தி செய்ய முடியாமல் போய்விடும். இயற்கையாகவே முன்கோபியான முனிவர் பாண்டவர்களைச் சபித்து விடுவார்.

தன் வெகு நாளைய ஆவலான பாண்டவர்களை அழிப்பது என்ற எண்ணமும் சுலபமாக நிறைவேறிவிடும் என்பது துரியோதனனின் வஞ்சகத் திட்டமாக இருந்தது. பாண்டவர்கள் உணவு கொள்கின்ற நேரத்தை அறிந்திருந்த அவன், முனிவரிடம் அவர்கள் செல்ல வேண்டிய நேரத்தையும் குறிப்பிட்டான்.

(தொடரும்...)



## தென்னகத்துக் காசியாய் போற்றப்படும்

# ஸ்ரீ ராமநாத சுவாமி ஆலயம்!


**காசிக்கு புனித யாத்திரை செல்வது ராமேஸ்வரத்திற்குச் சென்று முடிவு பெறுகிறது என சொல்லப்படுகிறது.**

ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஒரு நகரம் ராமேஸ்வரம் மாவட்டத்திலிருந்து தள்ளி இருக்கும் ஒரு சிறு தீவு. பாம்பன் கால்வாய் வழியாக இணைக்கப்பட்டுள்ளது. காசியோடு எண்ணத்தகுந்த அல்லது தென்னகத்து காசி என்று அழைக்கப்படும் புனிதத்தலமாகும் இது.

இங்குள்ள இறைவன் ராமலிங்கம் அல்லது ராமநாதர். பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்களுள் இதுவும் ஒன்று. மோட்சத்தை அடைவதற்கு ராமேஸ்வரத்தைச் சென்று தரிசிப்பது முக்கியமான நிபந்தனையாகும். இராமாயணக் கதையின் பல நிகழ்ச்சிகள் இங்கு நடைபெற்றதாகக் கருதப்படுகிறது. பலராலும் தரிசிக்கப்படும் மிக முக்கிய தலமாகும் இது. இதன் பரப்பளவு 61.8 சதுர கி.மீட்டர், சங்கு வடிவத்தில் உள்ளது. மன்னார் வளைகுடாவின் அருகில் உள்ளது.

ராமாயணத்தில் கூறப்படுவது இங்கிருந்துதான் ராமர் இலங்கைக்குப் பாலம் கட்டினார். பின்னர் ராவணனைக் கொன்று சீதையை மீட்டு வரும் போது இங்கு தங்கி ராமர் தன் பாவத்தைப் போக்க சிவனை ஆராதிக்க எண்ணினார். காசியிலிருந்து சிவலிங்கத்தைக் கொண்டு வருமாறு அனுமானை அனுப்பினார். அனுமான் வருவதற்கு நேரமானதால் சீதை மணலால் ஒரு லிங்கத்தைச் செய்து கொடுக்க ஸ்ரீராமர் அதைப் பூசித்தார். அவர் பூசித்ததால் அதன் பெயர் ராமநாதன் அல்லது ராமலிங்கம் என்பதாயிற்று. அந்த இடம் ராமேஸ்வரம் என்று பெயர் பெற்றது. அனுமான் கொண்டு வந்த லிங்கம் காசிலிங்கம் அல்லது அனுமான் லிங்கம் என்பதாகும். ராமநாதரைத் தரிசிப்பதற்கு முன்பு காசி லிங்கத்தை வணங்க வேண்டும். அருகிலுள்ள தேவிப்பட்டினத்திலிருக்கும் திலகேஸ்வரரையும் வணங்கிவிட்டு இலங்கைக்கு ராமர் சென்றதாகக் குறிப்பிட்டுள்ளது.

திராவிடக் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாக ராமநாத சுவாமி கோயில் திகழ்கிறது. இந்தியாவிலேயே மிக நீளமான பிரகாரம் இங்கு அமைந்துள்ளது என்பது பெருமைக்குரிய செய்தியாகும். 12ஆம் நூற்றாண்டு வரை கூரைவேய்ந்த ஒரு குடிசையில் இந்த இறைவர் வைக்கப்பட்டு இருந்தது. இலங்கையின் அரசனான பராக்கிரமபாகு முதன் முதலாக ஒரு கட்டடத்தை இங்கு கட்டினார்.





ராமநாதபுரத்து சேதுபதி மன்னர்கள் கோயிலின் மற்ற பகுதிகளைக் கட்டினார்கள். பல்லவர் காலப் பாணியை சில விமானங்களில் காணலாம். 1316 நூற்றாண்டுகளில் மற்றவை சேர்க்கப்பட்டன. 3 பிரகாரங்களாலான நீண்ட தாழ்வாரம் 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

அந்தப் பிரகாரங்கள் தவிர அழகிய சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த தூண்கள் மிகச் சிறப்பானவை. 1200 (எண்ணிக்கை வேறுபடுகிறது) மிகப் பெரிய தூண்கள் புகழ் பெற்றவை. மிகப் பெரிய கோபுரமும், மிகப் பெரிய நந்தியும் இந்தக் கோயிலுக்கே உகரித்தானவை. இவற்றைக் கட்ட உபயோகிக்கப்பட்ட பாறைகள் இந்த ஊருக்கு அருகில் கிடைப்பதில்லை. அந்தக் காலத்திலேயே எங்கிருந்தோ இவை இங்கு கொண்டு வரப்பட்டன என்பது வியப்புக்குரிய செய்தி அல்லவா? கிழக்குக் கோபுரம் 126 அடியில் 9 நிலைகளை உடையது. மேற்கு கோபுரம் அவ்வளவு உயரமானதல்ல. கோயிலின் மிகப் பெரிய நந்தி 18 அடி உயரமும் 12 நீளமும் கொண்டு பிரம்மாண்டமாக உள்ளது.

கடல் நீரில் நீராடிய பிறகு கோயில் வளாகத்திலுள்ள 22 கிணறுகளிலும் யாத்திரிகர்கள் குளிக்கிறார்கள். ஒவ்வொரு கிணற்று நீரும் வெவ்வேறு ருசியானவை. நாட்டின் தென் கோடியிலுள்ள இத்தலத்தை தரிசிப்பதால் மனம் நெகிழ்வுறுகிறது. இராமாயணத்தோடு தொடர்புடைய பல நிகழ்வுகளும் மனதில் நிழலாடுகின்றன. அமைதி ததும்பும் மனதோடு மற்றைய இடங்களைப் பார்க்கச் செல்லலாம்.

பார்க்க வேண்டிய இடங்கள்

## கந்தமாதன பர்வதம்

இந்தத் தீவின் மிக உயரமான இடம் கந்தமாதனபர்வதம் ஆகும். இங்கிருந்து பார்த்தால் இராமேஸ்வரத்தை முழுமையாகப் பார்க்க முடியும். அங்குள்ள சன்னதியில் ஒரு சக்கரம் உள்ளது. அதில் ஒரு காலடி தெரிகிறது. அது ராமனின் திருவடிவாகும்.

## தனுஷ்கோடி

ராமேஸ்வரத்திலிருந்து 8 கி.மீ. தொலைவில் அந்தத் தீவின் தெற்கு முனையில் தனுஷ்கோடி உள்ளது. ராமனின் வில் என்பது அதற்குப் பொருள். இலங்கைக்கும் இந்தத் தீவிற்கும் இடையேயுள்ளது. ஆடாம்ஸ்பிரிட்ஜ். குரங்குகள் உதவியுடன் ராமர் கட்டிய பாலத்திற்குப் பயன்பட்ட பாறைகளே அங்கு கிடப்பதாகச் சொல்லப்படுகிறது.

தனுஷ்கோடியில் அமைதியான கடற்கரை உள்ளது. பக்திப் பிரவாகத்தில் மூழ்கி இருக்கும் யாத்திரீகர்கள் அக்னிதீர்த்தத்திலும் மற்ற கிணறுகளிலும் நீராட அங்குமிங்கும் அலைந்து கொண்டிருப்பார்கள். இந்த அமைதியான கடற்கரையில் யாருடைய தொந்தரவும் இல்லாமல் கடலை ரசித்தவாறு உட்கார்ந்திருக்கலாம். 1964 ஏற்பட்ட புயலின்போது தனுஷ்கோடி முழுவதுமே கடல் நீரால் அடித்துச் செல்லப்பட்டது. அங்குள்ள கோதண்டராமர் கோயில் மட்டும் எஞ்சி நிற்கிறது. ராவணனின் சகோதரன் விபீஷணன் இங்கு வந்து ராமனிடம் சரணடைந்ததாகச் சொல்லப்படுகிறது.

லக்ஷ்மி விஸ்வநாதன்



தாங்க முடியாத அஜீரணம் இருப்பவர்கள் காலையில் வெறும் வயிற்றில் ஒரு வெற்றிலையுடன் 10 மிளகையும் வாயில் போட்டு கடித்து சுவைத்து சாப்பிட்டு வந்தால் 10 நாளில் அஜீரணம் ஓடிவிடும்.

வலாடத்துக்குமேல் அதாவது தலைக்கு மேல் பூரண சந்திரன் போன்ற ஜோதியை தியானித்து வந்தால் ஆயுள் கூடும். சகல வியாதியும் போகும். இடைவிடாது எப்போதும் பார்வையின் முன் பாகத்தில் மஞ்சள் நிறமுள்ள மகாபிரகாசமான ஜோதியை தியானம் செய்து வருவதால் மருந்து இல்லாமலே எல்லாவிதமான வியாதிகளும் குணமடைந்து விடும். நரை திரை ஏற்படாது. தலை உஷ்ணம் அடைந்தாலும் தலை சுற்றல் இருந்தாலும் தலை மேல் வெள்ளை வர்ணம் உள்ள ஜோதி அல்லது பூர்ண சந்திரனை தியானித்தால் 7 அல்லது 8 நிமிஷங்களிலேயே குணம் தெரியும்.

தாகம் ஏற்பட்டு தவிக்கும் போது நாக்கின் மேல் கசப்பான பதார்த்தம் ஒன்று இருப்பதாக தியானித்தால் தாகம் அடங்கும். சீரம் உஷ்ணம் அடையும் போது குளிர்ச்சியான பொருள்களை தியானம் செய்யவும். சீரம் குளிர்ச்சி அடைந்தால் உஷ்ணமானதை தியானம் செய்தால் சீரம் சூடு ஏற்பட்டு சமமாகிவிடும்.

தினந்தோறும் இரண்டு நேரம் ஸ்திர ஆசனத்தில் இருந்து கொண்டு நாபியை நோக்கி கண் இமைக்காமல் பார்த்து வந்தால் ஜீரண சக்திகள் சீரடைந்து உடல் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கும். எந்த வியாதியும் வராது.

சிவப்பு நாயுருவி வேரை தாயத்தில் அடைத்து கையில் கட்டி வந்தால் காற்று, பூதங்கள் சேஷ்டைகளால் ஏற்பட்ட சுரம் தணியும். பகலில் இடது நாசியிலும் இரவில் வலது நாசியிலும் எவன் சுவாசம் விடுகிறானோ அவனது சரீரத்தில் எந்த வியாதியும் அணுகாது. நாளுக்கு நாள் உடல் தேஜஸ் அதிகரிக்கும். இந்த அப்பியாசத்துக்கு ஆரம்பத்தில் ஒரு மாதம் பஞ்சை வைத்து அடைத்து அப்பியாசித்து வந்தால் பிறகு இதுவே பழக்கத்துக்கு வந்து விடும். பஞ்சு வைக்க தேவையில்லை.

# மஞ்சள்நிற ஜோதியை தியானம் செய்யுங்கள்



ஒவ்வொரு சுவாசமும் மூக்கிலிருந்து வெளியேறும் போது 12 விரல்கடை நீளமும் உள்ளே இழுக்கும் போது 10 விரல்கடை நீளமும் உள்ளதாக இருக்கிறது. ஆதலால் சுவாச அளவை வெளியில் விடுவதை குறைத்து வந்தால் நமது ஆயுளை நீடித்துக் கொள்ளலாம்.

**உதாரணமாக சுவாசம்**

பாடும் போது 16 விரல்கடை நீளுகிறது

சாப்பிடும் போது 20 விரல்கடை நீளுகிறது

நடக்கும் போது 24 விரல்கடை நீளுகிறது

தூங்கும் போது 60 விரல்கடை நீளுகிறது

இந்த நீளம் குறையக் குறைய ஆயுள் பரிமாணம் நீளும். சாதாரணமாக வெளியேறும் 12 விரல்கடை சுவாசத்தை 11 விரல்கடையாக குறைத்தால் அவனுக்கு நாடிகளில் பலம் ஏற்படும். 10 ஆக குறைத்தால் நல்ல சுகம் தெரியும். 9 ஆக குறைத்தால் நல்ல



ஞாபக சக்தி, கவனம் ஏற்படும். 8 விரல் சுவாசம் ஓட்டினால் வாக்கு வன்மை, வாக்கு பலிதம் ஆகியவை ஏற்படும். 7 விரல் கடையில் தூரதிருஷ்டியும், 6 விரல்கடையில் ஆகாச மனமும், 5 ஆனால் காற்றில் மிதக்கவும், 4 ஆனால் சகலகலா வல்லவனும், 3 ஆனால் நவநிதிகளும், 2 ஆனால் கண்ணில் படாமல் மறைவாக இருக்கக்கூடிய சக்தியும் கிடைக்கிறது. ஊசி நுனி அளவு சுவாசம் ஓடினால் சிரஞ்சீவி ஆகிறான் என சிவஸ்வரோதயம் என்ற நூல் கூறுகிறது.

புருஷனுக்கு வலது நாசியிலும், ஸ்திரீக்கு இடது நாசியிலும் சுவாசம் ஏற்படும் சமயம் பார்த்து தாம்பத்திய சுகம் அனுபவிக்க வேண்டும். இதனால் இருவரின் சரீரமும் சரியாக இருக்கும். அன்னியோன்யமும் வளரும்.

சம்போகத்திற்கு பிறகு தம்பதிகள் இருவரும் வயிறு நிறைய குளிர்ந்த ஜலம் சாப்பிட வேண்டும். இதனால் சரீரம் நன்றாக இருக்கும். நித்தியப்படி சுமாராக ஒரு டேபிள் ஸ்பூன் நெய்யில் 8 10 மிளகை பொரித்து அந்த நெய்யையும் மிளகையும் சாப்பிட்டு வந்தால் ரத்தம் சுத்தமாகி சரீரம் புஷ்டியுடன் இருக்கும். தினந்தோறும் சிவப்பு வெளுப்பு கறுப்பு வர்ணங்களை தியானித்து வந்தால் தேகத்தில் இருந்து எல்லாவிதமான கெட்ட அம்சங்களும் நீங்கி விடும்.

காலை மாலை இரு நேரமும் 15 நிமிடத்துக்கு குறையாமல் ஆள் காட்டி விரலை இரு காது துவாரங்களுக்குள்ளும் நுழைத்து வைத்து இருந்தால் காது ரோகங்கள் நீங்கும்.

◂ என்.தம்மண்ணா செட்டியார்



## ஜபமாலையின் முக்கியத்துவம்!

மிக உயர்ந்த ஆன்ம பக்குவம் பெற்றவர்களும் கூட, ஜபமாலையைப் பயன்படுத்தி ஜபம் செய்யும் வழக்கம் உடையவர்களாக இருந்திருக்கிறார்கள். ஆதலால் ஜபமாலையின் முக்கியத்துவத்தை நாம் சாதாரணமாக நினைத்துவிடக் கூடாது. ஜபமாலையைக் கொண்டு ஜபம் செய்வது தான் நல்லது. அது இயலாத நேரங்களில் வேண்டுமானால், ஜபமாலை இல்லாமல் நீங்கள் ஜபம் செய்யுங்கள். உள்ளத்தில் தெய்வீகச் சிந்தனைகளையே, அருள் மயமான சிந்தனைகளையே, தூய சிந்தனைகளையே எப்போதும் தொடர்ந்து கொண்டிருப்பவர்களுக்கு வேறு ஜபமாலை வேண்டாம். மற்றவர்களுக்கு ஜபமாலையின் உதவி அவசியம் என்று கருதப்படுகிறது.

# திருமூலர் புகழ்

## என்றும் நிலைப்பதாயிற்று!

**திருமந்திரம் பாயிரச் செய்யுள் உபதேசம் 30, மந்திரம் 300 (திருமந்திரமாலை), தமிழ் 3000 ஆகிய நூல்களைத் தாம் இயற்றியதாகவும் இம்மூன்றும் ஒரு தன்மையன என்றும் திருமூலர் கூறுகின்றார்.**

இவற்றுள் நமக்குக் கிடைப்பவை ஒருசில மட்டுமே.

"நந்தியருள் பெற்ற நாதனை நாட்டின் நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி மன்று தொழுது பதஞ்சலி வியாக்ரமர் என்றிவர் என்னோடெண்மருமாமே" என்று சிவலோகத்தில் ஈசனிடம் உபதேசம் பெற்ற எண்மரைப் பற்றிக் கூறுகிறார்.

நந்திகள் நால்வர் என்பது சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகியோராவார். இவர்களுடன் பதஞ்சலி மாமுனிவர், வியாக்ரம பாத முனிவர், அகத்தியர், திருமூலர் ஆகியோர் ஒரு சாலை மாணாக்கர்களாக திருமந்திரத்துள் குறிப்பிடப்படுகின்றது.

திருமூலருக்கு ஏழு பிரதான சீடர்கள் இருந்தமை திருமந்திரப் பாட்டால் புலனாகிறது.

"மந்திரம் பெற்ற வழிமுறை
மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன்
உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோ
டிந்த எழுவரும் என் வழியாமே."

என்பதனால் மாலங்கன், இந்திரன், சோமன் (சந்திரன்), பிரமன், உருத்திரன், காலாங்கி, கஞ்ச மலையன் இந்த எழுவரும் அவர் சீடர்கள் என்று திருமூலரால் உணர்த்தப் பெறுகின்றது.

இவர்களில் மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், ருத்திரன் ஆகிய ஐவரும் திருமூலர் சிவலோகத்தில் இருந்த காலத்திலும் மற்ற இருவர் பூலோகத்தில் வசித்த காலத்திலும் சீடர்களானார்கள் என்று கருதப்படுகிறது.

திருமூலர் பன்னிரெண்டு மடங்களை நிறுவி அவற்றுக்குத் தலைவர்களையும் நியமித்தார். அவருக்குச் சீடர்கள் பதினாறு பேர்கள். அப்பதினாறு சீடர்களில் காலாங்கியும், கஞ்ச மலைச் சித்தருமே முக்கியமானவர்கள் என்று அகத்தியர் பன்னிரெண்டாயிரம் கூறுகின்றது.

காலாங்கர், அகோரர், மாளிகைத் தேவர், நாதாந்தர், பரமானந்தர், போகதேவர் முதலானோர் தமதருளால் அழியாமை பெற்றவர்கள் என்று திருமூலரே தம் திருமந்திரத்துள் குறிப்பிடுவதால் இவர் தம் பெருமை புலனாகிறது.

சிதம்பரம் நடராஜர் சந்நிதியில் உள்ள ஸ்ரீ மூலர் சந்நிதியில் உள்ள இலிங்கம் சுயம்புவாகத் தோன்றியது என்று கூறப்படுகிறது. இங்கு



பதஞ்சலி, வியாக்ரபாத முனிவர்கள் சிலா ரூப மாக எழுந்தருளியுள்ளனர்.

"நானென்ற மேலச் சிதம்பரத்தில்
நாடிநின்ற திருமூலர் நாட்டந் தானே."

என்று போக சித்தர் தமது ஜனன சாகரம் 312ஆவது பாடலில் திருமூலர் சமாதியில் வீற்றிருக்கும் இடத்தைக் குறிப்பிடுகின்றார்.

அவர் குறிப்பிடும் திருமூலர் லிங்க வடிவாய் அமர்ந்துள்ள இடம் தில்லைத் திருக்கோயிலில் உள்ள ஸ்ரீ மூலர் சந்நிதி என்று கருதப்படுகின்றது.

பாண்டிய மன்னனின் ஆணைப்படி திருமூலர் சமாதியை மூலவராகக் கொண்டு கருவூரார் சிதம்பரம் கோயிலை அமைத்தார். பிற்காலத்தில் திருமூலர் லிங்க வடிவமாக எழுந்தருளிய இடம் என்பது மறைக்கப்பட்டுச் சிவபெருமான் சுயம்பு லிங்கமாக எழுந்தருளியுள்ள இடமாகக் கற்பிக்கப்பட்டு உமாபார்வதி என்ற பெயரில் ஒரு அம்மன் சந்நிதியையும் இக்கோயிலில் சேர்த்து விட்டார்கள் என்று ஆய்வாளர் பலரால் நம்பப்படுகிறது.

திருமூலருக்குப் பின் காலாங்கி நாதரின் வழியாகப் போக சித்தரும் அவரின் சீடர்களும் சித்தர் நெறியை உலகெங்கும் பரவச் செய்தார்கள். அவர்கள் எல்லோருக்கும் "திருமூலவர்க்கத்தார்" என்ற சிறப்புப் பெயர் உண்டாயிற்று. அதனால் திருமூலரின் புகழ் என்றும் நிலைப்பதாயிற்று.

◀ சி.எஸ். முருகேசன்




# பழனி முருகனை ஆராதிப்போம்!

சைவாகமங்கள் பழனி மலையில் ஆண்டிக் கோலத்தில் அருள் பாலித்து வரும் முருகனை வர்ணிக்கும் போது, "கல்பத்ருமம் ப்ரண்மதாம்.." எனக் குறிப்பிடுகிறது. "கல்பத்ருமம்" எனில், சுவர்க்கத்தில் உள்ள ஒரு மரம் விரும்பியதைக் கொடுக்கும் கற்பக மரம் நமக்கு நல்லவை எவையோ அவை அனைத்தையும் நமக்கு அளித்து, நமக்கு அருள்புரிந்து வரும் கடவுளே பழனி மலை முருகன். நேரில் சென்று வழிபட்டு வாருங்கள். உங்களுடைய வாழ்க்கையில் நல்ல மாற்றம் காண்பீர்கள்.

தண்டம் எனில் ஒரு கம்பு எப்படி ஒரு எலும்பு சிகிச்சை நிபுணர் கையில் ஒரு கம்பை வைத்துக் கொண்டு நம்மைச் சோதித்துப் பார்த்து, நமது நோய்களை அறிந்து அவற்றைக் குணப்படுத்துகிறாரோ, அது போன்று நமது கர்மபலன்களை அறியச் செய்து, அவற்றைக் களைய கந்தன் எடுத்த கோலமே ஆண்டிக்கோலம்.

போகர் போன்று பல சித்தர்கள், இன்றளவும் தங்களுடைய சூட்சும சரீரத்தில் வந்து தரிசித்து ஆனந்தம் அடையக்கூடிய க்ஷேத்திரம் பழனி மலை. பல ரகசியங்களைத் தன்னுள் அடக்கியது. நாமும் பேராசைகளை விட்டொழித்து நல்வழியில் செல்ல எல்லாம் வல்ல கந்தனை வழிபடுவோம்.

# வியாபாரம், தொழில் பெருக
# விநாயகர் அருள்!



***வி**யாபாரம் தொழில் பெருக மந்திரங்கள் என்ற பெயரில் குறிப்பிட்டிருக்கும் மந்திரங்கள் எதுவுமே கற்பனையல்ல. பல்வேறு சந்தர்ப்பங்களில் தெய்வ அருள் பெற்றவர்களால் பாடப் பெற்ற புனிதமான மந்திரப் பாடல்களாகும். எந்தத் துறையில் முன்னேற வேண்டும் என்று விரும்புகிறார்களோ அந்தத் துறையை மனதிற்கொண்டு, பக்தி மிகுந்தவர்களாய் மட்டுமன்றி நம்பிக்கை மிகுந்தவர்களாய், தூய உள்ளத்தினராய் உச்சரித்து வர வேண்டும் என்பது தான் முக்கியம்.*

ஆதிசங்கர பகவத்பாதர் அவர்களுடையவும், இன்னம் பல்வேறு அருளாளர்களுடையவும் அற்புதமான மந்திரங்கள் இடம் பெற்றுள்ளன. பல பெரியோர்கள் இந்த மந்திரங்களை முறைப்படி உச்சரித்துச் சிறந்த பலன்களைப் பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

"திருவாக்கும் செய் கருமம் கைகூட்டும்
செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்
உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை
முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை"

இது விநாயக அகவல். எல்லா நலன்களையும் குறைவறத் தரும் இணையிலா ஆற்றலைப் பெற்று விளங்குகின்ற யானை முகத்தானை வானோரும் கைகூப்பும் போது சாதாரண மக்களாகிய நாமும் கைகூப்பித் தொழுவது முறைமையாகும் என்பதினால் அல்ல. இப்பெருமானை வணங்கித் தொடங்குகின்ற எல்லாக் காரியங்களும் இனிதே நிறைவேறும் முழுமுதற் கடவுளாக விளங்கும் மூஷிகவாகனனான இப்பெருமான் அனைவருக்கும் அருள் தந்து காப்பவர்.

பிள்ளையார் சுழி போட்டுத்தான் எதையும் தொடங்குவது மரபு. அவர் துணையிருப்பார். விக்கினம் ஏதும் வராமல், விக்னேசுவரர் வியாபாரத்தையும், ஆரம்பிக்கும் தொழிலையும் சிறப்பாக நடைபெறச் செய்து இலாபத்தை அள்ளி அள்ளித் தருவார் என்பதை விடவும் முறையான இலாபத்தைத் தந்து வியாபாரம், தொழில் பெருகத் துணையாக நிற்பார் என்று நம்புவோம்.

மஞ்சள், பசுமஞ்சாணம், மண், கல், பஞ்சலோகம், வெள்ளி, கட்டை என்று எதிலும் இவரின் உருவத்தை வடித்து வழிபடலாம் என்பதிலேயே மகத்தான தத்துவம் மறைந்து நிற்கிறது. எல்லாருமாகி எதிலுமாகி இணைந்து நிற்பவர் இயைந்து நிற்பவர் இப்பெருமான் என்ற பெரும் தத்துவம் நிலைத்து நிற்கிறது.

**வியாபாரம் தொழில் துவங்குவோருக்கு கணேச மந்திரம்**

"மஹாகணபதி புத்தி ப்ரிய
ஷிப்ரப்ஸாததந

ருத்ர ப்ரியோ கணாத்ய க்ஷ உமாபுத்ரோக நாஸத"

என்ற இந்த மந்திரத்தை காலை வேளையில் குளித்து முடித்த பின்னர் பிள்ளையாரப்பனின் படத்திற்கு அல்லது சிலைக்கு மாலையணிவித்து, ஊதுபத்தி கொளுத்தி வைத்து நைவேத்தியப் பொருளாக அவல் அல்லது பொரி படைத்துத் தினந்தோறும் பத்து முறை உச்சரித்தால் போதும். எந்தவிதமான இடையூறுயின்றிச் சிறப்பான முறையில் வியாபாரம், தொழில் நடந்து வரும். நாளுக்கு நாள் பெருகிவரும்.

"தநதாந்யபதிர் தந்யோ தந்தோ தாணீதர த்யானநக ப்ரகடோ த்யேய த்யோநோத்யாந பராயண"

இந்த மந்திரத்தை தினந்தோறும் பிள்ளையாரப்பனை வணங்கியவாறு பத்துதரம் நம்பிக்கையுடன் உச்சரித்து வந்தால் வியாபாரம், தொழில் இவற்றின் மூலம் செல்வம் கொழிக்கும் என்பது உறுதி.

## வியாபாரம் தொழில் மேன்மையடைய

தொட்டதெல்லாம் துவங்கி தொழில், வியாபாரம் சிறப்புடன் நடைபெறுவதற்கு மந்திரம் பெரிதும் துணையாகும். எதிர்பார்த்த பலன் கிடைக்குமோ, கிடைக்காதோ என்ற சந்தேகம் ஏற்படக்கூடாது. உறுதியான நம்பிக்கையுடன் உச்சரித்து வர வேண்டும்.

"விஸ்வாஸ பல தாயக" என்பது சமஸ்கிருதப் பழமொழி. எனவே, விநாயகப் பெருமானை ஆழ்ந்த பக்தியுணர்வுடன் பூஜை செய்து வர வேண்டும். பகைவர்களைக்கூட அன்புடன் அழைத்தால் நண்பர்களாகி விடுவார்கள் என்கிறது வேதம்.

"தஸ்மாதய்யா மித்ரௌ ஸங்கத்ய"

என்று வடமொழியில் தெளிவுபடுத்தப்படுகிறது.

எனவே, அருளே வடிவான இறைவனை நாம் வேண்டித் துதித்தால் நிச்சயமாகப் பலன் கொடுப்பான். அவன் திருநாமத்தை உச்சரிக்க உச்சரிக்க நம் எண்ணங்களையெல்லாம் முறையான கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றி வைப்பான்.

வெறும் மந்திரத்தை இதயம் ஒன்றியவர்களாய் உச்சரித்து வந்தால் போதும். வசதியும், வாய்ப்பும் உடையவர்கள் மாலையணிவித்தும், பலவிதமான படையல்களைப் படைத்தும் வழிபட்டு இந்த மந்திரத்தை உச்சரிக்கலாம்.

அப்பமுடன் அவல் பொரியைப் படைக்கவில்லையே என்று இந்தக் "கப்பிய கரிமுகன்" கோபித்துக் கொள்ளவே மாட்டான். இவனை வேண்டி நிற்பவர்களுக்கு உதவி செய்யவே சந்து பொந்துகளில் மட்டுமல்லாமல் ஆற்றங்கரை, குளத்தங்கரை, அரசமரத்தடி என்று எங்கும் நிறைந்து காணப்படுகிறான்.

"மத்தள வயிறனை உத்தமி புதல்வனை"

மட்டவிழ் மலர் கொண்டு பணிந்தால் நமக்கு ஒரு வித நிம்மதி கிடைக்கும் மலர்மாலை எதையுமே சாத்தாமல், "சுக்லாம் பரதம்" என்று சொல்லிக் கொண்டு தலையில் விரல்களை மடக்கி குட்டிக் கொண்டு வேண்டி நின்றாலும் இப்பெருமான் நமக்கு அருள் தருவார். நாம் செய்ய வேண்டுவதெல்லாம் இதயம் ஒன்றியவர்களாக வழிபட்டு வரவேண்டும். அவ்வளவுதான்.

வெறும் அருகம்புல்லைப் பறித்து இப்பெருமானின் தலையில் வைத்தும்கூட வணங்கி வேண்டி நிற்கலாம். இப்பெருமானின் அருளால் "பெட்டிக்கடை" வைத்தவர்கள் எல்லாம் பெரிய வியாபாரிகளாக வளர்ந்து சிறப்புடன் திகழ்கிறார்கள்.

சைக்கிளில் அலுமினியப் பாத்திரங்களை வைத்துக் கொண்டு வியாபாரம் செய்தவர்கள் எத்தனையோ பேர்கள் இன்று "ஓகோ" என்று இந்த ஓங்கார வடிவினனின் அருளால் உயர்ந்திருக்கிறார்கள். பெரிய வியாபாரிகளாகத் திகழ்கிறார்கள்.

◄ ஆபஸ்தம்பன்

### ரத்தினத்திரயம்!



நற்காட்சி, நல் ஞானம், நல்லொழுக்கம் ஆகிய மூன்றையும் சமண சமயம் "ரத்தினத் திரயம்" என்று குறிப்பிடுகிறது. இவற்றில் ஒன்று குறைந்தாலும் ஒருவன் வீடுபேறு பெற இயலாது. வீடுபேறு பெறுவதற்கு உரிய நெறி பயனற்றுப் போகும் என்பது சமண சமயக் கருத்தாகும்.



# ஒருமித்த பிரார்த்தனை சக்தி மிக்கது!



ஒரு மதகுரு கிராமத்து மக்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தார். அப்போது திடீர் என்று நான்கு பேர் நோய் வாய்ப்பட்டிருந்த ஒருவனைக் கட்டிலோடு எடுத்து வந்து அவர் முன் வைத்து அதன் நலத்திற்கும் பிரார்த்திக்கும் படி கேட்டுக் கொண்டனர்.

மதகுருவும் மனம் உருக இறைவனிடம் பிரார்த்தனை செய்தார். அவனைத் தொட்டு ஆசீர்வாதம் செய்தார். மிக விரைவில் நலமாகி விடுவாய் என்று ஆறுதல் சொல்லி அனுப்பி வைத்தார். அவன் நம்பிக்கையுடன் கைகூப்பி புறப்பட்டான்.

பார்த்துக் கொண்டிருந்த பகுத்தறிவுத் தோழர் ஒருவர் கைகளைத் தட்டி போலியாகப் சிரித்தபடி "ஊரை ஏமாத்தறான் பாரு... கடவுளே காப்பாத்துன்னார் காப்பாத்திடுமா? சரியாயிடுமா சரியாயிடுமா? வெறும் வார்த்தைகள் என்ன பண்ணும்?" என்று கிண்டலடித்தான்.

சட்டென்று மதகுரு அவனை நோக்கி "எத்தனையோ மிருகங்களை நான் பார்த்திருக்கிறேன். உன்னைப் போன்ற மோசமான மிருகத்தை நான் பார்த்ததே இல்லை" என்றார்.

அவ்வளவுதான் தொண்டை நரம்பு புடைக்க முகம் சிவக்க கண்கள் தெறித்து விழும்படியாக "என்னை என்ன ஒரு தெரு நாய்னு நெனைச்சிட்டியா...? குதறி எடுத்துடுவேன்" என்று வெறி பிடித்த மாதிரி அவர் கத்த ஆரம்பித்தார்.

மதகுரு உடலோ கண்களில் கருணை பொங்க "என் அன்பு மகனே... உன்னை நான் மிருகம் என்று சொன்னது வெறும் வார்த்தை தானே. அது உன்னை மிருகமாகிவிட்டது. பார்த்தாயா? ஒரு வார்த்தை உன்னில் கோபம் உண்டாக்கும் எனில் மறுவார்த்தை உன்னில் சொஸ்தம் (நோய் நீக்கம்) உண்டாக்கும் என்பதும் உண்மைதானே மிருகம் என்ற வார்த்தை உன்னை மிருமாக்கியது போல், சௌக்யம் என்ற வார்த்தை அவனை சௌக்யமாக்கும் என்பதையும் புரிந்து கொள்ளப்பா" என்றார்.

மனம் ஒருமித்த பிரார்த்தனை சக்தி மிக்கது. பிரார்த்தனை சொற்கள் ஒலி, பொருள் இரண்டையும் கடந்து மந்திரமாகி விடுகிறது.

◄ சுகிசிவம்

**மன்மத ஆண்டு மாசி மாதம்**
**13.02.2016 முதல் 13.03.2016 வரை**




மற்றவரை மதிக்க தெரிந்த உங்களுக்கு அனைவரின் பண்பு களை அறிந்த கடக ராசி வாசகர் களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு புதன் அனுகூலமாக இருப்பதால் கமிசன் தொழிலில் நல்ல வருமானம் கிடைக்கும். பண வசதிகளை பெற்று திறம்பட செயல்படுவீர்கள். சிறு தொழிலில் நல்ல வருமானம் கிடைக்கும்.

**பணியாளர்களுக்கு**

பணியில் கவனமுடன் செயல்படுவீர்கள். நன்மையை கருதி செய்யும் காரியம் கூட சில நேரம் சிறுபிரச்சினையை உருவாக்கும். குரு அருள் கிடைக்கும். புதிய தொழில் நுட்ப சேவைகளை செய்ய வேண்டி வரும். மருத்துவ சலுகைகளை பெறுவீர்கள். பொருளாதார நன்மைகள் கிடைக்கும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொது விடயங்களில் உங்களின் நலனிலும் கவனம் செலுத்தி செயல்பட வேண் டும். வருவாயையும் ஆதாயத்தை யும் கருத்தில் கொண்டு செயல் படாமல் சேவை அடிப்படையில் செயல்பட்டு மக்களிடம் நற் பெயரை பெற்று வளமான வாழ்க்கையை பெறுவீர்கள்.

**வியாபாரிகளுக்கு**

உங்களின் தொழிலில் முன்னேற்றம் பெறுவதுடன் இடம் பொருள் யுக்திகளின் கவனம் செலுத்தி சில மாற்றங்களை செய்து கொள்வீர்கள். கட்டுமான பொருட்களில் விற்பனையில் ஆதாயம் கூடுதலாக கிடைக்கும். அரசின் உதவியும் கிடைக்கும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினர் செயல்பாடுகளில் வேகமாக இருப்பீர்கள். தனிப்பட்ட முறையில் சில நிகழ்ச்சிகளை சிறப்பாக செய்து பாராட்டு பெறுவீர்கள். பிறருக்கு கலை கற்று தருவதில் பெருமிதம் கொள்வீர்கள். பொருளாதார வளர்ச்சி பெறுவீர்கள்.

**பெண்களுக்கு**

பெண்கள் சம உரிமையும், சமத்துவ நிலையும் பெற வேண்டி உரிமைகளுக்காக பாடு படுவீர்கள். கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். சுயதொழிலில் வளர்ச்சியை பெறுவீர்கள். பொருளாதாரம் செழிக்கும்.

**மாணவர்களுக்கு**

கட்டுமான கல்வி, அனிமேசன், தொழில் நுட்ப கல்வியில் முன்னேற் றம் பெறுவீர்கள். வெளிநாடுகளின் உயர்கல்வி பயிலும் வாய்ப்பு ஒரு சிலருக்கு அமையும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

07.03.2016 திங்கள் பகல் 01.38 முதல் 08.03.2016 புதன் மாலை 04.55 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**
**புனர்பூசம் 4ஆம் பாதம்**

குற்ற உணர்வுகள் நீங்கி செய்யும் தொழிலிலும் செயலிலும் நேர்மையை உறுதி செய்து கொள்வீர் கள். எதிர்கால நன்மை கருதி செய்யும் எந்த் வேலையும் இனி உங்களுக்கு சாதகமாக அமையும்.

**பூசம் 1, 2, 3, 4 ஆம் பாதம்**

முதலீடுகள் இல்லாத தொழிலில் கூடுதல் ஆதாயம் கிடைக்கும். அறிமுகம் இல்லாதவர்கூட உங்களை பார்த்து மரியாதை செய்வது புத்துணர்ச்சியை தரும்.

**ஆயில்யம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

பல மாற்றங்களை செய்து பார்த்தும் சரியான தொழில் வாய்ப்பு அமையாதது சற்று வேதனையை தந்தாலும் உங்களின் செயல்களில் புதிய உத்வேகம் பல மாற் றத்தை உருவாக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** வெண்மை, ஆரஞ்சு, மஞ்சள்

**அதிர்ஷ்ட திசைகள் :** வடமேற்கு, வடக்கு, கிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள் :** திங்கள், செவ்வாய், ஞாயிறு

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

செவ்வாய்க்கிழமை ராகு காலத்தில் அம்ம னையும் வெள்ளிக்கிழமை ராகு காலத்தில் முரு கனையும் வணங்கி வர தொழிலில் முன்னேற்றமும் தடைப்பட்ட காரியம் வெற்றியையும் தரும்.



**அழுகை யோகம்**

ஞானயோகம்.
பக்தியோகம், கர்மயோகம்,
ராஜயோகம் ஆகியவை போல
இறைவனுக்காக அழுவதை
"அழுகை யோகம்" என்று
கூடச் சொல்லாம் எனச்
சொல்லப்படுகிறது.

# உத்திரட்டாதி நட்சத்திரத்திற்கான தல விருட்சம் வேம்பு

**இந்தியாவில் நம் பண்பாட்டோடு ஒன்றிணைந்து போற்றப்படும் மரங்களாக அரசமரம், ஆலமரம், வேப்பமரம் துளசிச்செடி ஆகியவை முக்கியத்துவம் பெற்று திகழ்கின்றன.**

இவற்றில் வேப்பமரத்தை அம்மன் தெய்வத் தோடு நம் மக்கள் தொன்று தொட்டு வணங்கி வருகிறார்கள். வேப்பமரம் ஒரு சிறந்த நோய்க்கொல்லி மரமாகும். வேப்ப மரத்தின் இலைகளை மனித உடலில் ஏற்படும் பல்வேறு பிணிகளை போக்கக்கூடிய அருமருந்தாக நம் மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.

இந்த வேப்பமரத்தில் குஷ்டம், சிரங்கு, படை காய்ச்சல் போன்ற நோய்கள் குணமாகும்.

மகாவிஷ்ணுவுக்கு துளசி, சிவனுக்கு வில்வம், விநாயகருக்கு அருகம்புல், அம்மனுக்கு வேப்பிலை என நம் மக்கள் போற்றி வணங்குகின்றனர். மாரியம்மன் திருத்தலங்கள் அனைத்திலுமே பெரும்பாலும் வேப்பமரமே தலவிருட்சமாக வணங்கப்பட்டு வரும் புனித மரமாகும். அம்மை நோய் கண்டவர்களுக்கு வேப்பிலையையே சிறந்த படுக்கையாக பயன்படுத்துவார்கள். இதன் மூலம் அம்மை நோய் வெகு விரைவில் உடலை விட்டு



இத்தகைய மூலிகையான வேப்பமரம் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்த அன்பர்களின் பரிகார தலவிருட்சமாக வணங்கப்பட்டு வருகிறது. சிவனார் வேம்பு, நிலவேம்பு, மலை வேம்பு, கருவேம்பு என வெவ்வேறு வகையான வேப்பமரங்களும் உண்டு. ஆனால் அனைத்து வகையான வேப்பமரங்களும் நோய், பிணி தீர்க்கும் மூலிகை மரமாகவே உள்ளது.

வேப்பமரத்துக்கு மறுபெயர் காண்டகம் என்று சித்தர்கள் அழைத்து வருகிறார்கள். பித்தத்தால் ஏற்படும் மயக்கத்தை நிலவேம்பு தெளிய வைக்கும். இலைச்சாற்றை குழந்தைகளுக்கு கொடுத்தால் வயிற்றுப் பெருமல் நோய் அகலும்.

காணாமல் போய்விடும். குடிசை, மாட மாளிகைகள் வரை அந்த வீட்டில் யாருக்காவது அம்மை நோய் கண்டிருந்தால் வீட்டு வாசல் முன் வேப்பிலையை சொருகி வைத்து இருப்பார்கள். இதைப் பார்க்கும் மற்றவர்கள் அந்த வீட்டுக்கு செல்ல மாட்டார்கள். நச்சுக்கிருமியை கொல்லக்கூடிய சிறந்த மருத்துவ மூலிகை தான் இந்த வேப்பமரம்.

இது குறித்து தேவாரப்பாடலில் திருநாவுக்கரசர் பாடும் போது


**"மூப்பூர் நலிய வித்யாய் முன்னே அனல் வாளி கோப்பார்**
**பார்த்தன் நிலை துண்டருளுங் குழகர் குட மூக்கில்**

தீர்ப்பா குடலில் விடுநோய் அவல
கம் வினைகள் நவியாமைக்
காப்பார் காலன் அடையா வண்ணங்
காரோணத்தாரே"

என்று புகழ்ந்து உள்ளார். வேப்ப மரத்தின், இலை, கொழுந்து, காய், கொட்டை (விதை) மலர், பிசின், மரப்பட்டை, வேர் அனைத்தும் மருந்துகள், வேப்பமரத்தின் அனைத்து பாகங் களும் நமக்கு நல்ல மருந்தாக தொன்று தொட்டு பயன்படுத்தப்படுகிறது.

இலையோடு சிறிது மஞ்சளும் சேர்ந்து அரைத்து சிரங்கில் பூசினால் அது குணமாகும். வீக்கம், நாள்பட்ட புண்ணில் பூசி வந்தால் புழுக்கொல்லியாகவும் வேப்ப இலை மருந்தாக பயன்படும். வேப்பிலை சாற்றில் தேன் கலந்து குடித்தால் பித்தம் குறையும். மஞ்சள் காமாலையை குணப்படுத்தும், வேப்பமரத்தின் துளிர்கள் கொழுந்து சர்க்கரை நோய்க்கு நல்ல மருந்தாகும். இலையை அரைத்து முகத்தில் பூசி வந்தால் முகப்பருக்கள் மறைந்து போகும்.

நிலவேம்பு கசாயத்தை தினமும் குடித்தால் டெங்கு காய்ச்சல் வராது. பரவாது. திருச்சி மாவட்டம் சமயபுர மாரியம்மன் கோவிலில் திருத்தல விருட்சமாக வேப்பமரம் உள்ளது. மாரியம்மனை வேப்பிலைக்காரி என்று பக்தர்கள் அழைக்கிறார்கள். நாகை மாவட்டம் புள்ளிருக்குவேளூர் என்ற மயிலாடுதுறை வைத்தீஸ்வரன் ஆலயத்திலும் கும்பகோணம் காரோணத்தில் உள்ள சோமுசர்



ஆலயத்திலும், திருச்சி மாவட்டம் திருவாட்போக்கி திருத்தலத்தில் உள்ள ரத்தினாஸ்வரர் ஆலயத்திலும், தல விருட்சமாக வேப்பமரம், இறைவனோடு சேர்ந்து வணங்கப்படுகிறது.

உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வேப்பமரத்தை வணங்கி வரலாம். வீட்டு முன் வேப்பமரத்தை வளர்த்து வந்தால் நல்லதே நடக்கும். உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் அதிதேவதை திருமாலையும் திருமகளையும் காமதேனுவையும் வணங்கி வரலாம். வேப்ப மரம் இல்லாத இடமே இல்லை என்றே கூறலாம். ஆகையால் வேப்பை மரத்தை அனைவருமே வளர்க்க முன் வரலாம்.

உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வீரமும், விவேகமும் உடைய திறமைசாலிகளாக இருப்பார்கள். அனைவருக்கும் உதவும் மனப்பான்மை கொண்டவராக இருப்பார்கள். எப்போதும் மகிழ்ச்சியாக இருந்து மற்றவர்களையும் மகிழ வைப்பவர்களாக இருப்பார்கள். அதிகமான நண்பர்கள் இவர்களுக்கு உண்டு. மக்களுக்கு சேவை செய்யும் மனம் படைத்தவர்கள் என்று ஜோதிட சாஸ்திர நூல்கள் கூறுகின்றன.

தி.பெருமாள் மலர்மதி

## ஓங்கி உலகளந்த உத்தமன்!



விண்ணையும் மண்ணையும் அளந்த இரண்டு திருவடிகளை உடையவன் வாமனன். அன்னை ஆண்டாள் வாமனாவதாரத்தில் ஈடுபாடு கொண்டவர். அதனால் அவர் திருப்பாவையில், "ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி" என்றும் "அன்றிவ்வுலகம் அளந்தாய்" என்றும், இரண்டு முறை வாமனனைக் குறிப்பிடுகிறார்.



# பரிவர்த்தனை யோகம் பெறும் அமைப்பு

ஜோதிட உலகில் மிகவும் பெருமை கொள்ளக் கூடிய யோகமாக பரிவர்த்தனை யோகம் அமையப் பெறுகின்றது. ஒரு வீட்டிற்கு அதிபதி வேறு ஒரு இடத்தில் வீற்றிருந்து அந்த வீட்டிற்கு அதிபதி வீற்றிருக்கும் கிரகத்தின் வீட்டில் அமைவது பரிவர்த்தனை யோகம் ஆகும். எடுத்துக்காட்டாக இலக்கனாதிபதி பத்தாம் வீட்டில் வீற்றிருந்து பத்தாம் அதிபதி இலக்கனத்தில் அமையப் பெறுவது பரிவர்த்தனை யோகம் என்பதாகும்.

ஜாதகத்தில் ஆறு கிரகங்கள் மட்டுமே பரிவர்த்தனை அடைய முடியும். நல்ல ஸ்தானத்தின் அதிபதிகள் நல்ல ஸ்தானத்தில் ஒருவருக்கொருவர் பரிவர்த்தனை அடைவது மிகவும் அற்புதமான யோக பலன்களை உண்டாக்குகிறது. அசுப ஸ்தானத்தின் அதிபதிகள் அசுப ஸ்தானத்தில் ஒருவருக்கொருவர் பரிவர்த்தனை அடைவது விபரீத இராஜயோகம் அமையுமென முன்பே கண்டோம்.

அதே நேரம், குறிப்பாக நல்ல ஸ்தானத்தின் அதிபதிகள் அசுப ஸ்தானத்திலும், அசுப ஸ்தானத்தின் அதிபதிகள் நல்ல ஸ்தானத்திலும் பரிவர்த்தனை அடைவது ஒருவருக் கொருவர் மாறி நிற்பது அனுகூல மானதாக ஏற்பதற்கில்லை. ஐந்தாம், ஆறாம் அதிபதிகள் பரிவர்த்தனையோ, ஆறு ஏழாம் அதிபதிகள் பரிவர்த்தனையோ, எட்டு ஒன்பதாம் அதிபதிகள் பரிவர்த்தனையோ பலன் அளிக்க வாய்ப்பில்லை. அனுகூலப் பரிவர்த்தனை யோகம் அமையப் பெற்று அந்த யோகத்தைத் தரக் கூடிய திசை, புத்தி வருமானால் அந்த ஜாதகர் உயர்ந்த அந்தஸ்தைப் பெறுவது திண்ணம்.



**உதாரணம்**

முன்னாள் பாரத பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் ஜாதகம்

1. சந்திரனின் வீடான கடகத்தில் சனி சனி வீடான மகரத்தில் சந்திரன்

| | | | |
|---|---|---|---|
| | | குரு | கேது |
| | இராசி | | ல / சனி |
| சந்திரன் | | | செவ் |
| சுக் ராகு | சூரி புதன் | | |

2. சூரியன் வீடான சிம்மத்தில் செவ்வாய் செவ்வாய் வீடான விருச்சிகத்தில் சூரியன்.

3. சுக்கிரன் வீடான ரிஷபத்தில் குரு குரு வீடான தனுசில் சுக்கிரன்

மேற்கண்ட மூன்று விதமான பரிவர்த்தனைகள் இந்திரா காந்தி அம்மையார் ஜாதகத்தில் அமைந்துள்ளது. இலக்கினாதிபதி சந்திரனும் ஏழாம் அதிபதி சனியும் பரிவர்த்தனை அடைகிற தன்மை மிகுந்த புகழை பெருமையைத் தேடி தந்தது எனலாம்.

## சதுஸ்ர யோகம் பெறும் அமைப்பு

யோகங்களில் மிகவும் சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. ஒருவருடைய ஜாதகத்தில் நான்கு கேந்திரங்களிலும், ஒன்று, நான்கு, ஏழு, பத்து ஆகிய ஸ்தானங்களில் இடைவிடாமல் கிரகங்கள் இருப்பது "சதுஸ்ர யோகம்" எனப்படுகிறது.

இந்த வகையான யோகம் உள்ளவர்கள் பெரும் புகழுடன் திகழ்வார்கள். நாடு முழுவதும் பிரபலமாக இருப்பார்கள். நல்ல ஆரோக்கியம், நீண்ட ஆயுள் யாவும் உண்டாகும்.

**உதாரணம்**

1. இலக்கனம் சூரியன், புதன்
2. நான்காம் இடம் குரு
3. ஏழாம் இடம் சந்திரன்
4. பத்தாம் இடம் செவ்வாய்

இவ்வாறாக இடைவிடாது கேந்திரங்களில் கிரகங்கள் அமையப் பெற்று சதுஸ்ர யோகம் எனும் அமைப்பைப் பெற்றுள்ளது. கீர்த்தி வாய்ந்த அரசராகவும், பிரபலமானவராகவும் விளங்க சக்தி வாய்ந்த சதுஸ்ர யோகமே துணை புரிந்தது எனலாம்.

## அரசாளும் பஞ்ச தீர்த்த யோகம் பெறும் அமைப்பு

ஜாதகத்தில் ஒரே இராசியில் ஐந்து கிரகங்கள் கூடி அது கேந்திர ஸ்தானமாகவோ, அல்லது திரிகோண ஸ்தானமாகவோ அல்லது வலுவான இடத்தில் அமையுமானால் அவ்வகை அமைப்பை அரசாளும் பஞ்ச் தீர்த்த யோகம் என அழைக்கப்படுகிறது.

**உதாரணம்**

**முன்னாள் பாரத பிரதமர் திரு.ராஜீவ் காந்தி அவர்களின் ஜாதகம்**

| | | | |
|---|---|---|---|
| | | | சனி |
| | இராசி 20-8-1944 | | ராகு |
| கேது | | | ல சூரி சந் குரு புதன் சுக் |
| | | | செவ் |



இலக்கனம் சிம்மமாக அமைந்து அதில் சுக்கிரனும் இலக்கனாதிபதி சூரியனும், சந்திரனும், குரு, புதன் ஆகிய ஐந்து கிரகங்கள் இணைந்து இருந்ததாலும் அரசாளும் பஞ்ச தீர்த்த யோகம் பெற்றவர்கள் என்பது விதி தந்த யோகமாகும். வாழ்க்கையின் ஆரம்பத்தில் பஞ்சத்தோடு வீற்றிருந்து பின்பு செல்வச் செழிப்புடன் வாழ்க்கையை கொண்டு செல்வர்.

## ஆன்மிக இன்பம்!

உலகப்பற்றில் உழலும் மனம், இறைவன் மீது நாட்டம் கொண்ட மனம் என்று இரண்டு விதங்களில் மனம் செயல்பட்டால் அந்த மனத்தால் ஆன்மீக இன்பத்தை உணர முடியாது. ஆன்மீக இன்பம் பெறுவதற்கு, இறைவன் மீது நாட்டம் என்ற ஒருமுகப்பட்ட மனம் தேவை. "ஓடி அலையும் மனத்தை ஒன்றில் நிலை நிறுத்து" என்று அப்பர் சுவாமிகள் கூறியிருக்கிறார்.



**மன்மத ஆண்டு மாசி மாதம்**
**13.02.2016 முதல் 13.03.2016 வரை**




தனக்கென்று தனிப் பாதையை வகுத்து கொள்ளும் சிம்ம ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு தொழிலிலும், பணிபுரியும் இடத்தில் மதிப்பும், மரியாதை உண்டாகும். கொடுத்த இடத்தில் பணம் வந்து சேரும் ஒரு சிலருக்கு பதவி உயர்வும் சம்பள உயர்வும் கிடைக்கும்.

### .பணியாளர்களுக்கு

பணியாளர்களிடம் மரியாதையுடன் நடந்து கொள்வீர்கள். எங்கு சென்று பணி புரிந்தாலும் அதில் சற்று கவனம் செலுத்துவீர்கள். ஆற்றலும் செயலில் நிறைவும் கொண்டு செயல்படுவீர்கள். தொழிற்சங்க பணிகளில் சிறப்பாக செயல்படுவீர்கள். பொருளாதார நிலை மேம்படும்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது விடயங்களில் எதையும் உறுதியான முடிவுகளை எடுப்பீர்கள். எடுத்த முடிவிலிருந்து பின் வாங்க மாட்டீர்கள். எல்லோரும் நலமுடன் இருக்க உங்களால் ஆன உதவிகளை செய்து தருவீர்கள். பொருளாதார நிலை வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

### வியாபாரிகளுக்கு

செய்யும் தொழிலில் ஆற்றலை பெறுவீர்கள். எதிலும் தனிக் கவனம் செலுத்தி தொழிலில் பல மாற்றங்களை செய்து வளர்ச்சியை பெறுவீர்கள். ஆடம்பர பொருட்கள் வீடு கட்டும் தொழிலில் புதிய அணுகுமுறைகளை உரு வாக்குவீர்கள்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினரின் வளர்ச்சி சமுதாயத்தில் நல்ல மாற்றத்தை உருவாக்கும். கடந்த கால நிகழ்வுகளை மறந்து மீண்டும் புத்துணர்வுகளுடன் செயல்பட்டு கலைஞர்களின் வாழ்க்கையின் முன்னேற்றத்தை தர வழி பிறக்கும்.

### பெண்களுக்கு

பெண்களின் வளர்ச்சியில் மாற்றங்கள் உண்டாகும். அரசாங்க உதவிகளும், வங்கிகளின் கடன்களும் பெண்களின் முன்னேற்றத்திற்கு தேவையான உதவிகளும் பெற வாய்ப்பு அமையும். சுயதொழிலில் முன்னேற்றம் அடைவீர்கள்.

### மாணவர்களுக்கு

உயர்கல்வியின் வளர்ச்சியை பெறுவீர்கள். வேலை வாய்ப்புடன் சிலருக்கு பயிலும் வாய்ப்புகள் அமையும். அனிமேசன் கல்வி வெற்றியை தரும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

08.03.2016 புதன் மாலை 04.56 முதல் 11.03.2016 வெள்ளி இரவு 07.23 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

### மகம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

பல மாற்றங்களை சந்திக்கும் உங்களுக்கு தொட்ட காரியம் கைகூடும். தொடர்ந்து பல விடயங்களில் நற்பலன்களையும் பொருளாதார நன்மையையும் பெறுவீர்கள்.

### பூரம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

கொடுக்கல் வாங்கலில் இருந்து சிரமம் மாறி தொடர்ந்து வர வேண்டிய பணம் வசூலாகும். நித்திய கடமைகளை சரியாக செய்து வருவீர்கள்.

### உத்திரம் 1அம் பாதம்

மன ரீதியான மாற்றங்கள் உண்டாகும். ஆன்மீக சிந்தனைகளும் மகான்களின் ஆசீர்வாதமும் கிடைக்கும். பொருளாதாரத்தில் சிறப்பாக இருக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** சிவப்பு, நீலம், ஆரஞ்சு

**அதிர்ஷ்ட திசைகள் :** கிழக்கு, மேற்கு, வடமேற்கு

**அதிர்ஷ்ட கிழமைகள் :** வியாழன், வெள்ளி, புதன்

### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

ஞாயிறு மாலை ராகு காலத்தில் பைரவருக்கு நல்லெண்ணெய் தீபமிட்டு வணங்கி வரவும். வெள்ளிக்கிழமை அம்மன் வழிபாடு உங்களின் வாழ்க்கை நல்ல மாற்றத்தை உண்டாகும்.



## துன்பங்களுக்கு அஞ்ஞானமே ஆணிவேர்!

எல்லாத் துன்பங்களுக்கும் ஆணிவேராக இருப்பது அஞ்ஞானம். எல்லா இன்பங்களுக்கும் ஆணிவேராக அருப்பது ஞானம். இதை அனுபவமாக உணரும் போதுதான் உண்மையான ஆன்மிக வாழ்க்கை ஆரம்பமாகிறது.

## கனவுகளும் பலன்களும்

# பணம்


நாணயங்களையோ கரன்சி நோட்டுகளையோ நீங்கள் பார்ப்பதுபோல் அல்லது எண்ணுவதுபோல் கனவு கண்டால் நீங்கள் வரவுக்கு மிஞ்சிய செலவு செய்து கொண்டிருக்கிறீர்கள். அத்தனையும் முக்கியமான செலவுதான் என்றாலும், இதே மாதிரிப் போய்க்கொண்டிருந்தால் உங்களால் சமாளிக்க முடியாத ஒரு கட்டத்தை நீங்கள் அடைந்து விடுவீர்கள். ஆகையால் இனி மேலாவது திட்டமிட்டுச் செலவு செய்யுங்கள். அல்லது உங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.

பணத்தை ஒருவரிடமிருந்து நீங்கள் பெற்றுக்கொள்வது போல் கனவு கண்டால் விரைவில் உங்களுக்கு பணமுடை ஏற்படப் போகிறது. அது இப்போதே உங்களுக்குத் தெரிகிறது. அதை எப்படி சமாளிக்கப் போகிறோம்? என்று நீங்கள் உள்ளூரக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். கவலை வேண்டாம். நீங்கள் மட்டும் குறுக்கு வழிகளைக் கையாளாமல் இருந்தால் உங்களுக்குத் தேவையான பண உதவி தக்கச் சமயத்தில் கிடைக்கும்.

நீங்கள் பிறருக்குப் பணம் வழங்குவதுபோல் கனவு கண்டால் ஒரு சிறிய முதலீட்டின் மூலம் தங்களுக்கு ஒரு பெரிய இலாபம் கிடைக்கப் போகிறது. ஆனால் அந்தப் பணத்தைக் கொண்டு, நீங்கள் செய்ய வேண்டிய கடமைகளை நீங்கள் செய்து முடிக்க வேண்டும். கொடுக்க வேண்டிய கடன்களைக் கொடுத்துவிட வேண்டும். அப்படியில்லாமல் அதைச் சும்மா கையில் வைத்துக் கொண்டிருப்பீர்களானால், அது போன சுவடு தெரியாமல் மறைந்து போய்விடும்.

லேனா தமிழ்வாணன்






### தியானத்திற்கு தூய உள்ளம் தேவை!

தூய மனம் தான் தியானத்திற்கு முதல் தேவை. தூய உள்ளம் இல்லாதவர்களால், நன்றாக தியானம் செய்ய முடியாது. சொல்லால், செயலால், சிந்தனையால் கூடிய வரையில் மனத்தை அமைதியாக வைத்திருக்க வேண்டும். இவ்விதம் எந்த அளவுக்கு மனத்தை அமைதியாக வைத்திருக்கிறோமோ, அந்த அளவுக்கு தியானம் சிறப்பாக அமையும்.

ஆன்மாவே சர்வம், பேரிகை ஒலியையும் சங்கொலியையும் வீணையின் நாதத்தையும் பேரிகை சங்கு, வீணை முதலியவற்றினின்று பிரிக்க இயலாது. அவற்றுள்ளேயே அடங்கியுள்ளது. அதே போல உலகம் முழுவதையும் ஆன்மா தனக்குள்ளே அடக்கியிருக்கின்றது.

# ஆனந்த ஞான சொரூபம் ஆன்மாவே

இல்லாததும், சரீரம் இல்லாததுமான ஆத்மாவுக்கு இவ்வுலக வாழ்வில் இவ்வுடல் இருப்பிடமாக உள்ளது. சரீரத்துடன் உள்ள ஆத்மா விருப்பு வெறுப்பு உடையது மட்டுமன்றி பல்வேறு பந்தங்கள் காரணமாக, தன்னிடமுள்ள அதீத சிறப்புக்களையுடைய சீவாத்மாவின் உயர்நிலை வெளியே வராத நிலையில் பந்தப்பட்டுள்ளது. சரீரம் இல்லாத ஆத்மாவுக்கு விருப்பு வெறுப்பு உடையது மட்டுமன்றி பல்வேறு பந்தங்கள் காரணமான, தன்னிடமுள்ள அதீத சிறப்புக்களையுடைய சீவாத்மாவின் உயர்நிலை வெளியே வராத நிலையில் பந்தப்பட்டுள்ளது. சரீரம் இல்லாத ஆத்மாவுக்கு விருப்பு வெறுப்பு இல்லை என்பது மட்டும் இன்றி, சூரியனைக் கண்ட நீர் அருவமாகி, உருவற்றதாகி, நீராவியாகி மேல் செல்வது போல், பரஞ்சோதியாகிய இறைவன் ஒளி பட்டதும், இந்த ஆத்மா மண்ணுலகிலிருந்து புறப்பட்டு, அந்தப் பரஞ்சோதியுடனே கலந்து ஆனந்த நிலை அடையும் என, உபநிடதப் பலகணியில், மூதறிஞர் இராஜாஜி அவர்கள் மொழிந்துள்ளார்கள்.



எல்லா சயானுபூதிகளும், ஆன்மானுபவத்தில் புகுந்து ஒன்றுபடுகின்றன. ஆன்மாவைப் பற்றிய சர்ச்சைகள் விலகினால், ஆன்மா அகண்ட ஆனந்த ஞான சொரூபம் என்பது விளங்கும்.

**கடவுள் சர்வம் பிரம்மம் எல்லாம்**
**ஆன்மா பற்றி தத்துவ சிந்தனையாளர்கள்**

**மதிப்புடையது ஆத்மா**

உலகில், மிகவுயர்ந்த மதிப்புடையதொன்றுள்ளது. அது ஆற்றலுடைய ஆத்மாவே ரால்ப் வால்டோ எமர்சன்.

**எது எது ஆன்மா**

காதுக்குக் காதாக, கண்ணுக்குக் கண்ணாக, மனத்துக்கு மனமாக, வாக்கிற்கு வாக்காக, உயிருக்கு உயிராக, எது அமைந்து மனத்தினால் எண்ணப்படாததோ, ஆனால், எதனால் மனம் நினைக்கும் திறமை பெறுகிறதோ, எது கண்ணால் காணப்படாததும், ஆனால், கண்ணிற்குப் பார்க்கும் திறமை அளிப்பதும், எது காதால் கேட்கப்படாததும், ஆனால், காதுக்குக் கேட்கும் திறமையளிப்பதும் எதுவோ, அதுதான் ஆன்மாக்கான உபநிஷம்.

**அசரீர ஸ்வரூப விஞ்ஞானம்**

இந்த உடல், சாவுடையது; ஆனால் சாவு

இவ்வுலகில் மிக முக்கியமான ஒன்றுள்ளது, அது ஒருவன் தன் ஆத்மாவினை மேன்மையானதாக வைத்துக் கொள்வதே. கஸ்தேவ பிளாபர்ச்

**இயக்கக் கரு**

ஆன்மாவின் இயக்கத்தாலும் உதயத்தாலுமே ஜீவராசிகளின் வாழ்வு மலர்கிறது. இயங்கி வருகிறது.

**ஆத்மா களங்கமடைவதில்லை**

எவ்வாறு எங்கும் நிறைந்த ஆகாயம், சூட்சுமத் தன்மையால் களங்கமடைவதில்லையோ, அவ்வாறே ஆத்மாவும் எங்கும் நிறைந்துள்ளது

ஆயினும் களங்கமடைவதில்லை.

**ஆன்மாவும் பிரபஞ்சங்களும்**

காரணத்துக்கு அன்னியமாய்க் காரிய மில்லை. உதாரணம் மண்ணினால் உண்டாக்கப் பெற்ற பானை முதலிய பண்டங்கள், மண்ணுக்கு அன்னியமாக எப்படிக் காணவில்லையோ, நூலினால் நெய்யப் பெற்ற புடவைகள் நூலுக்கு அன்னியமாக எப்படிக் காணவில்லையோ, தங்கத்தால் செய்த ஆபரணங்கள் தங்கத்துக்கு அன்னியமாக எப்படிக் காணவில்லையோ, இரும்பினால் செய்த ஆயுதங்கள் இரும்புக்கு அன்னியமாக எப்படி காணவில்லையோ அஃதே போல் ஆன்மா வினால் உண்டாக்கப் பெற்ற பிரபஞ்சங்கள், ஆன்மாவையன்றி வேறில்லை என்று அறிவது, அறிவு வாசுதேவ மன்னம்.

**பிரபஞ்ச இயல் நுணுக்கம்**

மரணம் இல்லை என்றால், மேலும் பிறப்பில்லை. இடநெரிச்சல் குறையாது. வாழைமரம் குலை ஈந்து (ஈன்று) விட்டு அழிகின்றது. அதன் வேரில் புதிய



கன்றுகள் துளிர்கின்றன.

ஏன் எனக்கு மரணம் என்ற வினாவினை எழுப்பிக் கேட்பவருக்கு பதில், பிரபஞ்சயியல் உன்னிடம் நடைபெறுகின்றது. தோற்றம், வளர்தல், அழிதல் என்ற பரிணாம இயலில் நீயும் ஒரு அங்கமாகவுள்ளாய். நீ உன் பெற்றோர்க்கு மகனாய் இருப்பது போலவே இப்பிரபஞ்சத்திற்கும் இந்த மண்ணுலகுக்கும் கூட ஒரு மகனாகிறாய். மனித னாகிய நீ வாழும் போதும், மரணம் எய்தும் போதும், வளரும் போதும் உன் உயிரில் உள்ள அணுக்கள், புதிதாகத் தோன்றியும் அழிந்தும் உன் தோற்ற மாற்றங்கள் அனைத்தும் செயல்படுகின்றன. எனவே மரணம் பிரபஞ்ச இயல் இயக்க நுண்மை என்பதை நாம் உணர வேண்டும்.

## மனித நேயமே தெய்வ நேயம்!

நமக்குள்ளே தெய்வத்தைக் கண்டு தெளிவதுதான், மனிதன் தெய்வமாவதற்கு உரியவழி. இதற்கு மனிதநேயத்தைத் தெய்வ நேயமாக மலரச் செய்ய வேண்டும். தெய்வச் சிந்தனைகள் நம்மைத் தூய்மைப்படுத்துகின்றன. நம்மைத் தெய்வ நிலைக்கு உயர்த்துகின்றன.



**பிரபஞ்ச இரகசிய வித்து**

மிக ஆழ்ந்து அழகு நிறைந்த அனுபவத்தை மனிதனுக்குத் தரக்கூடியது. பிரபஞ்ச ரகசியத்தைப் பற்றிய ஆன்ம பரவசமே உண்மையான சகல விஞ்ஞான வளர்ச்சிக்கும் விதை அதுவே. அதிசயமும் பிரமிப்பும் அடைந்து நிற்கச் செய்யும் இந்த ஆன்ம பரவசம் இல்லாதவன் பிணத்துக்குச் சமானமானவனே ஐன்ஸ்டீன்

**பிரபஞ்சயியல் நித்யத்வம்**

ஐம்பூதங்களும் எப்படி உண்மையானவையோ அப்படி ஆன்மாவும் உண்மையானது யஞ்ஞவல்கியர்

**அமரத்வம்**

ஆன்மா அமரன். அவனை எவராலும் கொல்லவோ அழிக்கவோ முடியாது. சாக்ரட்டீஸ்

**ஆன்ம சூரியன்**

ஆன்மா சூரியனை ஒக்கும். இரவில் புலனா வதில்லை. ஆனால் வேறிடத்தில் வெளிச்சம் பரப்பு வதற்காகவே சென்றுள்ளது என்பதே உண்மை. ஆன்மா என்றும் அழியாது என்னும் நம்பிக்கை யுடையவன் நான். சூரியன் நம்முடைய ஊனக் கண்களுக்கு மறைவது போல் தோன்றினாலும் அது உண்மையில் மறைவதேயில்லை. எப்பொழுதும் ஒளிர்ந்து கொண்டேயிருக்கிறது. அதுபோன்றதே ஆன்மா.

◀ வை.தட்சிணாமூர்த்தி



# உங்கள் மூளையில் மறைந்திருக்கும் ஆற்றல்கள்!

***பலரும் பலதை விரும்பினார்கள். ஆனால் எதுவும் கிடைக்காமல் விரக்தியடைந்து வருகிறார்கள். விருப்பங்களை சும்மா மனதில் மட்டும் எண்ணி வந்தால் போதாது. விருப்பங்களை ஆக்கப்பூர்வமாகச் செயல்பட வைக்க அந்த விருப்பங்களை வலது பக்க மூளையில் பதிந்து வந்தால் தான் விருப்பங்கள் நிறைவேறும்.***

ஒருவர் பள்ளி ஆசிரியராக வேண்டுமானால் அதற்கான கல்வியைக் கற்றால்தான் ஆசிரியராக வர முடியும். ஒருவர் பேஸ்கட்பால் விளையாட பயிற்சி பெற்றால் தான் விளையாட முடியும்.

நமக்கு எது தேவையோ, அதற்கான பயிற்சியைப் பெற்றால் தான் அந்த வேலை கிடைக்கும்.

இந்த நூற்றாண்டில் முன்பு நடக்காது என்றவைகள் எல்லாம் இப்போது நடக்கிறது. சந்திரனுக்கும் போய் வந்து விட்டார்கள். செவ்வாய் கிரகத்தில் ஆராய்ச்சி நடக்கிறது. இப்படி பல அதிசயங்கள் என்று எண்ணியவைகள் தொழில் நுட்ப விஞ்ஞான வளர்ச்சியால் சாதாரணமாய் நடக்கிறதல்லவா? முடியாதது என்று இப்போது எதுவுமே சாதாரணமாகப் போய் விட்டது. இத்தனை சாதனைகளும் மனித மனதில் இருந்து வந்தவைகள்தான் என்று தெரிந்து கொள்ளுங்கள்.

ஒரு பக்க மூளை நமது ஆசாபாசங்களுக்கு உட்பட்ட உலக சம்பந்தப்பட்டது. மற்றொரு மூளைப் பகுதி சின்னங்கள் மூலமாகத்தான் அதைச் செயல்படுத்த முடியும் என்கிறார்கள். எப்படி வலது மூளை செயல்படுகிறது. அதன் ஆதாரம் என்ன என்று இதுவரை யாராலும் தெரிந்து கொள்ள முடியவில்லை.

எனக்கு 30 மில்லியன் டொலர் வேண்டும் என்று நான் எண்ணுகிறேன் என்றால், இவைகள் வெறும் வார்த்தைகள் தான். இது இடது பக்க மூளையின் விருப்பமாகும். ஆனால் இதைச் செயல்படுத்த முடியாது. இதைச் செயல்படுத்த வேண்டுமானால் நீங்கள் வலது பக்க மூளையைத்தான் தொடர்பு கொள்ள வேண்டும்.

வலது பக்க மூளை நீங்கள் அதனிடம் பேசினால் செயல்படாது.

வலது பக்க மூளைக்கு படங்கள், சின்னம் ஆகியவற்றைக் காட்டினால் தான் செயல்படும்.

கண்களால் படம் அல்லது சின்னத்தைப் பார்க்கும் போது அது வலது பக்க மூளையில் செயல்படுகிறது.

படத்துக்கு அதாவது நாம் பார்க்கும் சின்னங்களுக்குத் தகுந்த பிரதிபலன்களை நமக்கு நம் விருப்பப்படி தருகிறது.

ஆகவே எந்த எந்த சின்னங்களை என்ன காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் என்பதை விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி என்று ஆன்மீகச் சொல்லுக்கு மிகப் பெரும் இரகசியங்களை தன்னுள் வைத்துள்ளது.

### 1. இச்சா சக்தி

என்பதில் நீ எது வேண்டுமோ அதை விரும்பலாம். அதற்கு எந்தத் தடையும் இல்லை. அது பணமாக இருக்கலாம். தங்க நகைகளாக இருக்கலாம். வீடாகக் கூட இருக்கலாம். முடிவில் தொழிற்சாலையாக இருக்கலாம். அழகான மனைவி, கார், வாகனங்கள் என்று பலவிதமாக இருக்கலாம். இது போன்ற விருப்பத்தைச் செயல்படுத்துவதற்கே இச்சா சக்தி உள்ளது.

### 2. கிரியா சக்தி

இதை கிரியா மனம், Creative Mind என்றும்

சொல்லலாம்.

உங்கள் விருப்பங்கள் தேவைகளை காட்சியாக மனத்திரையில் சீதாதாசமாகிய நெற்றிப் பகுதியில் கற்பனையில் பார்த்தல், கற்பனையில் உங்கள் விருப்பங்களை, உரு வங்களாகப் பார்த்து வரும் போது அது வலது பக்க மூளையில் பரவி மறை மனதின் மூல மாகச் செயல்பட்டு நாம் பார்த்து வரும் போது. விரும்பியது விரும்பியபடி நமக்குக் கிடைக்கச் செய்கிறது.

நீங்கள் எதை விரும்பினாலும் அதை உருவமாக கிரியா மனதில் பார்த்து பதிந்து வருவது ஆகும். இதுதான் விரும்பியதை அடையும் இரகசியம்.


### 3. ஞானசக்தி

ஞான சக்தி என்பது மனம். Unconcious mind. இது மனத்திரையில் நாம் பார்த்து வரும் விருப்பங்களை பிரபஞ்சத்தில் இருந்து நமக்காகச் செயல்பட்டுக் கிடைக்க வழி செய்கிறது.

ஆகவே கிரியா மனதில் செயல்பட்டு மறை மனதில் விருப்பங்களைச் செயல்படுத்தினால் விரும்பியதை அடையலாம்.


உங்கள் வலது மூளையானது தூங்கும் பூதம் Sleeping Giant என்று சொல்லப்படுகிறது.

◂ என். தம்மண்ணன்



## சத்சங்கத்தின் சிறப்பு!

நன்மைகள் நிலைக்கவும், தீமைகள் ஒழியவும் சத்சங்கம் உதவும். சத்சங்கம், வாழ்க்கையில் ஒருவர் பெறக் கூடிய பேறுகளிலேயே தலையாய முக்கியத்துவம் உடையது. அது அரிய மருந்து போன்றது. சத்சங்கம் என்ற நல்லோர் தொடர்பு, சான்றோர் தொடர்பு, நாளும் நம்மிடம் வளர வேண்டும். அது நம்மை உயர்த்தும். துஸ்சங்கம் என்ற தீயவர்கள் தொடர்பு, ஒருவரை மெல்ல மெல்லக் கொல்லும் விஷம் போன்றது. அது நம் வாழ்வைச் சீர்குலைத்து விடும். ஒருவருக்கு உயர்ந்த சத்சங்கத்தை விடப் பெரிய செல்வம், உயர்ந்த பாதுகாப்பு, காக்கும் கவசம் வேறு எதுவுமே இல்லை.





# வாஸ்து குறைகள் நீக்கிடும்
# பூலோகநாதர் ஆலயம்!

***கட்டப்படும் சொந்த வீட்டில் ஏதேனும் குறை நேர்ந்து விட்டால் நஷ்டம். கட்டப்படும் வீட்டிலும் துர்தேவதைகள் கண்ணுக்குப் புலனாகாத வகையில் இருந்து விட்டால் கஷ்டம் கட்டப்படும் வீட்டில் குடி புகுந்து வாழுகிற போது, வகையறியாத துன்பங்கள் துரத்தினாலும் அனுபவித்தே தீர வேண்டுமா? வீடு கட்டுவோர்க்கு மட்டும் தானா விதவிதமான சூழ்நிலைச் சிக்கல்கள்!***

ஏற்கனவே வீடு கட்டி வசித்து வருவோர்க்கும் பெரிய பெரிய பிரச்சனைகள் உண்டு. இத்தகையவர்கள் இன்றைய கால கட்டத்தில் வாஸ்து சாஸ்திரத்தின் துணையை நாடுகிறார்கள். ஆயினும் வாஸ்து தொடர்புடைய இடர்பாடுகளை நீக்கும் திருக்கோயிலாகத் திருச்சிராப்பள்ளி பூலோகநாதர் திருக்கோயில்.

தாயாக இருந்து ஓயாது அருள்பாலிக்கும் தாயுமான ஈசன் திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையின் மத்தியில் வீற்றிருக்கிறார். விநாயகப் பெருமான் மலைக்கோட்டையின் உச்சியில் அமர்ந்து, அனைவருக்கும் கருணை செய்து வருகிறார். தாயுமான ஈசன் சன்னதியிலிருந்து, சுமார் மூன்று கிலோ மீற்றர் சுற்றளவிற்குள்ளாக, ஐந்து திருக்கோயில்களில் "ஐந்து நாதர்கள்" வீற்றிருக்கிறார்கள்.

வெவ்வேறு திருமேனிகளில் இந்த ஐந்து நாதர்களும் இருப்பதாக ஐதீகம். அருள்மிகு பூலோக நாதர் திருக்கோயில் திருச்சிராப்பள்ளி கீழப்புலிவார் ரோட்டில் அமைந்திருக்கிறது.

வீடுகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள் ஆகியவற்றின் கட்டுமானத்தினைத் துவக்கும் முன்பு பூமி பூஜை நடைபெறுவதை நாம் கண்டிருக்கிறோம். வாஸ்து புருஷர் விழிக்கும் நேரம் என்று சாஸ்திர விற்பன்னர்கள் தெரிவிக்கும் நேரத்தில் தான் கட்டுமானப் பணி மேற்கொள்ளும் நேரமாகக் கருதி பூஜை நிகழ்த்தப்படுகிறது.

பூஜையை முறையாகச் செய்யாவிட்டால், எதுவும் தவறிப் போகலாம் என்பது ஐதீகம். இதற்கு உதவுவதே ஸ்ரீ பூமி அந்தர வாஸ்து சுந்தர சக்கர பூஜையாகும். இவர்கள் இச்சக்கர வழிபாட்டை தினசரி பூஜையாகச் செய்திட வேண்டி, ஸ்ரீ பூலோக நாதர் எழுந்தருளியிருக்கும் தலங்களை நாடுதல் வழக்கம். அவ்வாறு

நாடுகிறபோது செவ்வாய்க்கிழமை செய்வது மிகவும் விசேடம்.

நிலம், வாகனம், பூமி ஆகிய செல்வச் சேர்க்கையாகத் தரும், செவ்வாய் பகவானுக்கு உரித்தான செவ்வாய் ஹோரை நேரத்தில், பூஜை மேற்கொள்ளப்பட வேண்டும். ஸ்ரீ பூலோக நாதருக்கும், அம்பிகைக்கும் தைலக் காப்பிட்டுக் கிழங்கு வகையான உணவுகளைப் படைத்து வழிபடுவது நடைமுறை. வாஸ்து சுந்தர சக்கர பூஜையைச் செய்து வழிபாடு நிகழ்த்தப் பெறும் சிவாலயங்களில் தலையாயதே திருச்சிராப்பள்ளி கீழப்புலிவார் ரோடு பூலோக நாதர் ஆலயமாகும்.

பொதுவாக திருக்கோயில்களில் எல்லாம் தல விருட்சமாக ஏதேனும் ஒரு மரம் பேணிப் பாதுகாக்கப்பட்டு, வழிபடப்பட்டும் பயன்பாட்டில் இருந்து வருகிறது. ஆனால், இத்திருக்கோயிலில் மட்டும் 5 மரங்கள் தலவிருட்சங்களாக இருந்து நலம் தருகின்றன.

1. மகிழம், 2. அத்தி, 3. வன்னி, 4. குருந்தை, 5. வில்வம் என இந்த ஐந்து விருட்சங்களும் ஆலயத்திற்குள்ளேயே இருப்பதால் அவற்றின் குச்சிகளைத் தேடி வேறிடம் செல்லும் நிலையில்லை.

திருக்கோயிலின் வாஸ்து சக்கர பூஜை நடைபெறும் நாட்களில் ஐந்தும் ஒருசேரப் பயன் படுத்தப்படுகின்றன. மேலும் ஸ்ரீ பூமி அந்த வாஸ்து சுந்தரச் சக்கரம் திருக்கோயிலின் மண்டபத்தில் தரையில் இறைவனின் திருக்கண்ணோக்கம் படும் விதத்தில் அமைக்கப்பட்டு, யாக பூஜை நடத்தப் படுகிறது.

சக்கர பூஜை முடிவுற்றதும் ஸ்ரீ பூலோக நாதரிடம் யாகப் பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டுத் தொடர்ந்து வழிபாட்டு விண்ணப்பம் நடை பெறுகிறது. இவ்வாறு பூஜை செய்து விருப்பம் பூர்த்தி செய்யப்பட்டோர் பூலோக நாதரை "வாஸ்து நாதர்" என்று பெயரிட்டுப் பெருமைப்படுத்தி வருகிறார்கள். இத்திருக்கோயிலில் ஆண்டில் எட்டு நாட்கள் மட்டுமே வாஸ்து, யாக பூஜை நடை பெறுகிறது.

◂ K. துரைராஜ்



## மும்மலங்கள்!

நாம் எதை எல்லாம் உண்மை என்று நினைக்கிறோமோ அது உண்மையல்ல. நாம் எதை எல்லாம் பொய் என்று நினைக்கிறோமோ அது பொய் அல்ல. இப்படி உண்மையைப் பொய்யாகவும், பொய்யை உண்மையாகவும் கருதும் அவிவேகம்தான் "மாயாமலம்" என்று கூறப்படுகிறது. செயல்களைச் செய்யும் போது, "நான் செய்கிறேன், நான் தான் கர்த்தா என்று நினைக்கும் கருத்துருத்துவம்தான் "கன்மமலம்" எனப்படுகிறது. "நான், எனது, என்னுடையது" என்று எண்ணுவதுதான் "ஆணவமலம்" எனப்படும். மாயாமலமும் கன்மமலமும் ஆச்சாரியனின் கிருபையால் நீங்கும். மூன்றா வதாகச் சொல்லப்பட்ட ஆணவமலம் இருக்கிறதே, இது இறைவன் திருவடி நம்மீது பட்டால்தான் நீங்கும்.

# ரோமபுரியில் மன்னர் ஆட்சிக்கு வழிகோலிய

# ஜோதிடக்கலை!

கி.மு.6ஆம் நூற் றாண்டில்தான் ரோம நகரம் உருவாக்கப்பட்டது. மிக மிக இளைய நாகரிகமாக இருந்தாலும் முதல் முதலில் மக்களாட்சி என்ற தத்துவத்தை உலகிற்குத் தந்தது ரோம் தான். அதுவரையில் உலகின் அனைத்து நாகரிகங்களிலும் மன்னர்கள் ஆட்சிதான் நடை பெற்று வந்தது. ரோம் நாட்டில்தான் முதல் முதலாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் அவை (பாராளுமன்றம்) அமைக்கப்பட்டது. பிரபுக்களால் அமைக்கப்பட்ட ஒரு மேலவையும் இருந்தது.

நாட்டை ஆளும் பொறுப்பும் சட்டங்களை இயற்றும் அதிகாரமும் இந்த இரு அவைகளுக்கே இருந்தது. ரோம சாம்ராஜ்ஜியத்தின் வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் இந்த மக்களாட்சி முறையே மிக முக்கிய காரணமாக அமைந்தது. கி.மு. 290ஆம் ஆண்டிலேயே கிரேக்க தத்துவங்களும், மத நம்பிக்கைகளும் ரோம் நாட்டில் பரவத் தொடங்கியிருந்தது.

கி.மு. முதலாம் நூற்றாண்டில் போசிடோனியஸ் என்ற கிரேக்க அறிஞரின் முயற்சியால் ஸ்டேயிக் தத்துவமும், ஜோதிடக் கலையும் ரோமபுரியில் வேரூன்றத் தொடங்கியது. ஸ்டேயிக் தத்துவமும், ஜோதிட நம்பிக்கையும் மனித வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் என்றே ரோமின் பாராளுமன்றம் கருதியது. கி.மு. 3ஆம் நூற்றாண்டிற்கும் கி.மு. 1ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஜோதிடத்திற்கு எதிரான பல சட்டங்களும் ஆணைகளும் ரோமானிய பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டன.

ஆனால் பொதுமக்களின் ஆதரவு ஜோதிடக்





கலைக்கும், ஸ்டேபிக் தத்துவத்திற்கும் மிக அதிகமாக இருந்தது. எந்த சட்டத்தாலும் ஆணையாலும் அவற்றின் வளர்ச்சியை தடை செய்ய முடிய வில்லை. கி.மு. முதலாம் நூற்றாண்டில் பல ரோமானிய அறிஞர்களும், பிரபுக்களும் கூட ஜோதிடக் கலையின் மீது அபாரமான நம்பிக்கையும், பிடிப்பும் உள்ளவர்களாக மாறினர். ரோம் மிகப் பெரிய சாம்ராஜ்ஜியமாக விரிவடையும் என்ற டாருட்டியசின் கணிப்பு பிற்காலத்தில் உண்மையாயிற்று ரோமானியர்களுக்கு ஜோதிடக் கலையின் மீது முழுமையான நம்பிக்கை பிறக்க இதுவும் ஒரு முக்கியமான காரணமாக இருந்தது.



ஜோதிடக் கலைக்கு ஆதரவாக பல ரோமானிய பிரபுக்களும் அறிஞர்களும் இருந்தது போலவே அதற்கு எதிரான கருத்து கொண்டவர்களும் இருந்திருக்கினறனர். இவர்களில் மிக முக்கிய மானவர்கள் லூக்ரிட்டியஸ் என்ற கவிஞரும், சிசிரோ என்ற புகழ் பெற்ற செனட்டரும் ஆவர். லூக்ரிட்டியஸ் தனது பல கவிதைகளில் ஜோதிடக் கலையை கிண்டலடித்திருக்கிறார் இவர் வெளியிட்ட பல கருத்துக்கள் இன்றைய நவீன விஞ்ஞானத்தின் கருத்துக்களை ஒட்டியிருப்பது மிகவும் ஆச்சரியமான விடயம்.

### அகஸ்டஸ் சீசர்

ஜூலியஸ் சீசர் ரோம சாம்ராஜ்ஜியத்தின் மிகப் பெரிய சக்கரவர்த்தியாகக் கொண்டாடப் பட்டாலும் உண்மையில் அவர் ரோமின் ஆளுனராக மட்டுமே அங்கீகரிக்கப்பட்டிருந்தார். அவரது காலத்திலும் ரோமில் மக்களாட்சியே நடைபெற்று வந்தது. பாராளுமன்றத்தாலும் பிரபுக்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவராகவே ஜூலியஸ் சீசர் இருந்தார். நாட்கள் செல்லச் செல்ல பாராளு மன்றத்தையும், பிரபுக்களையும் மதிக்காமல் ஜூலியஸ் சீசர் செயல்படத் தொடங்கியதால் தான் மார்க் அன்டனி தலைமையில் பிரபுக்கள் கூடி சதி செய்து ஜூலியஸ் சீசரை தீர்த்துக் கட்டினர்.

இவருக்குப் பின் வந்த அவரது வளர்ப்பு மகனை அகஸ்டர் சீசர்தாக் ரோம சாம்ராஜ்ஜியத்தின் முதல் சக்கரவர்த்தி எனலாம் இவரது காலத்தில் தான் பாராளுமன்றமும், பிரபுக்களும் வெறும் பொம்மைகளாக்கப்பட்டனர். அனைத்து அதிகாரங்களையும் அகஸ்டஸ் சீசர் தனது கையில் எடுத்துக் கொண்டு ஒரு சக்கரவர்த்தியாக ஆட்சி செய்யத் தொடங்கினார். அகஸ்டஸ் சீசரின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும் போது ஜோதிடம் அவரது வாழ்வோடு பின்னிப் பிணைந்திருந்தது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. பிறந்தது முதலே ஏதோ ஒரு வகையில் ஜோதிடத்தின் பங்கு அவரது வாழ்க்கையில் இருந்திருக்கிறது. மாசிடோனியாவின் ஆளுநராக இருந்த கேயஸ் ஆக்டோவியசின் மகனாக கி.மு. 63ஆம் ஆண்டு செப்டம்பர் 23ஆம் திகதியில் அகஸ்டஸ் சீசர் பிறந்தார். பிறந்த உடனேயே அவரது ஜாதகத்தை கணிக்க ஒரு பிரபலமான ஜோதிடர் வந்தார்.

ஜாதகத்தைக் கணித்த ஜோதிடர் ஒரு பெரிய குண்டைத் தூக்கிப் போட்டார். "இந்தக் குழந்தை பிற்காலத்தில் ரோம சாம்ராஜ்ஜியத்தையே ஆட்டிப் படைக்கும் ஒரு கொடுங்கோலனாக இருப்பான். மேலும் இந்த குழந்தை உயிரோடு இருந்தால் தந்தைக்கு விரைவில் மரணம் நிச்சயம். எனவே குழந்தையை கொன்று விடுவது நல்லது".

அக்காலத்தில் இத்தகைய குழந்தைகளை சுடுகாட்டில் கொண்டு உயிரோடு வீசிவிட்டு வந்து விடுவார்கள். அங்கே பிணம் தின்னக் காத்திருக்கும் நாய்களும், ஓநாய்களும் ஒரு சில நிமிடங்களில் ஒரு எலும்புகூட மிச்சம் வைக்காமல் குழந்தையைத் தின்று தீர்த்து விடும்! ஆனால் தனது மகனை நாய்களுக்கு இரையாக்க அகஸ்டஸ் சீசரின் தந்தைக்கு மனம் வரவில்லை. எனவே ஜோதிடரின் ஆலோசனை புறக்கணிக்கப்பட்டது.

கி.மு.59ல் அகஸ்டஸ் சீசருக்கு 4 வயதாக இருக்கும் போது அவரது தந்தை வெகு விரைவிலேயே மறுமணம் செய்து கொண்டதால்

65 ஆம் பக்க பார்க்க



## பிரார்த்தனை!

இறைவன் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். இறைவன் நாம் செய்யும் பிரார்த்தனையைக் கேட்டுக் கொண்டிருக்கிறான் என்ற எண்ணத்தில், இறைவனிடம் நாம் பிரார்த்தனை செய்ய வேண்டும். "குற்றங்களும் தீமைகளும் விலகி, தர்மங்களும் நன்மைகளும் உலகில் பெருகட்டும் என்று, நாம் அனைவரும் பிரார்த்தனை செய்வோமாக.

# சதுரங்கம் ஆடும் துறவிகள்!

முன்னொரு காலத்தில் ஒரு நகரத்தில் புத்த மடம் ஒன்று இருந்தது. அங்கே ஏராளமான துறவிகள் தங்கி இருந்தார்கள்.

அந்த மடத்தைப் பார்வையிடுவதற்காகப் புகழ் பெற்ற துறவியான போதி தருமர் அங்கு வந்தார்.

மடத்தைச் சுற்றிப் பார்த்த அவர் எங்கும் துறவிகள் தியானம் செய்வதையும் மந்திரங்களை உச்சரிப்பதையும் பார்த்து மகிழ்ச்சி அடைந்தார்.

ஓர் அறையில் மட்டும் முதிய துறவிகள் இருவர் எப்பொழுதும் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தார்.

ஆர்வம் கொண்ட அவர் "இவர்கள் யார்? எப்பொழுதும் சதுரங்கம் ஆடுகிறார்களே" என்று மற்றவர்களிடம் விசாரித்தார்.

"அவர்கள் இருவரும் இளைஞர்களாக இந்த மடத்தில் சேர்ந்தார்கள். இப்பொழுது அவர்களுக்கு எண்பது வயதுக்கு மேல் ஆகிறது. எப்பொழுதும் சதுரங்கம் ஆடுவதைத் தவிர வேறு ஏதும் செய்வது இல்லை. புத்தரின் திருப்பெயரை அவர்கள் உச்சரித்து நாங்கள் கேட்டது இல்லை.

நாங்கள் என்ன கேட்டாலும் அவர்கள் பதில் சொல்வது இல்லை. எங்களோடு பேசுவதை அவர்கள் விரும்பவில்லை. அதனால் நாங்களும் அவர்களோடு பேசுவது இல்லை.

புத்த மதத்தைச் சேர்ந்தவர்களாகவே அவர்கள் நடந்து கொள்வது இல்லை. வேறு ஏதோ மதத்தைச் சேர்ந்தவர்கள் போல உள்ளவர்கள்" என்று பதில் வந்தது.

"அவர்கள் இருவரும் ஏன் அப்படி நடந்து கொள்கிறார்கள்? ஏதேனும் காரணம் இருக்க வேண்டும்" என்று நினைத்தார் போதி தருமர்.

அவர்கள் இருவரும் சதுரங்கம் ஆடும் அறைக்குள் நுழைந்தார். அவர்கள் அருகே அமர்ந்தார். அவர்களை எப்படி ஆடுகிறார்கள் என்று கவனித்தார்.

அவர்களில் ஒருவர் நின்றபடியும் இன்னொருவர் அமர்ந்தபடியும் ஆடிக் கொண்டிருந்தார்கள்.

சிறிது நேரத்தில் அவர்களில் ஒருவர் மறைந்து போனார்.

இதைப் பார்த்த போதி தருமர் வியப்பு அடைந்தார்.

மறைந்த அந்தத் துறவி மீண்டும் அங்கே தோன்றினார். மீண்டும் அவர்கள் விளையாடத் தொடங்கினார்கள். சிறிது நேரத்தில் இன்னொருவர் மறைந்து மீண்டும் தோன்றினார்.

தான் நினைத்தது சரி என்பதை உணர்ந்த போதி தருமர் "துறவியர்களே! நீங்கள் இருவரும் சதுரங்கம் விளையாடுவதைத் தவிர வேறு எதுவும் செய்வது இல்லை என்றார்கள். ஆனால் நீங்களோ ஞானம் பெற்றவர்களாக விளங்குகிறீர்கள்? ஏன் இப்படி மாறுபாடாக நடந்து கொள்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"நாங்கள் பல ஆண்டுகளாக சதுரங்கமே விளையாடுகிறோம். வேறு எதுவும் செய்வது இல்லை.

கறுப்புக் காய்கள் வெற்றி பெற்றால் உலக ஆசைகள் வெற்றி பெற்றதாக நினைப்போம்.

ஐயோ! உலகத்தில் தீமை பெருகப் போகிறதே என்ற வருந்துவோம்.

மாறாக வெள்ளைக் காய்கள் வென்றால் ஞானம் உலக ஆசைகளை வென்று விட்டதாக எண்ணி மகிழ்ச்சி அடைவோம். இப்படியே நாங்கள் தொடர்ந்து செய்து வந்ததால் ஞானம் அடைந்து விட்டோம்" என்று இருவரும் சொன்னார்கள்.

வெளியே வந்த போதி தருமர் நடந்ததை மற்ற துறவிகளிடம் சொன்னார்.

"ஞானம் பெற்ற அவர்களுக்கு உரிய மதிப்பு தரத் தவறி விட்டோமே. அறியாமையில் இருந்து விட்டோமே" என்று மற்றவர்கள் வருந்தினார்கள்.

எ.ஜோதி



மன்மத ஆண்டு மாசி மாதம்
13.02.2016 முதல் 13.03.2016 வரை




பொறுமையுடன் தன் காரியத்தில் கவனம் வைத்து செயல்படும் கன்னி ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு சில நேரம் மன அழுத்தம் அளித்தாலும் காலம் அறிந்து தொழிலில் சில யுக்திகளை மாற்றி அமைத்து கொள்வீர்கள். சகோதரர் வழியில் நன்மை பெறுவீர்கள். சுய முயற்சியால் முன்னேற்றம் பெறுவீர்கள்.

### பணியாளர்களுக்கு

பணியாளர்களில் சிலருக்கு இடமாற்றம் உண்டாகும். விவசாய தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு, தொழில் நுட்ப பயிற்சி புதிய சூழலுக்கு தகுந்த புதிதாக பயிற்சிகளை பெற வேண்டி வரும். ஆற்றலும், அறிவும் கொண்டு செயல்படுவீர்கள். பொருளாதாரம் முன்னேற்றம் பெரும்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொதுவாழ்வில் தனி கவனம் செலுத்து வீர்கள். அறியாத மக்களுக்கு பல விடயங்களை புரிய வைக்கும் வாய்ப்புகள் அமையும். நாட்டின் வளர்ச்சிக்கு தகுந்த மாற்றங்களை உரு வாக்க வேண்டுமென்று எதிர் பார்ப்பீர்கள். வங்கி கடன் வசதி கள் கிடைக்கும்.

### வியாபாரிகளுக்கு

செய்யும் தொழிலை தெய்வமாக கருதும் நீங்கள் ஒரு நேரம் கூட அதிலிருந்து வேறுபட மாட்டீர்கள். எதிலும் கவனமுடன் செயல்பட்டு திறமையான வியாபார வளர்ச்சியையும், பொருளாதார வளர்ச்சியையும் பெறுவீர்கள். காலத்திற்கு தகுந்த வியாபாரத்தில் முதலீடு செய்வீர்கள்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினர் சொந்த வீட்டு கனவுகள் வெற்றியை தரும். வசனகர்த்தா, துணை இயக்கு னர்கள், நடிகர்களுக்கு வாய்ப்புகள் வந்து சேரும். கலைஞர்களின் வெற்றி லட்சியமாக அமையும்.

### பெண்களுக்கு

பெண்களின் அடிப்படை விடயங்களை பற்றி பேசி புதிய நன்மைகளை பெண்களுக்கு பெற்று தருவதில் முழுமையான ஆர்வம் செலுத்துவீர்க்ள. பொருளரதார வளர்ச்சி கிடைக்கும்.

### மாணவர்களுக்கு

மாணவர்களுக்கு ஆற்றலையும் கல்வியின் முதன்மை பெறும் வாய்ப்பும் அமையும். ஆசிரியர் களின் ஆதரவும் பெருமையை பெற்று தரும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ் டம நாட்கள்

11.03.2016 வெள்ளி இரவு 07.24 முதல் 13.08.2016 ஞாயிறு இரவு 08.49 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

#### உத்திரம் 2, 3, 4 ஆம் பாதங்கள்

தொழிலில் பல மாற்றங்களை ஏற்படுத்தி பல விடயங்களில் ஈடுபட்டு இருந்து எந்த வளர்ச்சியும் இல்லையென்று இருந்தவர்களுக்கு இனி படிப்படியாக நல்ல மாற்றம் உண்டாகும்.

#### ஹஸ்தம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

மகிழ்ச்சியான வாழ்க்கையை அமைத்து கொள்ள பல முயற்சிகளை செய்து வந்தாலும் உழைப்பிற்கு தகுந்த ஊதியம் கிடைக்கும். யாரிடமும் ஏமாறும் காலம் இனி மாறும்.

#### சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்

சிற்ப கலைஞர்களின் வாழ்க்கைசூழ்நிலைநன்றாக இருக்கும். வறுமையில் கஷ்டபடுபவர்களுக்கு உதவிகளை செய்வீர்கள். விவசாயம் சார்ந்த பணி களை சிறப்பாக அமையும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** இளம் பச்சை, நீலம், வெண்மை

**அதிர்ஷ்ட திசைகள் :** தெற்கு, தென்மேற்கு, வடக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள் :** புதன், சனி, வெள்ளி

### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங் கள்

ஞாயிற்றுகிழமை ராகு காலத்தில் நவக்கிரக வழிபாடு செய்து ஐந்து மிளகு வெள்ளை துணி யில் கட்டி நல்லெண்ணெயை தீபமிட விரைய குரு தோசம் நீங்கி பொருளாதார நன்மைகளை பெறுவீர்கள்.



### சிவனாகும் சீவன்

காந்தக் கல்லுடன் இரும்பைச் சேர்த்து அதற்குக் காந்தம் ஏற்றி னால், இரும்பு காந்தமாகிறது. ஆனால் அது வடிவத்தில் இரும் பாக இருக்கிறது. அதுபோல், இறைவன் மனிதனின் ஆன்மா வில் தன் அருளைப் பதிக்கிறான். அதன் பயனாக ஆன்மா அருள் மயமாகிறது. இந்த நிலையை "சீவன் சிவனாகிறான்" என்று கூறு வார்கள்.



# தசாகாலங்களை கண்டறியும் விதம்!

ஜோதிட ஆசான் ஜோதிட தெய்வீகரிஷி 18 ஜோதிட குரு மார்களில் ஒருவரான பராசரர் 40 தசா விதிமுறைகளை கூறி யுள்ளார்.

இந்த தசாமுறைகள் எப் படி தொகுக்கப்பட்டது என்பது இன்றும் பலரின் ஆராய்ச்சிக்கு உட்பட்டுள்ளது. ஒவ்வொரு தசா காலங்கள் பல வர்க்க பாவங் களுடன் படிக்க வேண்டும் என்று ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. அதன் விளக்கம் நமது எண்ணங்களுக்குள் உடன்பட்டு உள்ளது என்று எடுத்துக் கொண்டாலும் அது முழுமையாக விளக்கம் தரவில்லை. தசா முறைகளில் பெரும் பாலோர் இந்தியாவிலும் வெளிநாடுகளில் "வேதிக் ஜோதிடம்" என்று சொல்லுபவர்கள் விம்சோத்தரி மஹாதசையை தான் அனுபவத்தில் வைத்துள்ளார்கள்.

இந்த பராசரர் தசா விவரங்களை பற்றி சிலர் கூறுவது என்னவென்றால் ஒவ்வொரு கால கட்டங்களில் மனிதர்களின் ஆயுள் மாறுபட்டு வந்துள்ளது. அதாவது முதலில் மனிதர்கள் ஆயுள் 40, 45 வரை இருந்தது. அது படிப்படியாக உயர்ந்து இன்று 120 வயது வரை வளர்ந்துள்ளது. இதை அடிப்படையாக கொண்டு தான் தசாமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன என்று சிலர் கருத்து.

இது ஓர் அளவுக்கு ஏற்றுக் கொள்ளும் வகை யில் உள்ளது. சிலருடைய கருத்துக்கள் முன்பே கூறியது போல் ஷோடஷவர்களுக்கு இதை பிணைத்து சொல்ல வேண்டும் என்பது ஒரு கருத்து. இதைப்பற்றிய முழுவிவரங்கள் சரியாக கணக்கிடப்படவில்லை. இதுபல ஆராய்ச்சிக்கு உரிய விடயங்களாக உள்ளன. அதனால் காலம் தான் பதில் கொடுக்கும் என்று விட்டு விட வேண்டும். பழக்கத்தில் உள்ள தசா முறைகளை நாம் பின்பற்றி பலிதம் சொல்ல தெரிந்து கொள்ள வேண்டும்.

தசா பலன்களை படிப்பது எப்படி என்பது ஓர் விதமான அறிவுத் திறன் கொண்டது ஏன் என்றால், தசா பலன்கள் அந்த தசையின் அதிபதியின் ஸ்தானத்தை (இடத்தை) வைத்து பலிதங்கள் கொடுப்பதாக நாம் நினைக்கிறோம். ஆனால் அது அப்படி செயல்படுவது இல்லை.

உதாரணமாக ஒருவர் ஜாத கத்தில் கீழ்க்கண்ட விதமாக

| | | | |
|---|---|---|---|
| - | குரு சனி | - | - |
| சந் | இராசி | | சூரி, புத, ராகு |
| கே | | | சு |
| - | - | ல | - |

| | | | |
|---|---|---|---|
| செ | - | - | கேது |
| - | நவாம்சம் | | சுக் குரு |
| - | | | - |
| ரா | லக் | சூ சனி | புதன் |

கிரஹம் அமைந்துள்ளது. தற்சமயம் நடப்பு: ராகு தசை கேது புத்தி

முடிவு: 28.07.2012

இந்த ஜாதகர் ஒரு ஜோதிடரிடம் இந்த பையன் படிப்பானா? நல்ல தொழில் செய்வானா என்று கேட்டால் ஜோதிடர் எப்படி பலன் சொல்ல வேண்டும் என்ற முறை உள்ளது. ஆனால் பெரும்பாலோர், அந்த ஜாதகருக்கு நடக்கும் தசாபுத்தியை வைத்து பலன் சொல்லுவார்கள். இது சரியான வழி இல்லை. முறையானதும் அல்ல. ஏன் என்றால் ஒவ்வொரு தசா காலத்திலும் ஒரு விதமான பலிதங்கள் இருக்கும். அந்த தசாநாதர்கள் ஜாதகத்தில் அமைந்த விதமாக இருக்கும். ஆகையால் ஜாதகத்தின் நுணுக்கத்தை தெரிந்து கொள்ளாமல் பலன் கூறுவது சரி அல்ல என்பது தான் ஜோதிட சாஸ்திரம் சொல்லும் விதி.

கேட்கப்படும் கேள்விக்கு உரிய "வீட்டை" கண்டு அங்கு ஏதாவது ஒரு கிரஹம் உள்ளதா, பார்வை பெற்று உள்ளதா அந்த வீட்டின் அதிபதியின் செயல் என்ன அவர் அந்த ஜாதகரின் லக்னத்துக்கு துணை போகிறாரா என்று பார்த்து, ஆராய்ந்து பிறகு நடக்கும் தசைக்கும் அந்த வீட்டுக்கும் உள்ள சம்பந்தம் என்ன என்று அறிந்து பலன் சொல்ல வேண்டும். ஆனால் எடுத்த உடன் தசாவை வைத்து பலன் சொல்லுவது என்பது ஜோதிட விதிமுறைக்கு உட்பட்டதல்ல.

இந்த உதாரண ஜாதகத்தில் அந்த பையன் கேட்பது நன்றாக படிக்க முடியுமா நல்ல வேலை வாய்ப்புகள் உண்டா? என்பதுதான்.

இந்த கேள்விக்கு பதில் 4ஆம் வீட்டிலும், 10ஆம் வீட்டிலும் உள்ளது. படிப்பு 4ஆம் வீட்டை சார்ந்து உள்ளது. காரகர்கள் புதன் குரு சந்திரன் கேது வேலை 10ம் வீட்டை சார்ந்து காரகர்கள் சனி, செவ்வாய், குரு, சுக்கிரன், சூரியன், ராகு. இங்கு 4ஆம் வீட்டை பார்க்கும் பொழுது அங்கு கேது அமர்ந்துள்ளார். அவரை சூரியன், புதன் ராகு பார்க்கிறார்கள். செவ்வாயும், சனியும் பார்க்கிறார்கள்.

கேது எந்த வீட்டை சார்ந்து உள்ளாரோ, அந்த வீட்டின் செயல்களை அவர் தடுத்து விடுவார் என்பது தான் ஜோதிட விதி. ஆகையால் ஜாதகரின் படிப்பு தடைப்படும் என்று காட்டுகிறது. கேதுவுக்கு கேந்திரங்களில் அமைந்த கிரஹங்களின் பார்வை இவருக்கு தொழில் முறை கல்வி என்று தான் காட்டுகிறது. அதாவது ஐடிஐ பட்டய படிப்பு என்று உள்ளது. ஏன் என்றால் பட்டபடிப்புக்கு உடைய 9ம் அதிபதியான புதன் வக்ரம் கொண்டு 10ஆல் ராகு, சூரியனுடன் சேர்ந்து கேதுவை பார்க்கிறார். இங்கு 9ஆம் வீடு ஒருவருடைய "மூளை வளர்ச்சியின்" தன்மையை காட்டும் இடம்.



## புறவழிபாடுகள்!

ஒருவன் தன் உடல் உழைப்பால் இறைவனுக்குச் செய்யும் தொண்டு "சரியை" எனப்படும். இதில் தினமும் விடியற்காலையில் கோயிலுக்குச் சென்று வலம் வருதல், கோயிலைத் துப்புரவு செய்தல் (அலகிடுதல், மெழுகிடுதல்), மலர் கொய்தல், சுவாமிக்கு மாலை கட்டிக் கொடுத்தல், சுவாமியைக் கும்பிடுதல், இறைவனின் பொருள்சேர் புகழை இசையோடு பாடுதல், ஆடுதல் போன்ற உடலால் செய்யும் புறவழிபாடுகள் அனைத்தும் "சரியை" எனப்படும். இதை விளக்கி வாழ்ந்தவர் அப்பர் சுவாமிகள்.



ராகு, கேதுவின் தன்மையை விளக்கும் பொழுது ஜோதிட விதிகள் கூறுவது அத்துடன் சார்ந்துள்ளவர்கள் தன்மையை பெற்றுக் கொண்டு தன்னுடைய தசா காலத்தில் அதை வெளிப்படுத்துவார் என்பது தான் ஜோதிடவிதி. ஆகையால் இங்கு ராகு, சூரியன், புதன் தான் இருக்கும் வீட்டின் அதிபதியான சந்திரன் தன்மைகளை பெற்று தன்னுடைய தசா காலத்தில் கொடுக்க வேண்டும்.

M.G.பாரதி

# நீலகிரிமலையில் ஒரு சாந்தி வேள்வி!



நீலகிரி மலையின் மேல், மலையின் வடமேற்குப் பகுதியில் இருப்பது கெத்தை பெருபள்ளா என்ற ஊர். சுருக்கமாக இந்த ஊரைக் கெத்தை என்று சொல்வது வழக்கம். இங்குத் தண்ணீர் மூலம் மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது.

**இரவில் வந்த இயற்கையின் சீற்றம்:**

இந்த மின் உற்பத்தி நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்களின் குடியிருப்பு அங்கு ஒரு உயர்ந்த மலையின் அடிவாரப் பள்ளத்தில் அமைந்திருந்தது. 1990 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வங்கக் கடலில் புயல் சின்னம் உருவானபோது, பத்து நாட்களாக நீலகிரி மலை முழுவதும் நல்ல மழை பெய்தது. அப்பொது 25.10.1990 அன்று இரவு சுமார் 9.15 மணிக்கு ஏற்பட்ட இயற்கையின் சீற்றம் பற்றி நினைத்தாலே நெஞ்சு வெடித்துவிடும் போல இருக்கிறது.

**விபத்தின் விவரம்:**

விபத்து நடந்த இடத்தில் 140 குடியிருப்புகள் அமைந்துள்ளன. இந்த இடத்துக்கு அருகிலேயே மிக உயரமான மலை ஒன்று இருக்கிறது. மழை பெய்யும் போதெல்லாம் அந்த மலை உச்சியிலிருந்து தண்ணீர் புரண்டு சிறு வாய்க் காலாக அந்தக் குடியிருப்பின் நடுவே போகும். பத்து நாட்களாகத் தொடர்ந்து பெய்த மழையால் அந்த மலை முழுவதும் நனைந்து ஊறிப் போயிருந்தது.

**மலை முகட்டில் நீர்த் தேக்கம்:**

அந்த மலை உச்சியின் அடிப்பாகத்தில் ஒரு நீர்த்தேக்கம் இருந்திருக்கிறது. மலை ஊறிக் கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீர் கீழே அரித்துச் சென்று. உச்சியின் அடிப்புறத்திலே உள்ள வெற்றிடத்தில் தேங்கியிருக்கும் மலையில் உள்ள தண்ணீர் பாறையும். மண்ணும் மூடியிருப்பதால் வெளியே யாருக்கும் தெரிவதில்லை.

**இரவில் இடித்த இடி:**

அன்று இரவு சுமார் 9.15 மணிக்கு மழை பெய்து கொண்டிருக்கும் போதே பயங்கரமாக ஓர் இடி இடித்தது.

அந்த இடியானது மிக உயரமான அந்த மலையின் உச்சியைத் தாக்கியது. மின்னல் தாக்கிய மலைக் முகடு சிதைந்தது. யானையைக் காட்டிலும் பெரிய பெரிய பாறைகள் செங்குத்தான அந்த மலை உச்சியிலிருந்து கீழே உருண்டன. தண்ணீரும் கெட்டியான சேறும் சக்தியும் மேலேயிருந்த அசுர வேகத்தில் கீழே வழிந்து ஓடின. நடுங்கும் குளிரும், ஊதைக் காற்றும் இரத்தத்தை உறைய வைத்தன.


**எங்கும் அழிவு:**

இடி இடித்ததும் மின்சாரம் நின்று போய் எங்கும் இருள் சூழ்ந்தது. கண் இமைக்கும் நேரத்திற்குள் யானைப் பாறைகள் வீடுகளின் மேல் தார்சின் மீது விழுந்து நொறுங்கின. ஓட்டு வீடுகள் தவிடு பொடியாயின. என்ன ஆயிற்று என்று நினைப்பதற்குள் வீட்டில் உள்ளே இருந்த குடும்பத்தினர் பாறைகளால் நசுக்குண்டு மாண்டனர். போதாதற்குத் தண்ணீரும் சகதியும், இடித்த வீடுகளில் மூடிக் கொண்டு ஓடின.

பாறைக்குக் கீழ் உடல் நசுங்கி உருத்தெரியாமல் போனவர்கள், மண்ணில் புதையுண்டு மாண்டு போனவர்கள் மொத்தம் 13 குடும்பங்களைச் சேர்ந்த 37 நபர்கள் ஆவர். அவர்களின் உடமைகள், பீரோ, கட்டில், கிரைண்டர், துணி துவைக்கும் யந்திரம், பாத்திரங்கள். தட்டு முட்டுச் சாமான்கள் எல்லாம் பாறைக்கு அடியில் அப்பளமாய்

நசுங்கிப் போயின. சில சடலங்கள் தண்ணீரில் அடித்துச் சொல்லப்பட்டுக் கீழ் மலையில் உள்ள அணைக்கட்டில் சேற்றில் புதைந்து கிடந்தன.

பொழுது விடிந்ததும், இடிபாடுகளுக்கிடையே கண்ணுக்குத் தெரிந்த சடலங்களை அகற்றினார்கள். ஆனால் யானைப் பாறைகளை உடைத்து. மணல் மேடுகளைத் தோண்டி, உள்ளே கிடந்த பிணங்களை எடுக்கப் பல நாட்கள் ஆகிவிட்டன. அழுகிய நிலையில், பொறுக்க முடியாத நாற்றத்துடன் வெளிக் கொணரப்பட்ட சடலங்களை இப்போது நினைத்தாலும் உடல் சிலிர்த்து நடுங்குகிறது.



**அருள்திரு அடிகளாரை தரிசித்தது:**

03.11.1990 அன்று ஒரு திருமண ஏற்பாடு தொடர்பாக நம் அம்மாவைச் சென்று சந்திக்க வேண்டிய வாய்ப்பு ஏற்பட்டது. அம்மாவை வணங்கி எழுந்தேன். "என்ன...? ஊட்டியில் மழை உண்டா?" எனக் கேட்டார்கள்.

"மழை பெய்ததம்மா அப்போது கெத்தையில் மலைப் பாறைகள் உருண்ட 44 வீடுகளை நாசப் படுத்தி 37 பேர்களைப் பலி கொண்டதம்மா!" என்றேன். உடனே அம்மா, "அங்கு நீ ஏன் இன்னும் போகவில்லை. அந்த விபத்தில் இறந்தவர்களின் ஆன்மாக்கள் சாந்தி அடையாமல் தவிக்கின்றன. உடனடியாக அங்கே போ! குழந்தைகள் ஆதர வற்றவர்கள் பிழைத்திருந்தால் அவர்களைத் தத்து எடுக்க ஏற்பாடு செய்! நீ பணியைத் துவங்கு! நான் அங்கே வருகிறேன் என்றார்கள். உடனே போறேம்மா! உங்கள் அருளும் ஆசியும் வேண்டும் என்று வணங்கி எழுந்தேன். அடுத்து, மேட்டுப்பாளையத்தைச் சேர்ந்த டாக்டர் சுசீலா அவர்கள் அம்மாவைத் தரிசித்தார். அவரிடம், கெத்தையில் மருத்துவப் பணி தேவைப்பட்டால் செய்யுங்கள் என்றார்கள்.

9.11.1990 அன்று கெத்தைக்குச் சென்றேன். அங்கே தப்பிப் பிழைத்த மக்களிடம் உரையாடி நிலைமைகளை அறிந்தேன்.

**ஆத்ம சாந்தி வேள்வி**

கலெக்டர் 16.12.1990 அன்று காலை 10.30 மணிக்கு வந்து விட்டார். 11.00 மணிக்கு வேள்விப் பொறுப்பாளர்கள் ஓணம்பாக்கம் சுப்பராயன் அவர்கள் மேற்பார்வையில் கெத்தை விபத்தில் அகால மரணம் அடைந்தவர்களுக்கு "ஆத்ம சாந்தி வேள்வி" நடைபெற்றது. அன்று மார்கழி முதல் நாள். அமாவா சையாகவும் இருந்தது.

கெத்தை விபத்து நடந்து 48 நாட்கள் கழித்தே டிசம்பர் 16 வந்தது. இறந்த வருக்கான சடங்குக்குரிய அமாவாசை நாளை கலெக்டர் வாயிலாகக் கொடுத்த அன்னையின் திருவருளை எண்ணியெண்ணி உளம் நெகிழ்ந்தேன்.

• எஸ்.ராமமூர்த்தி



**ஜீவாத்மாக்களுக்கு அருளும் ரோஹிணி!**

நடசத்திரங்களில் ரோகிணியும் ஒன்று. மகாலட்சுமிக்கும் ரோகிணி என்ற ஒரு பெயர் உண்டு. இதற்கு "ஜீவாத்மாக்களைச் சம்சாரத் திலிருந்து விடுவிப்பவள்" என்று பொருள்.

**மன்மத ஆண்டு மாசி மாதம்**

**13.02.2016 முதல் 13.03.2016 வரை**




எதையும் கண்டு மனம் தளராது பாடுபடும் துலாம் ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு கிரக அமைப்புகள் சாதகமாக அமைவதுடன் வாழ்க்கையிலும் செய்யும் தொழிலும் மேன்மை பெறுவது நல்ல பலனை தரும். திறமைகளை வளர்த்து கொள்வீர்கள். பொருளாதாரத்தில் வளர்ச்சி எட்டுவீர்கள்

**பணியாளர்களுக்கு**

தெளிவான வளர்ச்சி பெறும் காலமாக அமையும். உங்கள் மீது நம்பிக்கையை வைத்து தொழிலில் உறுதியான நிலைகளை எடுப்பீர்கள். பணியில் எந்த சோதனை வந்தாலும் அதை பற்றி கவலைப்படாமல் தன் கடமையை தவறாமல் செய்து வருவீர்கள். பொருளாதார வளர்ச்சி கிடைக்கும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொது நல விடயங்களில் பிறரின் ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் கேட்டு செயல்படுவீர்கள். எதையும் பலமுறை முன் யோசனையுடன் செய்வது உங்களின் பண்பாக அமையும். அரசாங்க சலுகைகளை மக்களுக்கு பெற்று தருவதில் கவனம் செலுத்துவீர்கள். பொருளாதார நிலை சிறக்கும்.

**வியாபாரிகளுக்கு**

தொழில் ஸ்தானாதிபதி பார்வை ராசிக்கு இருப்பது உங்களின் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும். எதையும் நீங்களே முடிவு செய்து கொள்வீர்கள். பாத்திர விற்பனை நல்ல முன்னேற்றம் உண்டாகும். தொழில் சார்ந்த பயணம் நன்மையை தரும். பொருளாதார மேன்மை அடைவீர்கள்.

**கலைஞர்களுக்கு**

உங்களின் முயற்சிக்கு நல்ல பலனை பெற்று தருவீர்கள். கலைஞர்களின் ஒற்றுமைக்கு பல உதவிகளை பெற்று தருவீர்கள். ஒப்பனை ஆடை அலங்கார கலைஞர்களுக்கு வரவேற்பை தரும். ரசிகர்களின் எண்ணங்களுக்கு தகுந்த நிகழ்ச்சிகளை செய்து பாராட்டு பெறுவீர்கள்.

**பெண்களுக்கு**

கணவன் மனைவி உறவு சிறப்பாக அமையும். எதிர்காலத்தை கருத்தில் கொண்டு சில வாய்ப்புகளை அமைத்துக் கொள்வீர்கள். தொழிலில் மிகவும் கவனமாக செயல்படுவீர்கள். பொருளாதாரத்தில் வளர்ச்சி கிடைக்கும்.

**மாணவர்களுக்கு**

கல்வியில் முதன்மையாக இருந்தாலும் சிலநேரம் பிறரின் உதவிகளை நாட வேண்டி வரும். சிவில் அறிவியல் கல்வி சிறப்பாக அமையும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

15.02.2016 திங்கள் பகல் 01.53 முதல் 17.02.2016 புதன் மாலை 05.22 மணி வரையும்

13.03.2016 ஞாயிறு இரவு 09.50 முதல் 15.03.2016 செவ்வாய இரவு 01.11 மணி வரையும்

**நட்சத்திர பலன்கள்**

**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள்**

எவ்வளவு கவனமாக செயல்பட்டாலும் சில நேரம் தடுமாற்றங்களை ஏற்படுத்தும். செய்யும் தொழிலில் முன்னேற்றம் இருக்கும். இதற்காக நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டி வரும்.

**சுவாதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். உங்களின் திருமண யோகம் விரைவில் ஏற்படும். விளையாட்டுகளின் மூலம் சிலருக்கு பண உதவியும் தொழில் சார்ந்த உதவியும் கிடைக்கும்.



**சொல்லின் செல்வன்**

"கண்டனன் கற்பினுக் கனியை" என்னும் அனுமனின் சொல், வெல் லும் சொல்லாக அமைந்தது. அதனால் அவர் "சொல்லின் செல்வன்" என்று அழைக்கப்படுகிறார்.

**விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

விறுவிறுப்பான செயல்பாடுகளை செய்து எதையும் சவாலாக செய்து வருவீர்கள். தொழில் சார்ந்த பிரச்சினைகளை சிறப்பாக செயல்படுத்த முன்வருவீர்கள். வங்கி மூலம் கடன் பெற வாய்ப்புகள் அமையும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** பழுத்த வெண்மை, நீலம், பச்சை

**அதிர்ஷ்ட திசைகள் :** மேற்கு, வடகிழக்கு, தென்கிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்:** வெள்ளி, திங்கள், புதன்

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

வெள்ளிக்கிழமை சுப்ரமணியரை வணங்கி வெள்ளை நிற பூக்கள் வைத்து நெய் தீபம் இட்டு வர கஷ்டங்கள் நீங்கி சுபிட்சம் பெறுவீர்கள். சனிக்கிழமை பைரவர் வழிபாடுகள் ஏற்றமான வாழ்க்கையை தரும்.



# அர்ச்சகரின் வயது முக்கியமல்ல....!

மந்திரத்தை வெறும் எழுத்துகள் என்றோ, கடவுளின் விக்கிரகத்தை வெறும் கல் என்றோ, ஆசார்யனை வெறும் மனிதன் என்ற எண்ணத்திலோ பார்க்கக் கூடாது என்று ஆகமம் எடுத்துரைக்கிறது.

நமது அனைத்து எண்ணங்களும் ஒடுங்கி ஒருநிலைப்பட்டு ஆனந்தம் பெறவேண்டிய இடம் ஆலயம். எப்படி நெருப்பானது சிறிய தாக இருந்தாலும் பெரியதாக இருந்தாலும் வீரியம் சமமாக இருக்கிறதோ, அதேபோன்று அர்ச்சகர்களில் வயதானவர், சிறியவர் என்ற பாகுபாடுகளுக்கே இடமில்லை.

"அயம் மே ஹஸ்தோ பகவான் அபிமர்ஷண" என்ற வேத வாக்கியத்தின்படி, அர்ச்சகரின் கையானது கடவுளைக் காட்டிலும் மிகவும் பவித்ரமாகப் போற்றப்படுகிறது.

கடவுளைவிடப் பெரியவர் என்று யாரும் இல்லை, எனினும், இந்தக் கைகள் தானே பகவானுக்கு உயர்ந்த சேவைகளைச் செய்து, ஆலயத்தில் சாந்நித்தியம் நிலைத்திருக்கச் செய்கிறது என்ற பொருளில், வேதம் அர்ச்சகரை உயர்வாகப் போற்றுகிறது வயதினாலோ உயரத்தினாலோ சிறியவர்களை நாம் சிறியவர்கள் என்று நினைப்போமானால், ஆலயத்தைவிட ஆலயக் கருவறை சிறியதாகத்தானே விளங்குகிறது" கருவறையில்தானே மூல மூர்த்தியை வழிபடுகிறோம்.

ஆதலால், அர்ச்சகப் பரம்பரையிலேயே உதித்த அந்தச் சிறுவயது அர்ச்சகரும் வழிவழியாக வந்தமையால், அந்த தன்மை அவருள்ளே பதிந்திருக்கும்.

எனவே, ஆலயத்தில் அருட்சக்தியை நமக்கு அருட்பிரசாதங்கள் மூலமாக அளிக்கும் அர்ச்சகரின் வயதைப் பார்க்க வேண்டியதில்லை. வீரியம்தான் முக்கியம்.

# சீதையின் முற்பிறவி

**ஒருமுறை இராவணன் பூமியைச் சுற்றி வரும்போது இமயமலையின் பனிபடர்ந்த குகை ஒன்றில் தவம் செய்யும் அழகான பெண்ணைப் பார்த்து மோகம் கொண்டான். அவளை நெருங்கி "நீ யார்? எதற்காகத் தவம் செய்கிறாய்?" என்று கேட்டான்.**

அதற்கு அந்தப் பெண், "நான் பிரகஸ்பதியின் பேத்தி. என் பெயர் வேதவதி என்னுடைய தந்தை நான் "மணம் புரியத்தக்கவர் விஷ்ணு ஒருவரே என்று கருதினார். இதைக் கேள்விப்பட்ட தைத்ய அரசன் சம்பு என் தந்தை தூங்கிக் கொண்டிருந்த போது அவரைக் கொன்று விட்டான். அந்தத் துக்கத்தைத் தாங்கமுடியாமல் என தாயும் உடன்கட்டை ஏறிவிட்டாள். என்னுடைய தந்தையின் ஆசையை நிறைவேற்ற நான் விஷ்ணுவை நோக்கி பல கால மாகத் தவம் செய்து கொண்டிருக்கிறேன்" என்றாள் அந்தப் பெண்ணழகி.

"இத்தனை அழகும் இளமையும் கொண்ட நீ இந்தக் காட்டில் இருக்கக்கூடாது. வா என் அரண் மனைக்கு" என்று சொல்லி அவளது முடியைப் பிடித்து தூக்கினான் இராவணன். வேதவதி தன் கையை உயர்த்தினாள். அது வாளாக மாறியது. அந்த வாளினால் தன் தலை முடியை அறுத்துக் கொண்டு அவன் பிடியில் இருந்து விடுபட்ட அவள்.

"நீசனே என் தவத்தைக் கெடுத்து விட்டாய். விருப்பம் இல்லாத பெண்ணை நீ தொட்டால் உன் தலை வெந்து இறந்து போவாய். உன்னைக் கொல்ல என்னால் முடியாது. ஆனால் உன்னைக் கொல்வதற்காக அக்கினியில் புகுந்து மீண்டும் பிறப்பேன்" என்று சொல்லிவிட்டு நெருப்பில் குதித்து இறந்து போனாள்.

மீண்டும் ஒரு தாமரை மலரில் இருந்து தோன்றினாள். அவளை அரண்மனைக்குக் கொண்டு வந்தான் இராவணன். அவளது சாமுத்திரிகா லட்சணங்களைக் கூர்ந்து கவனித்த மந்திரிகள் இவள் இங்கு இருந்தால், உன் மரணத்திற்குக் காரணமாவாள் என்றனர். இதனால் இராவணன் அவளை கடலில் தூக்கி எறிந்தான். அவள் அங்கிருந்து யாக பூமியை அடைந்தாள். ஜனக மகாராசனின் பொற் கலப்பை கொண்டு உழுகின்ற போது பூமியில் இருந்து வெளிப்பட்டாள். சீதை என்ற பெயருடன் வளர்ந்தாள். இராமனாக அவதாரம் எடுத்து வந்த மகாவிஷ்ணுவை மணம் புரிந்து கொண்டாள். கிருத யுகத்தில் வேதவதியாகப் பிறப்பெடுத்தவள் மறுபடியும் திரேதாயுகத்தில் சீதையாக மறுபிறவி எடுத்து வந்து தனது சபதத்தை முடித்துக் கொண்டாள். இது தான் சீதையின் முற்பிறப்பின் ரகசியம். ஆக ஆன்மாக்கள் மீண்டும் மீண்டும் பிறக்கின்றன. மனிதனின் மரணத்தோடு அவள் வாழ்க்கை முடிந்து போவதில்லை.

நைந்து போன ஆடையைக் கழற்றி விட்டு நாம் வேறு ஆடையை உடுத்துக் கொள்வதைப் போல, ஆத்மா நைந்து போன உடலை உதறிவிட்டு வேறு உடலை எடுத்துக் கொள்கிறது என்கிறார் பகவான் கிருஷ்ணர் பகவத் கீதையில்.

அடுத்த பிறவிக்குச் செல்வதற்கோ அல்லது பிறப்பில்லாத நிலையை அடைந்து இறைவனின் திருப்பாதங்களில் இளைப்பாறுவதற்கோ மரணம் தான் தலைவாசல். அதனால் இதை சொர்க்கத்தின் தங்கச்சாவி என்கின்றனர் விவரம் அறிந்த பெரியோர்.

வேணு சீனிவாசன்



# மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் புத்தாண்டு விழா

மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில், கடந்த ஆண்டுகளைப் போலவே ஆனால் மிக எளிமையாக 2016 ஆம் ஆண்டு ஆங்கிலப் புத்தாண்டு விழா கலச, விளக்கு, வேள்வி பூஜை, கலை நிகழ்ச்சிகள் மற்றும் மேடை நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்பட்டது.




மேடை நிகழ்ச்சியின் போது காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் மற்றும் சென்னை மாவட்ட வெள்ள நிவாரண பணிகளுக்காகவும், மருத்துவ உதவிகளாக்வும் ரூபா ஐம்பது லட்சம் மதிப்புள்ள பொருட்களை ஆன்மீக குரு பங்காரு அடிகளார் அவர்கள் வழங்கினார்கள். இந்த விழாவிற்கு பொறுப்பேற்றிருந்த கர்நாடக மாநிலத்திலிருந்து, ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்குபற்றினர். காலை 04.00 மணிக்கு துவங்கி கருவறையில் அம்மனுக்கு சிறப்பு அபிடேக அலங்கார, ஆராதனைகள் நடைபெற்றன. பிற்பகல் 04.15 மணிக்கு கலச விளக்கு வேள்வி பூஜையை லட்சுமி பங்காரு அடிகளார் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

விழாவின் நிறைவாக, இரவு 11.00 மணிக்கு 2016ஆம் ஆண்டை வரவேற்கும் விதமாகசிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன

சித்தர் பீடத்தில் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் புத்தாண்டு வாழ்த்துக்களுடன் 'ஓம் சக்தி' ! "பராசக்தி"! என்ற வாழ்த்துரைகளை எழுப்ப, லட்சுமி பங்காரு அடிகளார் கருவறையில் அம்மனுக்கு சிறப்பு தீபாராதனை காட்டினார். குழுமியிருந்த பக்தர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

55ஆம் பக்க தொடர்ச்சி

அகஸ்டஸ் சீசர் அவரது தாய்வழிப் பாட்டியின் வீட்டுக்கு அனுப்பப்பட்டார். அகஸ்டஸ் சீசரின் ஜாதகக் கோளாறே முதலில் தந்தையையும் பின்னர் பாட்டியையும் பலி கொண்டதாக குடும்பத்தினர் பேசத் தொடங்கினர். இது இளம் அகஸ்டசின் மனதில் ஆழமாகப் பதிந்து போயிற்று.

தான் ஒரு அதிர்ஷடமில்லாதவன். தான் செல்லுமிடமெல்லாம் மரணத்தின் நிழல் படிகிறது என்ற எண்ணம் அகஸ்டசின் மனதின் அந்த சிறு வயதிலேயே நிலைபெறத் தொடங்கியது. காசு பணத்திற்கு குறைவில்லை. ஆனால் அந்த பதினொரு வயது சிறுவனுக்கு அன்பும், அரவணைப்பும் இல்லாமற் போயிற்று. இவனது ஜாதகக் கோளாறு பற்றிய விவரம் குடும்பத்தில் அனைவரும் சற்றே ஒதுங்கியே இருந்தனர்.

கல்வி, போர் பயிற்சி போன்றவை தடையின்றி நடந்து கொண்டிருந்தது. ஆனால் உண்மையான பாசம் மட்டும் அகஸ்டசுக்கு கிடைக்கவில்லை. பின்னாளில் அகஸ்டஸ் ஒரு யதேச்சகாரியாக மாற இதுவும் ஒரு முக்கியமான உளவியல் காரணம் என வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஜூலியஸ் சீசரின் படையில் ஒரு தளபதியாக அகஸ்டஸ் சீசர் நியமிக்கப்பட்டார். இளம் கன்று பயமறியாதல்லவா? வெகு விரைவிலேயே பல சிறு போர்களில் பங்கு கொண்டு வெற்றியைத் தேடித் தந்தார். அகஸ்டஸ். மனதில் கவலைகளும், குழப்பங்களும் நிறைந்திருந்தாலும் கூட, போர் என்று வந்து விட்டால் சூறாவளியாக எதிரி படைகளைத் துவம்சம் செய்து விடுவார் அகஸ்டஸ் சீசர். மிகச் சிறந்த படைத்தளபதி என்ற புகழ் வெகு விரைவிலேயே அகஸ்டசுக்குக் கிடைத்தது.

அகஸ்டசின் சொல்லை வேதவாக்காகக் கொண்டு செயல்படும் ஒரு பெருமை வீரர் படையும் அகஸ்டசின் பின்னால் இருந்தது. இவ்வளவு இருந்தும் மனதில் அமைதி மட்டும் இல்லை தான் ஒரு அதிர்ஷ்டம் கெட்டவன். பிறக்கும் போதே ஜாதகக் கோளாறுடன் பிறந்தவன் என்ற எண்ணம் அகஸ்டசை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது.

அகஸ்டஸ் சீசர் இந்த நிலையிலிருந்து ரோம சாம்ராஜ்ஜியத்தின் முதல் சக்கரவர்த்தியாக உயர்ந்தார்.


ஜாண்.பி.நாயகம்

# எண்கணிதமும் சோதிடமும்

# அக்காள் தங்கையே!



நியூமராலஜியின்படி அணுகிவிடும்போதும் கூட அவரவர்ஜாதகத்தில்கிரகாச்சாரங்களின் அமைப்புகளுக்கும். எண்கணித முறைக்கும் ஏதோ ரகசியமான சம்பந்தம் உள்ளது என்பதை தீர்க்கமாக ஆய்வு செய்யும் பொழுது கண்டு கொள்ள முடியும். ஜாதகத்திற்கு பலன் சொல்லும் போது நீண்ட ஒரு பிரசங்கம் செய்ய வேண்டியதிருக்கும். பலன் கேட்க வருபவர்கள் அத்தனை பொறுமையுடன் இல்லை. பலாபலன்கள் ஓரிரு வார்த்தைகளில் உடனே சொல்லுங்கள் என்று கேட்கும் காலம் இது. புதிய அணுகுமுறையும் வேண்டும் என்பது அடுத்த வாதம். ஆகவேதான் என்ன பொருத்தம் என்றேன்.



விடயத்திற்கு வருவோம். ஒருவர் பிறந்த குறிப்பு 10 08 1970 பிறப்பு எண் 1 கூட்டுத் தொகை 8. இந்த காம்பினேஷன் ஒரு ஸ்ட்ராங்கான காம்பினேஷன் (சூரியன் சனி). இதன்படி இவருடைய எதிர்பார்ப்பு அசாத்தியம் தலை வணங்குபவர் அல்ல. இவரை நிதானப்படுத்த எண்கள் 3 அல்லது 5இன் உதவியால் இந்த நபர் வாழ்க்கையில் வெற்றி நடை போட முடியும் என்பதாக ஆலோசனை தர முடியும். இனி இவருடைய பிறப்பின் ஜாதகத்தை பார்க்கும் பொழுது ஆடிமாத சூரியனாகவும். செவ்வாய் இணைந்த சூரியனாகவும் குருவும் சனியும் பார்த்த நிலையிலும், புதனும் கேதுவும் இணைந்த நிலையிலும் கிரகாச்சாரங்கள் அமைந்துள்ளன. ஆகவேதான் கிட்டத்தட்ட எண் கணிதம் எடுத்துக் காட்டும் விதத்தை ஜாதக கிரகாச்சாரங்களோட பொருந்தி வருவதை கண்டு கொள்ள முடிகிறது. அவர் எதிர்பார்க்கும் சுருக்கமான பதிலுக்கும் விடை காண முடிகிறது.

அடுத்த உதாரணமாக ஒரு குழந்தையின் பிறப்பு குறிப்பு 23 06 2000 குழந்தையின் பெற்றோர், என் குழந்தை எப்படி? என்று ஒரே மூச்சில் என்னை கேட்டுவிட்டார்கள். பிறப்பின் எண்.5, கூட்டுத்தொகை 4, தங்கள் குழந்தை சமத்தானது. சாதனை நாயகி என்றேன். காரணம் புதன் வலுத்துவிட்டார். ராகு பிரதான பாத்திரம் ஏற்று வாழ்க்கையை நடத்திக் காட்டப் போகிறார். என்ன ஆச்சரியம்! கடக லக்ன ஜாதகம், லக்ன கேந்திரத்தில் ராகு மாத்திரம், மிதுன வீட்டில் புதன் சுக்கிரன் சூரியன் மற்றும் செவ்வாய் இணைந்த காட்சி. குருசனி இணைந்த நிலை, சந்திரனுக்கு குருவும் சனியும் 4 என்ற கேந்திரத்தில் இப்படியாக அற்புதமாக ஜாதகம் அமைந்து விட்டது. ஆகவே எண்கணிதத்திற்கும் ஜாதக கிரகாச் சாரங்களுக்கும் ஏதோ ஒரு சம்பந்தம் இயற்கையாகவே அமைந்து விட்ட நிலையைக் காண்கிறோம்.

அடுத்த உதாரணமாக, பிறந்த திகதி 07.07.1973, பிறப்பு எண்7, கூட்டுத்தொகையும் 7 தான். முகத்தை சுளித்துக் கொள்ளவில்லை. இந்த ஜாதகிக்கு தைரியம் ஊட்ட ஆலோசனை அவசியமாகிறது. காரணம். கேது வலுத்து விட்டார். அது மட்டுமல்ல பிரதான கிரகத்தோட கேது சம்பந்தப்பட்டிருக்க வேண்டும் என்று கருத்தில் கொண்டு. வாழ்க்கை வாழ்ந்து காட்டுவதற்கே என்றும் இந்த லௌகீக உலகத்தில் வறட்டு வேதாந்த சிந்தனைகளை விட்டு விட்டு, எல்லோரையும் போல உனக்குத் தரப்பட்ட ஆசீர்வாதத்தைப் பயன்படுத்திரிலாக்ஸாக மகிழ்ச்சியுடன் வாழ்ந்து காட்டினால் என்ன என்று சுருக்கமாக கூறிவிட்டு ஜாதகத்திற்கு சென்றேன்.

என்ன ஆச்சரியம், கும்ப லக்னம் கன்யா ராசி பஞ்சம ஸ்தானத்தில் லக்னாதிபதி சனி ஸப்தமாதிபதி சூரியனோடும் கேதுவோடும் இணைந்திருப்பதைக் கண்டேன். இந்த பஞ்சம வீட்டை மற்றுமொரு பாவி செவ்வாய் நறுக்கென்று நாலாம் பார்வையில் பார்த்து விட்டார். ஆதலால் தான் ஜாதகியின் மனதில் சதா பதற்றம், அதிர்ச்சி,

கோப தாபம். விரக்தி நிலை, வறட்டு வேதாந்தம். தனிமையைத் தேடுதல் என்ற சுபாவத்திற்கு அடிமையாகிவிட்டாள். ஆனால் புதன் சுக்கிரன் இணைந்த காட்சியும் இவர்களை குரு பார்த்த நிலையையும் கண்டேன். இது அற்புதமான ஆசீர்வாதம் இல்லையா? வரப் பிரசாதங்களைப் பயன்படுத்தி, தான் மகிழ்ந்து வாழ முயற்சி செய்தால் என்ன என்ற நிலையில் எண்கள் 5, 6 இவர்களின் துணையை நாடும்படி ஊக்கம் தந்தோம்.



இப்படியாக எண்கள் 1, 4 மற்றும் 1, 96,86,93,52,71, 38,82, 82,95,61,4,63,43,8 இப்படியாக பிறப்பு எண்ணும் கூட்டுத் தொகை எண்ணும் காம்பினேஷன்களைப் பெற்ற ஜாதகர்களுக்கெல்லாம் இந்த அடிப்படை எண் காம்பினேஷன் ஓரளவு. நபரின் குணாதிசயங் களையும் விருப்பு வெறுப்புகளையும் எதிர்பார்ப்பு களையும் பழக்க வழக்கங்களையும் எடுத்துக் காட்டும். பிறப்பின் ஜாதகம் இவைகளை பிரதி பலிக்கும் வகையில் கிரகாச்சாரங்களின் பிரதான பாத்திரங்களை காட்டுவ்தோடு ஜாதகரின் இயக்கத் தைப் பற்றி விரிவாக பேசும்.

ஆகவே நியூமராலஜிக்கும் சோதிடத்திற்கும் இடையே வெகு தூரமில்லை என்பதை பல ஜாதகங்களின் வாயிலாக ஆய்வு செய்யும் போதுதான் அனுபவம் அத்தனை சமாச்சாரங் களையும் நமக்கு கற்றுத்தர இயலும்.

ஆகவேதான் இவைகளுக்குள் "ஆஹா என்ன பொருத்தம்" என்றேன்.

◀ மிராண்டா



## முருகன் அருள்பெற...!

வள்ளி என்பது ஜீவாத்மாவைக் குறிப்பிடுகிறது. வள்ளி முருகனை அடைவதற்கு, அவளுடைய உற வினர்களே தடையாக இருக்கிறார்கள். இதன் பொருள், நமது தீவினைகள் நாம் இறைவனை அடைவதற்குத் தடையாக இருக்கின்றன என்பதாகும். "வள்ளியின் தோழி வள்ளியை முருகனிடம் சேர்க்கின்றாள்" என்று கந்தபுராணம் கூறுகிறது. இதன் பொருள், உயிரை நல்வினைகள் இறைவனிடம் சேர்க்கும் என்பதாகும். வள்ளி முருகன் திருமணம் என்பது ஜீவபிரம்ம ஐக்கியத்தை உணர்த்துகிறது. எனவே நாம் நல்வினைகளில் ஈடுபடுவது தான், முருகன் அருள் பெறுவதற்கு உரிய வழியாகும்.

# தியாகவீரன் சதமன்யு

ஒரு சமயம் ஒரு தேசத்தில் இரண்டு ஆண்டுகளாக மழையே பெய்யவில்லை. மழையே இல்லாமற்போனால் மக்கள் என்னதான் செய்ய முடியும்? பஞ்சத்தால் மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டார்கள். பயிர் பச்சை, புல்பூண்டுகள் கூட வாடிக் கருகின. மக்கள் குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாமல் துன்பப்பட்டார்கள். ஆடுமாடுகள் பல இறந்து போயின.

இந்த நிலையில், மக்களுக்கு நேர்ந்துள்ள துன்பத்தை எப்படித் துடைப்பது என்று அரசன் யோசனை செய்தான். பஞ்சம் நீங்க ஏதாவது பரிகாரம் காண வேண்டும் என்று அவன் மனதார விரும்பினான். ஆகவே அவன் சபையைக்கூட்டி, அதற்கு ராஜகுரு உட்பட அரண்மனை அதிகாரிகள், பண்டிதர்கள் ஆகிய அனைவரையும் வரவழைத்தான். அனைவரும் கூடி ஆலோசனை நடத்தினார்கள்.


பிரச்சினைக்கு ராஜகுரு ஒரு பரிகாரம் சொன்னார். ஆனால் அந்தப் பரிகாரம் அவ்வளவு சுலபத்தில் நிறைவேற்றக்கூடியதாக இல்லை. அவர் சொன்ன பரிகாரம் இதுதான் "மழைக்குத் தேவதையாக இருப்பவன் இந்திரன், இந்திரனை மகிழ்வித்துத் திருப்தி செய்தால் தான் மழை பெய்யும். இந்திரனின் மனம் மகிழ வேண்டுமானால் நரபலி தந்து யாகம் நடத்துவதைத் தவிர வேறு வழியே இல்லை."

வேறு வழி ஒன்றும் இல்லாததனால், அரசன் உட்பட அனைவரும் இந்த முடிவை ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. யாகத்துக்கு நாள் குறித்தார்கள். தேசம் முழுவதும் தண்டோரா போட்டு, யாகம் நடக்க இருக்கும் செய்தியை அறிவித்தார்கள். யாகம் நடக்க வேண்டிய நாள் வந்தது. அன்றைய தினம் தலைநகரத்தில் எள் விழ இடமின்றி மக்கள் ஏராளமாகக் குழுமினார்கள். யாகம் நல்ல விதமாக நடைபெற்று மழை பெய்து நாட்டிலுள்ள பஞ்சம் நீங்க வேண்டும் என்பதற்காகவும், நரபலிக்குத் தன்னைக் காணிக்கையாக யார் கொடுக்க முன் வரப்போகிறார் என்பதைத் தெரிந்துகொள்வதற்காகவும், யாகத்தைப் பார்ப்பதற்காகவும் தேசமே யாகசாலைக்கு அன்றைய தினம் திரண்டு வந்திருந்தது.

நரபலி செய்ய வேண்டிய நேரம் நெருங்கியது. ராஜகுரு எழுந்து நின்றார். பொதுமக்களின் பார்வை முழுவதும் அவர் மேலேயே பதிந்து லயித்திருந்தது. வைத்த கண் வாங்காமல் ராஜகுரு என்ன சொல்லப் போகிறார் என்பதைக் கேட்பதற்காக மக்கள் அவரையே கவனித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ராஜகுரு குழுமியிருந்த மக்களை நோக்கிச் சொன்னார். "பொதுமக்களே. நமது நாட்டின் நலனுக்காக இந்த யாகம் நடத்த ஏற்பாடாகி இருப்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். யாகம் முழுமையான அளவில் சிறப்பாக நடைபெற்றால் தான். நாட்டில் மழை பெய்து பஞ்சம் நீங்கும். இதில் நரபலி நடக்க வேண்டியதும் முக்கியமான ஓர் அம்சமாக இருக்கிறது. நரபலிக்குத் தம்மையே ஒப்படைத்து யாகத்தை நடத்திக் கொடுக்க முன்வருபவர் வரலாம்" என்று அறிவித்தார் ராஜகுரு.

ராஜகுரு பேசி முடித்ததும், கூட்டத்தில் ஒரே அமைதி நிலவியது. தன்னைப் பலியாகக் கொடுப்பதற்கு யார் முன்வரப் போகிறார் என்ற எண்ணம் அனைவரின் உள்ளத்தையும் சூழ்ந்திருந்தது. சிறிது தியாகம் என்றால் செய்யலாம். தன்னையே பலி கொடுப்பது என்றால்? பொதுமக்கள் அனைவரும் இருந்த இடத்தி லேயே நின்று கொண்டிருந்தார்களே





தவிர, "நான் என்னைப் பலி கொடுக்கத் தயார்" என்று சொல்லிக் கொண்டு யாரும் பலிமேடையில் வந்து நிற்க முன்வரவில்லை. அப்போது அங்கே நிலவிய மயான அமைதியைக் கிழித்துக் கொண்டு ஒரு பையனின் குரல் பலமாகக் கேட்டது. மக்களின் பார்வை குரல் வந்த திசையை நோக்கித் திரும்பியது.

"இதோ. நமது தாயகத்தின் நலனுக்காக என்னையே நான் பலி கொடுக்க முன் வருகிறேன். என்னைப் பலியிட்டு யாகத்தை நடத்திப் பூர்த்தி செய்யுங்கள். அதன் மூலம் மழைபெய்துநாட்டிற்கு நன்மை ஏற்படட்டும்." பன்னிரண்டு வயதே நிரம்பிய சிறுவன் சதமன்யு தான் அப்படிச் சொல்லிக் கொண்டு யாகசாலையை நோக்கி நடந்து வந்தான்.

சதமன்யுவை ஈன்றெடுத்த அன்னை அருகிலேயே இருந்தாள். "மகனே! என் கண்மணி சதமன்யு! உன்னை நான் பெற்றெடுத்த போது அடைந்த மகிழ்ச்சியை விடவும். இப்போது நான் அடையும் மகிழ்ச்சியே மிக மிகப் பெரிதடா!" என்று சொல்லி, அவள் மகனை வாழ்த்திப் பலிபீடத்தை நோக்கி வழியனுப்பி வைத்தாள். ஆம். அவள் அப்படித்தான் செய்ய முடியும். ஏனென்றால் அவள் உண்மையான இந்தியத்தாய். சதமன்யுவின் தந்தையும் அருகிலேயே நின்றிருந்தார். அவள்பெற்ற மகன் அவர் கண் முன்னாலேயே பலியாக போகிறான்! குழுமியிருந்த மக்களுக்கு ஒரே ஆச்சரியம். ஒரு சிறிய பையன் நாட்டின் நலனுக்காகத் தானாகவே மரணத்தை ஏற்றுக்கொள்ள முன்வருகிறான்! இப்படி ஒரு பையன்! இப்படி ஒரு தாய்! இப்படி ஒரு தந்தை!

சதமன்யு பலிமேடையில் ஏறி நின்றான். சில கணங்களில் அந்தப் பாலகனின் தலை தரையிலே உருண்டு விடும்! சதமன்யுவின் தலையைப் பலி வாங்கப் போன சமயத்தில் அங்கே ஓர் அற்புதம் நிகழ்ந்தது. வானம் இருண்டு திரள் திரளாக மேகம் சூழ்ந்தது. பளீர் பளீர் என்று மின்னல் வெட்டுகள் வெட்டின. மலையோடு மலை மோதுவதைப் போலப் பெரிய பெரிய இடி முழக்கங்கள் நாலுதிசைகளிலும் கேட்டன.

அப்போது அதே சமயத்தில் யாக மேடையிலும் ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது. சதமன்யுவின் மேல் பூமாரி பொழிந்து கொட்டியது. அதேசமயத்தில் மழைக்கு அதிதேவதையாகிய இந்திரனே அங்கே தோன்றினான். பொதுமக்கள் இந்திரனைச் சாஷ்டாங்கமாக வீழ்ந்து பணிந்தார்கள். இந்திரன் கூடியிருந்த மக்களைப் பார்த்துச் சொன்னார். "தேச மக்களின் நலனுக்காகத் தன்னையே பலி கொடுக்க முன்வந்தான் சதமன்யு. அவனது தியாக உள்ளம் என்னையே நெகிழச் செய்து விட்டது. சதமன்யுவைப் போன்ற தியாகச் செல்வங்களைப் பெற்றெடுத்த ஒரு நாடு. இனியும் பஞ்சத்தால் வாடுவது நியாயமில்லை. ஆதலால் இன்று நரபலி இல்லாமலே, நரபலியிடப்பட்டு யாகம் முழுமையான அளவில் சிறந்த முறையில் நடைபெற்றதாக ஏற்றுக் கொண்டேன். மழையையும் தேவையான அளவுக்குப் பெய்விக்கிறேன்."



**"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை."**

◀ சுவாமி கமலாத்மானந்தர்

## அருளாளர் பெயரால் அறம் செய்வது சிறப்பு!

அப்பூதியடிகள், திருநாவுக்கரசர் மீது எல்லையற்ற பக்தி கொண்டிருந்தார். அது காரணமாக அவர் தண்ணீர்ப் பந்தலுக்கு மட்டுமின்றி, தன் பிள்ளைகளுக்கும் திருநாவுக்கரசர் பெயரையே சூட்டினார். உலகில் தங்கள் பெயரால் அறச்செயல்களைச் செய்பவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் அருளாளர்கள் பெயரால் அறம் செய்வதே சிறப்புக்கு உரியது. இந்த உண்மைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக அப்பூதியடிகள் விளங்குகிறார்.

இன்றைய உலகின் துரதிர்ஷ்டம் என்னவென்றால் மனிதர்கள் சமயம் என்பதை வரையறுக்கப்பட்ட சில நம்பிக்கைகளில் இல்லை என்பதையும் இன்று வந்து நாளை போகிறவர் என்பதையும் புரிந்து கொண்டு விட்டால் நீங்கள் நம்பிக்கையை உணரத் தொடங்குவீர்கள். ஏனெனில் ஒரு பலருக்கு செய்வதற்கான திரவ முறைகள் ஏதுமில்லை. உங்களுக்கென்று ஒரு செயல் திட்டமும் கடவுளுக்கென வேறொரு செயல்திட்டமும் இருந்தால் இருவரும் எதிரெதிர் திசையில் போகிறீர்கள். ஆனால் எதிர் திசையில் போனாலும் கடவுளை சென்றடைய வேண்டுமென எதிர் பார்க்கும் போது தான் சிக்கல் தொடங்குகிறது.

ஏதோவொரு குழுவுடன் உங்களைப் பிணைத்து வைப்பதற்குப்



# நம்பிக்கை

## ஒரு பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தும்!

பெயர் பக்தியல்ல. பெரும்பாலான பிரார்த்தனைகள் "அது குடுப்பா! இது குடுப்பா! காப்பாத்துப்பா" என்பதாகத்தான் இருக்கின்றன. இவற்றின் அடிப்படை ஒன்று அச்சம் அல்லது பேராசை. இது அடிப்படையான பிழைப்பு உலகிலுள்ள அத்தனை உயிரினங்களும் தங்கள் அடிப்படைத் தேவைகளை தாங்களே பார்த்துக்கொள்கின்றன. ஆனால் இருப்பதிலேயே புத்திசாலியான தேவியாக கருதப்படும். மனிதன், தான் பிழைப்பு நடத்த சொர்க்கத்தின் உதவியை எதிர்பார்க்கிறான்.

நம்பிக்கையின் பாதையில் நடையிட வேண்டுமென்றால், சிறு குழந்தையின் வெகுளியான மனோபாவம் உங்களுக்கு இருக்க வேண்டும். "என்னைப் பின்பற்றுங்கள்" என ஏசுநாதர் சொன்னபோது அவரைப் பின் தொடர்ந்தவர்கள். அதிகாரத்தில் இருந்தவர்களோ மெத்தப் படித்தவர்களோ அல்ல. மீனவர்களும், விவசாயிகளும், எளிய மனிதர்களும் அவரைப் பின்தொடர்ந்தார்கள். மற்றவர்கள் அவரைப் புறக்கணித்தார்கள். புறக்கணிக்க முடியாதவர்கள் அவரை சிலுவையில் அறைந்தார்கள். நம்பிக்கை என்பது கள்ளங்கபடம் அற்றவர்களுக்கான பாதை உங்களுக்கு தர்க்கரீதியான மனமிருந்தால் எல்லாவற்றையும் கேள்வி கேட்டுக்கொண்டே இருந்தால் நம்பிக்கை பற்றிப் பேசுவது நேர விரயம்.

அப்படியானால் நம்பிக்கையின் பாதை இப்போது சரிப்படாதா என்று நீங்கள் கேட்கலாம்.



நான் அப்படி சொல்லவில்லை. உங்களிடம் இப்போது என்ன இருக்கிறதோ அதை வைத்துத் தொடங்க வேண்டுமென்று தான் சொல்கிறேன். மனிதனுக்கு இருப்பவை தலை, இதயம், குடல் மற்றும் கொஞ்சம் சக்திநிலை. உங்களுக்குத் தெரிந்த நான்கு உண்மைகள் இவை. மற்ற அம்சங்களை நீங்கள் நம்பலாம் அல்லது நம்பாமல் இருக்கலாம். அது உங்கள் விருப்பம். உங்கள் தன்மையின் உச்சத்தை அடைய நீங்கள் அறிவைப் பயன்படுத்தினால் அது ஞான யோகம் ஆகிறது. உங்கள் உணர்வுகளைப் பயன்படுத்தினால் அது பக்தியோகம் ஆகிறது. உங்கள் உடலையும் செயலையும் பயன் படுத்தினால் அது கர்மயோகம் ஆகிறது. உங்கள் உள்நிலை சக்தியைப் பயன்படுத்தினால் அது கிரியா யோகம் ஆகிறது. இவை நான்கு பாதைகள் இவையனைத்தையும் நீங்கள் ஒன்றாகத்தான் கையாள வேண்டும். இது கார் ஓட்டுவது போலத்தான் காரின் நான்கு சக்கரங்களும் ஒரே பாதையில் பயணம் போனால் தான் நீங்கள் நகர முடியும்.

நம் மரபில் வாழும் ஒரு குருவுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுவதே இந்தக் கலவையை உங்களுக்கு அவர் சரியாகக் கலந்து தருவார் என்பதால்தான் ஒருவருக்கு குறிப்பிட்ட மார்க்கம் பயன்படுகிறதென்றால் அது மற்றவருக்கு பயன ளிக்கும் என்று சொல்ல முடியாது. இந்த நான்கு அம்சங்களின் தனித்தன்மை வாய்ந்த கலவைதான் பயன்தரும். பொதுவாகவே பக்தியின் பாதையில் நடப்பவர்களை மனிதர்கள் பைத்தியங்களாகத் தான் பார்த்தார்கள். இன்று பல நூறாண்டு களுக்குப்பிறகு பரமஹம்சர்களையும் மீராக் களையும் வணங்குகிறார்கள் ஆனால் அவர்கள் வாழ்ந்தபோது அவர்களைப் பைத்தியங் களாக பார்த்தார்கள். உங்கள் பக்கத்து வீட்டுக் காரர் நள்ளிரவில் உங்கள் தோட்டத்தில் குதித்து மரங்களையும் செடிகளையும் கூட்டிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தால் அவரை ஞானோதயம் அடைந்தவராக கருதுவீர்களா? பைத்தியம் என்று பேசுவீர்களா? உங்கள் மனைவி கடவுளை மணந்து கொண்டதாகக் கூறினால் அவர் தெய்வீகத் தன்மை அடைந்ததாக நினைப்பீர்களா? மன நோய் என்று நினைப்பீர்களா!

தாங்கள் எதன் மேல் பக்தி செலுத்துகிறார்களோ அதைத் தவிர எதுவும் முக்கியமில்லை என எண்ணுவதுதான் பக்தர்களின் இயல்பு. சற்று அசையாத கவனக்குவிப்பை வழங்குவதுதான் நம்பிக்கை. இதுவே உச்சநிலையை அடைவ தற்கான அற்புதமான கருவி. ஆனால், அதை ஒரு உண்மை என்று மட்டும் கருதினால் அது உங்கள் அடிப்படையை மாற்றாது. உங்களை ஓர் அடிப்படைவாதியாகமாற்றும். நம்பிக்கையைக் கொண்டு பல அற்புத மான விடயங்களை செய்யலாம். ஆனால், துரதிருஷ்டவசமாக இந்த உலகில் எல்லாவற்றையும் ஏதேனும் ஒன்றின் பெயரில் செய்ய வேண்டி யிருக்கிறது. எனவே, எல்லாவற்றுக்கும் பெயர் சூட்டி அவரவரும் தங்கள் நம்பிக்கைகளுக்கு எதிராக மோதத் தொடங்கி விட்டார்கள். நம்பிக் கொண்டிருப்பதற்கும் நம்பிக்கையை வாழ்வாகக் கொள்வதற்கும் உள்ள வேற்றுமையை உணர வேண்டும். நம்பிக்கை எதிர்பார்ப்பை வளர்க்கிறது.

ஆனால், நம்பிக்கை உங்கள் இயல்பாக மாறும் போது ஒரே பாதையில் திடமாக செல்ல முடிகிறது. நம்புவது என்பது ஒரு செயலல்ல. நீங்கள் அந்தத் தன்மையாகவே மாறுவது. இது ஓர் உள்நிலை அனுபவம் இந்தப் பாதையில் செல்லும் போது, வளர்ச்சி என்பது அடிமேல் அடியெடுத்து வைக்க அவசியமின்றி ஒரு பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தும்.

சத்குரு ஜக்கி வாசுதேவ்

## பூரண ஞானம்!




"நிலையற்றபொருள்களின் தீவிர வைராக்கியம் (பற்றின்மை) கொள்வதுதான் முக்திக்கு வழி என்ற, சங்கர வேதாந்தம் கூறுகிறது. காமம், கோபம், பொறாமை, ஆணவம் ஆகிய இழிந்த இயல்புகளிலிருந்து நாம் மீட்சி பெற்றால்தான் பூரணஞானம் அல்லது பூரண விடுதலை நமக்குக் கிடைக்கும். இறைவன் மீது நாம் கொள்ளும் பக்தி இறைவன் மீது நாம் கொள்ளும் பற்று நம்மிடமிருந்து உலகப்பற்றை நீக்கும்.




# ஆங்கில எழுத்துக்களில் பிரமிடு சக்தி

உலகில் உள்ள ஏராளமான மொழிகளின் எழுத்து வடிவங்களை நாம் ஆராய்ந்தோமானால் அவற்றின் வடிவங்கள் பல்வேறு வகைகளில் அமைந்துள்ளன. சில எழுத்துக்கள் சித்திர வடிவங்களைக் கொண்டுள்ளன. சில மொழியில் உள்ள எழுத்துக்கள் உருண்டை வடிவம், சுழிப்புக்கள், மற்றும் குறுக்கு நெடுக்காக அமைந்துள்ளன.

உலகின் எந்த மொழியிலும் சக்தியை உருவாக்கக்கூடிய முக்கோண வடிவ எழுத்துக்கள் பெரும்பாலும் அமையவில்லை. ஆனால் இத்தகைய சிறப்பு ஆங்கில எழுத்துகளுக்கு மட்டுமே இருப்பது ஆச்சரியமூட்டுகிறது. ஆங்கில எழுத்துக்கள் பல முக்கோண வடிவத்தை உள்ளடக்கியிருக்கின்றன. தற்செயலாக வந்ததல்ல இந்த அமைப்புகள். ஆங்கில எழுத்தை வடிவமைத்தவர்கள், அந்த எழுத்து வடிவத்திற்கு பிரபஞ்ச சக்திகளும் கிடைக்கும்படியாக (முக்கோண பிரமிடு அமைப்பு) உருவாக்கியிருக்கிறார்கள். இது ஆங்கில மொழிக்கு மறைமுகமாக சக்தியையும், ஆளுமைத் தன்மையையும் (Domination) வழங்கிக் கொண்டேயிருக்கின்றன. ஆங்கில எழுத்துக்களில் எப்படி முக்கோண வடிவங்கள் உருவாகின்றன என்பதைப் பார்ப்போம்.




ஆங்கில மொழியில் முதல் எழுத்தான A என்பதே சரியான முக்கோண அமைப்பைக் கொண்டுள்ளது. அதுவும் ஆகாயத்தை நோக்கி கூம்பு பாகம் உள்ளது. எனவே ஆங்கில மொழியின் ஆரம்பமே சக்தியுடனும், வலிமையுடனும் ஆரம்பிக்கிறது. இம்மொழியின் வல்லமைக்குக் காரணமான மற்ற எழுத்துக்களையும் பார்ப்போம். K என்ற எழுத்தில் மூன்று முக்கோணங்கள் இருக்கின்றன. L இந்த எழுத்தில் ஒரு முக்கோணம். M இந்த எழுத்தில் மூன்று முக்கோணம். N இந்த எழுத்தில் இரண்டு முக்கோணம். R என்ற எழுத்தில் ஒரு முக்கோணம். V என்ற எழுத்தில் ஒன்று, Wவில் இரண்டு, X என்ற எழுத்தில் நான்கு, Y என்ற எழுத்தில் ஒன்று, Z என்ற எழுத்தில் இரண்டு என மொத்தம் 20 முக்கோண அமைப்புகள் உருவாகின்றன. கிட்டத்தட்ட சிறிய ஸ்ரீ சக்கர வடிவத்தை உருவாக்கத் தேவையான அளவு சக்திமிக்க முக்கோணங்களை ஆங்கில எழுத்துக்கள் உருவாக்குகின்றன. இதனால் ஏற்படும் விளைவுகள். பயன்கள் என்ன? என்று நீங்கள் சந்தேகப்படலாம். இதற்கு நான் விளக்கம் அளிக்கும் முன்பாக ஆங்கில மொழி உலகம் முழுவதும் ஏற்படுத்தும் தாக்கத்தை சிறிது யோசித்தாலே புரிந்து விடும்.

இன்று ஆங்கில மொழி உலக மக்கள் அனைவராலும், எல்லா நாடுகளிலும் பேசப்படுகிறது. கிட்டத்தட்ட எல்லா நாடுகளிலும் ஆட்சி மொழியாக ஆங்கிலம் திகழ்கிறது. எந்தவிதமான அறிவியல்

கண்டுபிடிப்பாக இருந்தாலும், எத்தகைய புதுமையான, புரட்சிகரமான கருத்துக்களாக இருந்தாலும் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும் என்றால் ஆங்கில மொழி வாயிலாக சொல்ல வேண்டியது அவசியமாகிறது. இதற்கெல்லாம் முக்கோண வடிவங்கள் ஏற்படுத்தும் சூட்சுமமான சக்திகள்தான் காரணம் ஆகும். இவை கண்ணுக்குத் தெரியாது. அலை வடிவில் முக்கோண வரி வடிவங்கள் கூட அண்டவெளியில் இருந்து காஸ்மிக் எனர்ஜியை (பஞ்சபூத சக்திகளை) இழுக்கின்றன. இக்காரணத்தால் தான் ஆங்கில மொழியில் எழுத்துக்களை முக்கோண வடிவில் உருவாக்கி இருக்கிறார்கள்.

நீங்கள் உங்களுடைய பெயரையும் கூட ஆங்கில மொழியில் எழுதும் போது கூடுமானவரை முக்கோண வடிவ எழுத்துக்களை கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளலாம். இதனால் உங்களுடைய பெயருக்கு விஞ்ஞானபூர்வமாக ஆற்றல் அதி கரிக்கும். ஆளுமைத்தன்மை



மேம்படும். உங்கள் பெயருக்கு நம்பகத்தன்மையும் வெற்றியும் உண்டாகும். நியூமராலஜி எனும் எண் கணிதத்தை இந்த விடயத்தோடு சேர்த்துக் குழப்ப வேண்டாம். இது முழுக்க வடிவியல் சார்ந்த சக்தி அலைகளுடன் தொடர்புடையது மட்டுமே. பிரமிடு வடிவ முக்கோணங்கள் எழுத்தில் ஆதிக்கம் செலுத்தினால் அதன் சக்தியை நீங்கள் நிஜ வாழ்க்கையில் கண்கூடாக உணர முடியும். பிரமிடு வடிவ ஆங்கில எழுத்துக்களின் தனிச்சிறப்புகளும். ஆற்றல்களும்:

**A: எதற்கும் தலைவணங்காத தன்மையை அளிக்கும் நிர்வாகத்திறன் மேம்படும். எனவே தொழில் மற்றும் வியாபார நிறுவனங்களில் உயர்பதவிகளில் இருப்போர் இந்த எழுத்தை பெயருடன் கண்டிப்பாக பயன்படுத்த வேண்டும்.**

**இதனால் ஆளுமைத்தன்மை மேம்படும்**

**K: உருவாக்கும் திறன் மேம்படும். (Creativity) கலைகளில் நாட்டமும். திறமையும் வளரும்.**

**M: இந்த எழுத்து பெயரில் இடம் பெற்றால் வசந்தமான, மிக மகிழ்ச்சிகரமான வாழ்க்கை உண்டாகும்.**

**N: இந்த எழுத்து பெயரில் முதல் எழுத்தாக வந்தால் வாழ்வில் பெரும் முன்னேற்றம் உண்டாகும்.**

**R: இந்த எழுத்து உருவாக்கும் திறனை மேம்படுத்துகிறது.**

**V: எந்த ஒரு காரியத்திலும் முடிவு செய்யக்கூடிய ஆற்றலைக் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். மொத்தத்தில் இந்த எழுத்து வெற்றிக்கு அடையாளமாகத் திகழ்கிறது.**

**W: இந்த எழுத்து உங்கள் பெயரில் அமைந்திருந்தால் கற்பிக்கும் திறன் அதிகமாகும். அடுத்தவருக்கு உபதேசம் செய்வதற்கான தகுதிகள் வந்து சேரும்.**

**X: உங்களிடம் உள்ள ஆழ்மன சக்தியை கட்டுப்படுத்தி, ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவீர்கள். உங்களை நீங்களே நன்றாக அறிந்து கொள்வீர்கள்.**

**Y: இந்த எழுத்து உங்கள் பெயரில் அமைந்திருந்தால் உங்கள் மீது நீங்கள் உயர்ந்த மதிப்பு வைத்திருப்பீர்கள்.**

**Z: இந்த எழுத்து முழுமையான மனநிறைவைத் தரும். இதனால் நீங்கள் மனஅமைதியும், ஆரோக்கியமும் பெற்றுத் திகழ்வீர்கள். மற்றவரை வசீகரிக்கும் திறன் உங்களிடம் மேம்படும்.**

வேல்முருகன்

## பல்லக்கு சுமந்த நாவுக்கரசர்!

சைவ நெறியும், வேதநெறியும் தழைப்பதற்காக அவதரித்தவர் திருஞானசம்பந்தர். வயதில் சிறியவராயினும் சிவத்தொண்டு புரிந்து உலகின் மாயை இருளை நீக்க வந்தவர் என்பதால், திருஞானசம்பந்தரின் பல்லக்கைப் பணிவோடு திருநாவுக்கரசர் சுமந்தார்.



# சாஸ்திரவிருத்த செயல்கள் கூடாது!

இப்போது அனைவரிடமும் எதிர்பார்ப்புகள் அதிகரித்துவிட்டன. ஆசைகள் இருக்கலாம். ஆனால், பேராசை இருக்கக் கூடாது. திருமணம் என்பது நான்கு தர்மங்களில் மிகவும் முக்கிய மானதாகக் கருதப்பட்டது. ஆனால் தற்காலத்தில் அதைப் பற்றிய சிந்தனையே மாறி வியாபாரமாக ஆக்கப்பட்டுவிட்டது. இதன் விளைவாகவே கலாசார சீரழிவு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. பெண்கள் பராசக்தியின் அம்சம் அவளே மிகப் பெரிய பொக்கிஷம்.

“காலத்தே பயிர் செய்” என்ற வழக்குக்கு ஏற்ப, அன்று அனைத்துமே காலங்களின்படி நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆனால் இன்று நாம், காலம் நம் கையில் என்று கூறிக்கொண்டு பல நல்ல காரியங்களை, பெற்றோர்களுக்கு மதிப்புக் கொடுக்காமல் தள்ளிவைத்து வருகிறோம். இதனால் பாதிக்கப்படுவது சமுதாயமே.

நாம் நமது கலாசாரத்தைப் பற்றிப் பெருமை கொள்ளல் வேண்டும். எவ்வளவு பழைமையானது. பெருமையானது, உயர்ந்தது. பல நல்லொழுக்கங்களைத் தன்னுள் அடக்கியது என்பதை உணர வேண்டும். இவையெல்லாம் நடந்தால், சமுதாயத்தில் மிகப் பெரிய மாறுதல் உண்டாகி, ஓர் இன்பமான வாழ்வுக்கு ஆதாரமாக விளங்குவோம்.

வரதட்சணை என்ற பேயை எப்படியாவது ஒழித்துவிட்டோமானால், வாழ்க்கையில் இன்பம் என்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை. பல வீடுகளில் பெண்கள் தங்களின் திருமணத்துக்காக, பொன் நகைகள் சேமிப்பதற்காகக் கடுமையாக உழைத்து, பிறகு தாமதமாகத் திருமணமாகி பல இன்னல்களுக்கு ஆளாகி வருகிறார்கள்.

ஆசைகளைக் குறைத்துக் கொண்டு, வரதட்சணை போன்ற சாஸ்திர விருத்த செயல்களுக்கு இடம் கொடுக்காமல் வீட்டுக்கு விளக்கு ஏற்ற ஒரு நல்ல பெண் வேண்டுமென்று நாம் முயன்றால், கண்டிப்பாக இந்தக் காலப் பையன்களுக்கு நல்ல பெண்கள் அமைந்து நன்றாக வாழ்வார்கள்.

**சுவாமி கமலாத்மானந்தர்**

### ஆத்மாவும் பரமாத்மாவும்!



“எல்லாப் பிறவிகளுக்கும் ஆத்மா உண்டு. இந்த ஆத்மாக்களின் ஆத்மாவான இறைவனுக்குப் பரமாத்மா என்று பெயர். ஆத்மாவுக்கும் (ஜீவாத்மாவுக்கும்) பரமாத்மாவுக்கும் உள்ள (ஆண்டான்அடிமை போன்ற) உறவை சேஷத்துவம் என்கிறோம். பரமாத்மா முழுமையானது. அதில் ஓர் அம்சம் ஆத்மா. (பூரணமான பரமாத்மாவின் ஓர் அம்சம் தான் ஜீவன்) இதைத்தான் சேஷத்துவம் என்ற சொல் குறிப்பிடுகிறது.



மன்மத ஆண்டு மாசி மாதம்
13.02.2016 முதல் 13.03.2016 வரை




எதையும் ஆணித்தரமாக வலி யுறுத்தி சொல்லும் விருச்சிக ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு தொழில் ஸ்தானத்தில் குரு ராகு அமர்வது குரு சண்டாள யோகம் உண்டாகும். திடீர் அதிர்ஷ்டம் எதிர்பாராத தொழில் வாய்ப்பு பொருளாதார மேன்மைகள் அமையும். வங்கிகள் மூலம் கடன் பெற்று பொருளாதாரத்தை பெருக்கி கொள்வீர்கள்.

**பணியாளர்களுக்கு**

எண்ணங்களையும் செயல்களையும் ஒருங்கி ணைத்து செயல்படும் நீங்கள் பணியில் சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். தொழிற்சங்க பொறுப்புகளின் திறம்பட செயல்படுவீர்கள். அனைவரையும் கண்டிப்புடன் ஒற்றுமை படுத்துவதில் மிகவும் கைதேர்ந்தவராக இருப் பீர்கள். பொருளாதார ஏற்றம் பெறுவீர்கள்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொது விடயத்தில் அனைவ ரையும் சமாதானம் செய்து பொது கருத்துகளை உருவாக்கு வீர்கள். அரசாங்க உதவிகளை பெற்று தருவீர்கள். மருத்துவ உதவிகளை பெற்று தருவதில் மிகவும் கவனமாக இருப்பீர்கள். பொருளாதார நன்மைகளை அடைவீர்கள்.

**வியாபாரிகளுக்கு**

தொழிலில் மிகவும் கவன மாக செயற் படுவீர்கள். தொழி லாளர்கள் ஒத்துழைப்புடன் வியா பாரத்தை சிறப்பாக செயல் படுத்துவீர்கள். விடுதிகள், சுற்றுலா அலுவலகங்களில் சிறப்பான முன்னேற்றம் உண்டாகும். பொருளாதாரத்தில் மேன்மையை பெறுவீர்கள்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினர் சுறுசுறுப்பாக செயல்படு வீர்கள். எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் பிரம் மாண்டமான வரவேற்பை பெற வேண்டுமென ஆசைப்படுவீர்கள். கலைஞர்களின் வளர்ச்சி நன்மையை தரும். பொருளாதாரத்தில் வெற்றி பெறுவீர்கள்.

**பெண்களுக்கு**

பெண்களின் சிந்தனைகளில் சில மாற்றங்களை ஏற்படுத்தி வருங்காலத்தில் சிறந்து விளங்கும் வகையில் பெண்களின் முன்னேற்றம் அமையும். பொருளாதாரத்தில் முன் னேற்றம் அமையும்.

**மாணவர்களுக்கு**

காவல், ராணுவம், விமானப்படை சார்ந்த கல்வி தேர்வுகளில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். ஆசிரி யர்களின் உதவியும் போதனையும் வளர்ச்சியை தரும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

17.02.2016 புதன் மாலை 05.23 முதல் 19.02.2016 வெள்ளி இரவு 10.42 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**
**விசாகம் 4ஆம் பாதம்**

நினைத்ததை நடத்திக் கொள்வீர்கள். எதையும் முன்கூட்டியே யோசித்து செயல்படுவீர்கள். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும்.

**அனுசம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

வருவதை எண்ணி கவலைப்படாமல் இன்று என்ன நடக்க வேண்டுமோ அதில் கவனமாக இருந்து செயல்படுவீர்கள். குதிரை வேகமாக இயங்கி உங்களின் விடயங்களை சிறப்பாக நடத்தி கொள்வீர்கள்.

**கேட்டை 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

புத்திசாலித்தனமான உங்களின் செயல்களில் சற்று இடையூறுகள் வந்தாலும் தனி திறமையுடன் செயல்பட்டு நன்மை பெறுவீர்கள். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும்.


**அதிர்ஷ்ட நிறங்கள்:** ஆரஞ்சு, மஞ்சள், வெண்மை

**அதிர்ஷ்ட திசைகள்:** வடக்கு, தென்கிழக்கு, கிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்:** வெள்ளி, ஞாயிறு, வியாழன்

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

ஞாயிற்றுகிழமை மாலை ராகு காலத்தில் சுப்ரமணியரையும், நவக்கிரகத்தையும் வணங்கி நவக்கிரகத்திற்கு நல்லெண்ணெய் தீபமிட்டுவர சகல காரியமும் வெற்றியையும் அனுகூலத்தையும் தரும்.



**அம்மையப்பன் வடிவில் அருள்!**

பெரும்பாலும் பக்தர்களுக்கு அருள் புரியும் போதெல்லாம், இறைவன் அம்மையப்பராகவே வருகிறான். அம்மையப்பர் உருவத்தில் அருள் புரியும் பாங்கு அம்மைக்கே உரியது.

# மனிதர்கள் காண்பது மாயத் தோற்றமே!

நடுநிலை தவறாத தர்மத்தை நோக்கும் போது சாதாரண மனிதர்களுக்கும் மகான்களுக்கும் வேறுபாடில்லை. சூத்திரம் சொல்கிறது. "நடுநிலை தவறாத தர்மம் (impartial Dharma) என்பது சராசரிகளால் பிரவேசிக்க முடியாதது, மகான்களால் செயல்படுத்த முடியாதது. நடுநிலை தவறாமல் இருப்பது என்பது நிர்வாணத்தையும் துன்பத்தையும் வேறுபடுத்திப் பார்க்காமல் இருப்பது. காரணம், இரண்டுமே வெறுமைத் தன்மை கொண்டவைதாம். துன்பத்துக்கெல்லாம் முடிவு கட்டி விடலாம் என்று நிர்வாணத்தில் பிரவேசிக்கிற அர்ஹாத்துகள் பொறியில் அகப்பட்டவர்களாவர். துன்பம் அடிப்படையில் வெறுமையானது என்பதை போதி சத்துவர்கள் அறிவார்கள். வெறுமையில் (emptiness) இருப்பதன் மூலம் அவர்கள் நிர்வாணத்தில் இருந்து கொள்கிறார்கள்.

புத்த சமயத்தைப் பொறுத்தவரை, நிர்வாணம் என்பது ஒருவர் தன் மருட்சியையும், வெறி உணர்ச்சியையும் (delusions and passions) முழுமையாக விட்டொழித்து, பிறப்பு இறப்பு என்கிற கர்மாக்களில் இருந்து விடுபட்டு அடைகிற வீடுபேறு. பிறப்புக்கும் இறப்புக்கும் அப்பாற்பட்ட நிர்வாணநிலை, பாழ் வெறுமை நிலை (Vacuity) அல்லது வெறும் பாழ்நிலை (voidness) ஆகும். கருத்துக்கும் மனித இடர்பாட்டுக்கும் அப்பாற்பட்டது நிர்வாண நிலை.

இயக்கமற்று இருக்கும் மனம் நிர்வாணத்தில் பிரவேசிக்கிறது. நிர்வாணம் என்பது வெற்றான மனம். உருவெளித் தோற்றங்கள். தவறான நம்பிக்கைகள் (delusions) இல்லாத நிலையில் புத்தர்கள் நிர்வாணத்தை அடைகிறார்கள். துன்புறும் நிலைகள் இல்லாத இடத்தில் போதி சத்துவர்கள் ஞானத்தில் பிரவேசிக்கிறார்கள்.

பேராசை, கோபம், தவறான நம்பிக்கை இல்லாத இடமே ஆன்மா சார்ந்த வளர்ச்சிக்குத் தகுதியானது. ஒரு சிந்தனை தொடங்கும் போது பேராசை, கோபம், மாயை ஆகியவற்றில் நீங்கள் பிரவேசிக்கிறார்கள். ஒரு சிந்தனை முடிவுக்கு வரும்போது, அந்த மூன்று பகுதிகளையும் விட்டு நீங்கள் விலகி விடுவீர்கள். தொடக்கமும் முடிவும் உளதாய் இருத்தலும், இலதாய் இருந்தாலும் மனத்தைப் பொறுத்தது. இது எல்லாவற்றுக்கும் பொருந்தும்.மனிதர்கள் தாம் மனத்தைத் தோற்றுவித்துக் கொண்டு, அதை உறுதிப்படுத்தவும் முயல்கிறார்கள். அர்ஹாத்துகள் மனத்தை மறுக்கிறார்கள். புத்தர்களோ அதைத் தோற்றுவிப்பதுமில்லை, மறுப்பதுமில்லை.

நீங்கள் மனத்தைக் கொண்டு மெய்ப்பொருளை



அறிய முற்பட்டால், உங்களால் மனத்தையும் அறிய முடியாது. மெய்ப்பொருளையும் விளங்கிக் கொள்ள முடியாது. உங்கள் மனத்தைப் பயன் படுத்தாமல் மெய்ப்பொருளை ஆராய்ந்தால் இரண்டையும் அறிந்து கொண்டு விடுவீர்கள்.



உண்மையான பார்க்கும் திறன் கொண்டவர்கள் மனத்தின் வெறுமையை அறிவார்கள். (உண்மையான பார்க்கும் திறனில் தொடங்குகிறது புத்தரின் அஷ்டாங்க மார்க்கம். அது அறியாமமையை அகற்றுவதில் தொடங்கி கர்மாவின் பன்னிரண்டு கண்ணிகளையும் அறுத்தெறியத் திட்டமிட்டது. மூடநம்பிக்கை, செயலுக்குத் தூண்டும் வேகம். பிரக்ஞை, நாமம், வடிவம், மனவெழுச்சி, விருப்பம், பற்றுதல், இருத்தல், பிறப்பு, முதுமை, மரணம் ஆகியனவே பன்னிரண்டு கண்ணிகள்)

உண்மையான பார்க்கும் திறன் கொண்டவர்கள் அறியும் திறனையும், அறியாதிருக்கும் நிலையையும் கடக்கிறார்கள். மனிதர்கள் காண்பது மாயத்தோற்றங்கள் (delusions) பார்ப்பதில் இருந்து ஒதுங்கியதே உண்மையான பார்க்கும் திறன். மனமும் உலகமும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவை. அவை தொடர்பு கொள்கிற இடத்தில் பார்க்கும் திறன் உண்டாகிறது. உங்கள் மனம் உள்ளாகக் கிளர்ந்தெழாவிடில், வெளியே உலகம் உளதாயிருப்பதில்லை. உலகமும் மனமும் தெளிவாகப் பார்க்கப் படுமெனில் அதுவே உண்மையான பார்க்கும் திறன். அத்தகைய புரிதலே உண்மையான புரிதல் ஆகும்.

உண்மையான பார்க்கும் திறன் என்பது வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதல்ல. அது காணாததையும் கண்டறிந்து கொள்வது. மனம் இல்லாவிடில் புரிதலும் புரிதலின்மையும் ஒன்று தான். மனம் இருக்கும் பட்சத்தில் புரிதலும் புரிதலின்மையும் தவறானவைதாம். மனித மனம் வெளிப்பட்டு இருக்கிறபோது. புத்தத்தன்மை மறைந்து விடுகிறது. மனித மனம் மறைகிற போது புத்தத்தன்மை வெளிப்படுகிறது.

"எதுவும் எதையும் சார்ந்திருக்கவில்லை என்பதை அறிந்தவரே மார்க்கத்தைக் கண்டடைகிறார்."

சரியென்பதும், தவறென்பதும் புரிதலைப் பொறுத்தது. உண்மையில் இரண்டிலும் இருப்பது வெறுமையே. சூத்திரம் சொல்கிறது, "தனக்கென்று ஒரு தன்மையை எதுவும் கொண்டிருப்பதில்லை" என்று, ஆறு உணர்வுகளும், ஐந்து சாயைகளும். (மனத்தை மறைக்கும் நிழல்), நீங்கள் தவறான நம்பிக்கை கொண்ட நிலையில் துன்பத்தையும், இறக்கும் தன்மையையும் உருவாக்கும். நீங்கள் விழிப்புடன் இருந்தால் அதே ஆறு உணர்வுகளும், ஐந்து சாயைகளும் உருவாக்குவது நிர்வாணமும் அழிவற்ற தன்மையுமாக இருக்கும்.

## விஷ்ணு தத்துவத்தில் ஆழ்ந்த ஆழ்வார்கள்!



விஷ்ணு பக்தியில் விஷ்ணு தத்துவ ஞானத்தில் ஆழ்ந்தவர் என்ற பொருளில் "ஆழ்வார்" என்ற சொல், வைணவமரபில் வழங்கி வருகிறது. பன்னிரு ஆழ்வார்களைத் தவிரவும் ராமாயணத்தில் இடம் பெற்றிருக்கும் பரதன், சத்ருக்னன், விபீஷணன் ஆகியவர்களையும் பரதாழ்வார், சத்ருக்னாழ்வார், விபீஷணாழ்வார் என்று குறிப்பிடுவது வைணவ மரபு. இவர்களைத் தவிர கருடனையும் பிரகலாதனையும் கருடாழ்வார், பிரலாதாழ்வார் என்பர்.

மார்க்கத்தைத் தேடுகிற ஒருவர் தனக்கும் அப்பால் எதையும் காண்பதில்லை. அவர் மனமே மார்க்கம் என்று எண்ணிக் கொள்கிறார். ஆனால், அவர் மனத்தை முயன்று அடைகிறபோது காண்பது வெறுமை (nothing) யைத்தான். மனத்தைக் கொண்டு வழியைக் கண்டுபிடிக்கலாம் என்று நீங்கள் ஏமாந்து போவீர்கள். உங்கள் சிந்தனைக்கேற்ப செயல்படுங்கள்.

• அழகர் நம்பி

**மன்மத ஆண்டு மாசி மாதம்**
**13.02.2016 முதல் 13.03.2016 வரை**




என்ன செய்ய வேண்டுமென்று முடிவு எடுத்த பின்பு அதிலிருந்து பின் வாங்காத தனுசு ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு குரு பார்வையும், லாபஸ் தானத்தில் செவ்வாயும் அமர்ந்து தொழிலும் சொந்த பணிகளிலும் சிறப்பாக வளர்ச்சியையும், பொருளாதார நன்மைகளையும் தருகிறார்கள்.

### பணியாளர்களுக்கு

விரிவான தொழில் கூடங்களில் பணிபுரியும் போது இதுவரை வசதி குறைவுகளை அடைந்த நீங்கள் இனி மேன்மேலும் நல்ல பலனை பெறுவீர்கள். திருப்பத்தை எதிர்கொள்ள வேண்டி வரும். பொருளாதாரத்தில் தேவைகளை நிறைவேற்றி கொள்வீர்கள்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது நலனில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை பெற்றுத் தரும். சமூக சேவகராக செயல்பட ஆசைபடுவீர்கள். அரசாங்க சலுகைகளை மக்களுக்கு பெற்று தருவதில் அக்கறை கொள்வீர்கள். விவசாய நிலங்களை சீர்திருத்தம் செய்வீர்கள். பொருளாதாரத்தில் வளர்ச்சியை பெறுவீர்கள்.

### வியாபாரிகளுக்கு

செய்யும் தொழிலில் அதிக கவனம் செலுத்தி ஆதாயம் பெறுவீர்கள். அச்சகம், தொலைபேசி, திருமண அட்டைகள் விற்பனையாளர்களுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும். மருந்துகடை வைத்திருப்பவர்களுக்கு திடீர் வருமானம் பெருகும். வங்கி கடன் தடையின்றி கிடைக்கும்.

### கலைஞர்களுக்கு

கலைஞர்களின் கவனம் எதிரில் வரும் சோதனைகளையும் தாங்கி கொள்வீர்கள். கலைஞர்களின் வாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கங்கள் முயற்சியால் நிறைவேறும். விரைவில் புதிய வாய்ப்புகள் அமையும் பொருளாதார நிலை வளர்ச்சியை தரும்.

### பெண்களுக்கு

தங்களின் திறமைகளால் முன்னேற்றம் பெறுவீர்கள். சில நேரம் உங்களின் பிடிவாத குணத்தால் கணவரிடம் கருத்து வேறுபாடுகள் வரலாம். ஆடம்பர பொருட்கள் வாங்குவதில் புதிய கடன் படும் நிலை உண்டாகும்.

### மாணவர்களுக்கு

கல்வியில் அதிக கவனம் செலுத்த வேண்டி வரும். கணக்கு பாடத்தில் அதிக மார்க்குகள் வாங்குவீர்கள். திறமைகளுக்கு தகுந்த வளர்ச்சியை பெறுவீர்கள்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

19.02.2016 வெள்ளி இரவு 10.43 முதல் 22.02.2016 திங்கள் அதிகாலை 06.22 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

**மூலம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

வருங்கால வாழ்க்கை அமைத்து கொள்ள வேண்டிய காரியங்களை செய்து வருவீர்கள். எதிர்காலத்தில் உங்களை மதிக்கும் வகையில் பலருக்கு உதவிகளை செய்து வருவீர்கள்.

**பூராடம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

கணவன் மனைவி உறவுகள் நன்றாக இருக்கும். உங்களுக்கு எதிர்பாராத திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் அமையும் வேலை வாய்ப்புகளுக்கு விரைவில் நல்ல பலன் கிடைக்கும்.

**உத்திராடம் 1ஆம் பாதம்**

உறுதியான செயல்பாடுகளால் நீங்கள் எடுத்து வரும் முயற்சிகள் நல்ல பலனை தரும். கருத்துகளை பரிமாறிக் கொள்வதில் அனைவரின் மதிப்பையும் பெறுவீர்கள்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** மஞ்சள், பச்சை, வெண்மை

**அதிர்ஷ்ட திசைகள் :** கிழக்கு, வடமேற்கு, மேற்கு

**அதிர்ஷ்ட கிழமைகள் :** வியாழன், புதன், திங்கள்

### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

வெள்ளிக்கிழமை ராகு காலத்தில் துர்க்கை அம்மனுக்கு தேங்காயில் நெய் விட்டு மூன்று விளக்கு போட்டு வழிபாடு செய்து வர எல்லாம் வெற்றி தரும்.



**திருவிளையாடல்!**

**சாதாரண மனிதனுக்கு அப்பாற்பட்ட வியக்கத்தக்க செயல்களை, இறைவன் விளையாட்டாகவே நிகழ்த்த வல்லவன். அதனால் அவனது அருட் செயல்களைத் "திருவிளையாடல்" என்று இறையடியார்கள் குறிப்பிடுவது மரபு.**



# ஸ்ரீ ஓம்காரலிங்கேஸ்வரர் 108 போற்றிகள்

ஓம் லிங்கமே போற்றி
ஓம் அங்க லிங்கமே போற்றி
ஓம் ஆபய லிங்கமே போற்றி
ஓம் அம்ருத லிங்கமே போற்றி
ஓம் அபிஷேக லிங்கமே போற்றி
ஓம் அனாதி லிங்கமே போற்றி
ஓம் அகண்ட லிங்கமே போற்றி
ஓம் அக்ஷர லிங்கமே போற்றி
ஓம் ஆதி லிங்கமே போற்றி
ஓம் ஆதார லிங்கமே போற்றி
ஓம் ஆத்ம லிங்கமே போற்றி
ஓம் ஆகாச லிங்கமே போற்றி
ஓம் ஆலாஸ்ய லிங்கமே போற்றி
ஓம் ஆத்யந்த லிங்கமே போற்றி
ஓம் ஆபத்பாண்டவ லிங்கமே போற்றி
ஓம் ஆரண்ய லிங்கமே போற்றி
ஓம் ஈசுவர லிங்கமே போற்றி
ஓம் உக்ர லிங்கமே போற்றி
ஓம் ஊர்த்துவ லிங்கமே போற்றி
ஓம் ஏகாந்த லிங்கமே போற்றி
ஓம் ஓம்கார லிங்கமே போற்றி
ஓம் கனக லிங்கமே போற்றி
ஓம் காருண்ய லிங்கமே போற்றி
ஓம் காசி லிங்கமே போற்றி
ஓம் காஞ்சி லிங்கமே போற்றி
ஓம் காளத்தி லிங்கமே போற்றி
ஓம் கிரி லிங்கமே போற்றி
ஓம் குரு லிங்கமே போற்றி
ஓம் கேதார லிங்கமே போற்றி
ஓம் கைலாச லிங்கமே போற்றி
ஓம் கோடி லிங்கமே போற்றி
ஓம் சக்தி லிங்கமே போற்றி
ஓம் சங்கர லிங்கமே போற்றி
ஓம் சதாசிவ லிங்கமே போற்றி
ஓம் சச்சிதானந்த லிங்கமே போற்றி
ஓம் சகஸ்ர லிங்கமே போற்றி
ஓம் சமஹார லிங்கமே போற்றி
ஓம் சாக்ஷி லிங்கமே போற்றி
ஓம் சாளக்கிராம லிங்கமே போற்றி
ஓம் சாந்த லிங்கமே போற்றி
ஓம் சிவ லிங்கமே போற்றி
ஓம் சித்த லிங்கமே போற்றி
ஓம் சிதம்பர லிங்கமே போற்றி
ஓம் சீதள லிங்கமே போற்றி
ஓம் சுத்த லிங்கமே போற்றி
ஓம் சுயம்பு லிங்கமே போற்றி
ஓம் சுவர்ண லிங்கமே போற்றி
ஓம் சுந்தர லிங்கமே போற்றி

ஓம் ஸ்தூல லிங்கமே போற்றி
ஓம் சூக்ஷ்ம லிங்கமே போற்றி
ஓம் ஸ்படிக லிங்கமே போற்றி
ஓம் ஸ்திர லிங்கமே போற்றி
ஓம் சைதன்ய லிங்கமே போற்றி
ஓம் ஜய லிங்கமே போற்றி
ஓம் ஜம்பு லிங்கமே போற்றி
ஓம் ஜீவ லிங்கமே போற்றி
ஓம் ஜோதி லிங்கமே போற்றி
ஓம் ஞான லிங்கமே போற்றி
ஓம் தர்ம லிங்கமே போற்றி
ஓம் தாணு லிங்கமே போற்றி
ஓம் தேவ லிங்கமே போற்றி
ஓம் நடன லிங்கமே போற்றி
ஓம் நாக லிங்கமே போற்றி
ஓம் நித்ய லிங்கமே போற்றி
ஓம் நிர்மல லிங்கமே போற்றி
ஓம் பர லிங்கமே போற்றி
ஓம் பஞ்ச லிங்கமே போற்றி
ஓம் பஞ்சாக்ஷர லிங்கமே போற்றி
ஓம் பத்ரி லிங்கமே போற்றி
ஓம் பக்த லிங்கமே போற்றி
ஓம் பாபநாச லிங்கமே போற்றி
ஓம் பிரதோஷ லிங்கமே போற்றி
ஓம் பிராண லிங்கமே போற்றி
ஓம் பீஜ லிங்கமே போற்றி
ஓம் பிரம்ம லிங்கமே போற்றி
ஓம் பிரம்மாண்ட லிங்கமே போற்றி
ஓம் பிரகாச லிங்கமே போற்றி
ஓம் புவன லிங்கமே போற்றி

ஓம் பூத லிங்கமே போற்றி
ஓம் பூர்ண லிங்கமே போற்றி
ஓம் பூஜ்ய லிங்கமே போற்றி
ஓம் மரகத லிங்கமே போற்றி
ஓம் மஹா லிங்கமே போற்றி
ஓம் மஹேச்வர லிங்கமே போற்றி
ஓம் மார்க்கபந்து லிங்கமே போற்றி
ஓம் மார்க்கண்டேய லிங்கமே போற்றி
ஓம் மிருத்யுஞ்சய லிங்கமே போற்றி
ஓம் முக்தி லிங்கமே போற்றி
ஓம் மூல லிங்கமே போற்றி
ஓம் மூர்த்தி லிங்கமே போற்றி
ஓம் மேரு லிங்கமே போற்றி
ஓம் மோன லிங்கமே போற்றி
ஓம் மோக்ஷ லிங்கமே போற்றி
ஓம் யக்ஞ லிங்கமே போற்றி
ஓம் யோக லிங்கமே போற்றி
ஓம் ராம லிங்கமே போற்றி
ஓம் ராஜ லிங்கமே போற்றி
ஓம் ருத்ர லிங்கமே போற்றி
ஓம் வாயு லிங்கமே போற்றி
ஓம் விஸ்வ லிங்கமே போற்றி
ஓம் விசித்திர லிங்கமே போற்றி
ஓம் வீர்ய லிங்கமே போற்றி
ஓம் வேத லிங்கமே போற்றி
ஓம் வைத்ய லிங்கமே போற்றி
ஓம் ஹ்ருதய லிங்கமே போற்றி
ஓம் லிங்கோத்பவனே போற்றி

# தியானத்தின் சக்தி

தியானத்தின் சக்தி, என்பது நிகரற்றது. இதற்கு இணையாக மனிதனுக்கு உதவும் சக்தி வேறு ஒன்றும் இல்லை. தியான உலகத்தில், உலவத் தெரிந்தவனுக்கு, சக்திக் குறைச்சல் இல்லை. இது ஒரு சக்தி கொடுக்கும் வழி, பாதை, பயணம்.


**இந்த பாதை என்பது, ஒரு ஒடுக்கப்பட்டிருக்கும்...**

பாதை, அதாவது மலர்ந்த பூ ஒன்று, மூடிக்கொண்டு இருக்கும், நிலையில் உள்ள ஒன்று.

**மரத்தில் பூ மலர்கிறது:**

அதில் இருக்கும் வாசனை, உலகில், மலரில் இருந்து விரிந்து பரவுகிறது. அதாவது, மலரில் இருக்கும், ஒரு வகை சக்தி, மலரின் வாசனையில், மலரைவிட்டு, வெளியேறிக் கொண்டே உள்ளது.

**காலையில் இருந்து, மாலை வரைக்கும் இப்படி...**



பூவில் இருந்து வாசனை வெளியேறியதும், இனி பூவுக்குள் இருந்து, வெளியேற ஒன்றும் இல்லை. எனவே, சக்திகளை வெளியேற்றிய பூ வாடிப் போய் உதிர்ந்து விடுகின்றது.

**தொடர்ந்து, தன் சக்திகளை, வெளியேற்றியதால்...**

அந்தப்பூவாடிப் போய், தன் மரணத்தை சந்திக்கிறது. எனவே, மலரின் மரணத்திற்கு, அது தன்னிடத்தில் இருந்து, தனது சக்திகளை வெளியேற்றிக் கொண்டே இருந்ததால், அந்த தன் சக்திகளை இழந்த பூ, சக்தி இல்லாத பூவாக, முழுதாக மாறிய போது, அதில் மரணம் சென்று, அடைந்து கொண்டது.

**இதுதான், சக்திகளை சதா செலவழித்துக் கொண்டு....**

இருக்கும் மனிதனுக்கும், உள்ள ஆபத்து, மனிதனின் இயல்பான பிறப்பு வயது 100. இதில் வாதத்தின் ஆட்சியில் 30 வருடங்கள், இதில், பித்தத்தின் ஆட்சியில் அடுத்த 30 வருடங்கள். இன்னும், சிலேத்துமம் அதாவது, கபத்தின் ஆட்சியில், 40 வருடங்கள்.

**இந்த வயதுக்குள், மனிதன் இறக்கும் இயல்பான...**

இறப்பு என்பது, மனித தவறுகளில் நடக்கும், உடலின் சக்தி குறைதல், மனத்தின் சக்தி குறைதல் என்ற, அளவில், மனிதனின் வாழ்க்கை சுருங்கி, மனிதனின் வாழ்வுக்காலம், 100க்குள்ளே முடிந்து போகின்றது.

**எப்படி சக்திகளை, கால நேரம் இல்லாமல்...**

செலவழித்துக் கொண்டே இருந்த பூ, தனது சக்திகளை, ஒரு கால கட்டத்துக்குள் இழந்து, அது வாடி உதிர்ந்து போனதோ, அதே போன்று, ஓய்வு ஒழிச்சல் இன்றி, தனது அதிகமான பேச்சில், அதிகமான செக்ஸில், அதிகமான உழைப்பில், அதிகமான மனக் கவலை, பிரச்சினைகளில் விழுந்து விழுந்து, மனிதன் தனது ஆதார உடல் சக்தியை, வெகு வேகமாக இழந்து கொண்டு வருகின்றான்!

**இதனால், சக்தி குன்றிய உடம்பில், பல நோய்கள்...**

வந்து, மனிதனின் உடலில் இருக்கும், கொஞ்ச நஞ்ச சக்தியும், உடல் உபாதைகளில் வெளியேறும் போது, ஒரு காலகட்டத்தில், மனித உடல் துவண்டு, நடக்கவே அது தள்ளாடுகின்றது.

**சரியான, கலோரிச், சத்துக்களை, சாப்பிட முடியாத...**

அவசரமான மனித வாழ்க்கையில், பண நெருக்கடி, பிரச்சினைகள், மனக் கவலைகளில் உழன்று உழன்று நாளும், உடலின் சக்திகள் வீணாகிக் கொண்டே போவதில், உடலின் வலுச்சக்தி, குறைந்து கொண்டே வருகின்றது.

**வீட்டில், அலுவலகத்தில், நாம் அன்றாடம்...**

செய்ய வேண்டிய வேலைகளை, செய்து முடிக்க முடியாதபடிக்கு, சக்தி இல்லாத, உடல் பலஹீனம், இன்றைக்கு, பல



மனிதர்களிடதில் உள்ளது.

**மேலும் இதய நோய், சர்க்கரை நோய், மூட்டு வலிகள்...**

தலைவலிகள், இடுப்பு வலிகள், வயிற்று வலிகள், அஜீரணத்தால் தொல்லைகள், சரியாக சாப்பிட முடியாமை, இவைகள் இன்னும் மனிதனின் உடல்கள், வலு இழப்பிற்கு காரணமாகி, “ஏன் வாழ்கிறோம்” என்ற நிலைக்கு, மனிதன் வருகின்றான். அப்படி தனக்குள் நினைக்கின்றான்.

**இல்லை, உடலுக்கு, ஒரு பிரச்சினை...**

என்றால், உடனே டாக்டரிடம் கொட்டிக் கொடுத்து விட்டு, வீட்டுச் செலவுகளுக்குப் பணம் இல்லாமல், திண்டாடும் நிலையும், மனிதனிடத்தில் காணப்படுகிறது.

**ஒரு புள்ளி விபரப்படி 5 பேர் கொண்ட...**

குடும்பத்தின் வருமானத்தில் 70% டொக்டரிடம் சென்று, உடலைக்காட்டி, மருந்து சாப்பிடுவதற்கே, சரியாகி விடுகிறது என்று, கூறப்பட்டுள்ள புள்ளி விபரம், அதிர்ச்சி தரக்கூடியதே.

**இதற்கு எல்லாமே, ஒட்டு மொத்த காரணம்...**

உடலின் சக்தி நிலைகளில், மனிதன் கவனித்துக் கொள்ளாததும், உடலை வலுப்படுத்தும், வழி முறைகளில், அவன் இறங்கிச் செல்லாததுமாகும்.

**மனிதன் பணத்தைத்தேடும் அளவிற்கு, தன்மனதை...**

உடலை, பயன்படுத்த நினைப்பதில்லை. எல்லா ஆட்டத்தையும் ஆடிவிட்டு, எல்லா தவறுகளையும் செய்துவிட்டு, அதன் பின்னால், உடலும் மனமும் கெட்டு, ஒவ்வொரு மனிதனும், அதற்குரிய தண்டனையையம், அனுபவிக்கின்றான்.

**சித்தர்கள், யோகிகள், ரிஷிகள் முனிவர்களைத்...**

தவிர்த்து, ஒவ்வொரு மனிதனும், மனதினால் கெடுக்கப்படுகின்றான். ஆசைகளினால் அவன் அலைக்கழிக்கப்படுகின்றான்!

**அந்த தவறுகளை, அவன் அவை “தவறுகள் அவற்றை...**

தான் செய்திருக்க அவசியம் இல்லை” என்று அவனுக்கான மரணத்திற்கு, முந்திய நொடிகளில், அவனுக்கு நல்லது, கெட்டது, பற்றிய பூரண அறிவு உண்டாகிறது. எனவே மரணம், ஒவ்வொரு மனிதனையும், ஞானி ஆக்கியே பின்பே, அவனுக்கு மரணத்தை அளிக்கின்றது.

**வாழ்க்கை முழுக்க, தனது சுயநலத்திற்காக, வீட்டில்...**

வெளியில், பிறரை வருத்திய தவறை, ஒவ்வொரு மனிதனும் செய்கின்றான். அதே போன்று அதிக செக்ஸ், அதிக அலைச்சலில், அதிக பேராசைகளில், உடலின் சக்திகளை, கண்டபடி எல்லாம் செலவழித்து விட்டு, நோய்களின், நடமாட்டத்திற்கு, தனக்குள் இடம் தந்து விட்டு, வாழ்க்கையை பாரமாக உணரும் மனிதர்களும், நிறைய இருக்கவே செய்கின்றனர்.

**எல்லா மனிதர்களும், மரணத்திற்கு முன்பு உடல்...**

தள்ளாடி, கண், காது, கெட்டு, பேச்சு கெட்டு, தன் சக்திகள் அழிந்து, படுக்கையில் விழுந்து, உடலை அசைக்க முடியாமல், மரணத்தில் விழுதல், கண்டிப்பாக நடக்கின்றது!

மனதில் இருக்கும், சக்திகளை எல்லாம், ஒவ்வொரு நாளும் இழந்துவிட்டு, அதன் பிறகு இனி, தன்னால் தனது மனது உருக்குலைந்து, நொந்து போன உடலோடு, இருக்க முடியாது, என்னும் நிலையில் தான், மரணத்தை அவன் தழுவுகின்றான். மனதின் அலைச்சலை, தடுத்து நிறுத்தி, அதில் உள்ள அலைகளை குறைத்து, அதை சக்தி உள்ளதாக ஆக்குவது, இந்த சக்தி தியானம்.

• உதயதீபன்

## கோவிந்த நாமம் எனும் தோணி!

“கோ” என்பதற்கு “பகவான்” என்றும், “விந்தன்” என்பதற்கு “அடைபவன்” என்றும் பொருள். நாம் கோவிந்தன் என்ற நாமத்தைத் தோணியாகப் பற்றினால், பிறவிப் பெருங்கடலைக் கடக்கலாம். “கோ” என்பதற்குப் “பசு” என்று பொருள். இங்கு “பசு” என்பது ஜீவாத்மாக்களைக் குறிக்கிறது. எனவே “பசு” என்ற சொல் மனிதர்களை மட்டுமின்றி அனைத்து உயிர்களையும் குறிக்கும். “விந்தன்” என்றால் “காப்பவன்” என்று பொருள். “கோவிந்தன்” என்ற சொல் அனைத்து உயிர்களையும் காப்பவன், அனைத்து உயிர்களாலும் அடையப்படும் பரம்பொருள் என்பதை உணர்த்துகிறது.



மந்திரங்கள், கடவுளால் நமது நன்மைக்காக அளிக்கப்பட்டவை. எப்படி மருந்துகள் என்பது நமது நன்மைக்காக என்று இருந்தாலும் தகுந்த மருத்துவரிடம் சென்று நமது உடலைப் பரிசோதனை செய்து, நமக்கேற்ற மருந்துகளை நாம் உட்கொள்கிறோமோ, அது போல மந்திரங்கள் அனைத்தும் பொதுவானவை அல்ல. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வீரியம் உடையது சம்பந்தப்பட்டவர் கடைப்பிடிக்கும் உணவு முறைகள், பழக்க வழக்கங்கள் என, பல விடயங்களின் அடிப்படையில் நமக்குக் கொடுக்கக்கூடிய மந்திரங்களும் அமையும்.

பெண்கள், வேத மந்திரங்கள் சொல்



# பெண்கள்

# காயத்ரி மந்திரத்தை பாராயணம் செய்யலாமா?

வதிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்கள். காயத்ரி மந்திரம் என்பது வேத மந்திரத்தின் சாரம். அதை, கண்டிப்பாகச் சொல்லக் கூடாது. பெண்கள் மட்டும் அல்லாமல், ஆண்களிலும் முறையாக உபநயனம் செய்விக்கப்பட்டு உபதேசம் வாங்கிய பிறகே ஜபம் செய்ய வேண்டும். மந்திரங்கள் வெறும் எழுத்துகள் அல்ல. அவை மிகுந்த சக்தி உடையவை. அவற்றை நாம் பெற்றுக் கொண்டால் அதற்குரிய காலம், எண்ணங்கள், உணவு முறைகள் முதலியவற்றை அறிந்து, சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும். இல்லையென்றால், அந்த மந்திரங்கள் நமக்குத் தகுந்த பலனைத் தராதது மட்டுமல்லாமல், தவறான எதிர்மறையான பலன்களையும் கொடுக்கும்.

ஹனுமான் சாலீஸா, ஹனுமான் ஸ்லோகங்களை நன்றாகச் சொல்லலாம். ஆஞ்சநேயர், நமக்கு ஒழுக்கத்தைக் கொடுப்பவர். ஒரு மனிதனுக்கு மிகப் பெரிய சொத்து ஒழுக்கம்தானே! ஹனுமான், பிரம்மச்சாரி ஆயிற்றே! அவரைத் திருமணம் ஆனவர்கள் வழிபடலாமா என்றும் வினவுவது உண்டு.

அவருடைய பிரம்மச்சர்யம் என்பது ஒழுக்கத்தின் வெளிப்பாடே அதனால், கண்டிப்பாகப் படிக்கலாம். எனினும், மூல மந்திரங்களை அவை எந்த தெய்வத்துக்கு உரியவையாக இருந்தாலும், அதை தகுந்த ஆசார்யரிடம் அவரவர் பக்குவத்துக்கேற்ப அறிந்து பயன்படுத்தவும்.

தற்காலத்தில் பெண்களே காயத்ரி மந்திரம் சொல்வது போல் கேஸட்டில் பதிவு செய்து, பல வீடுகளிலும் அதைப் பயன்படுத்தியும் வருகிறார்கள். காயத்ரி மந்திரம், வெளியில் சொல்லப்படக் கூடாதது. ரகஸ்யமாகப் பாது காக்கப்பட வேண்டியதாகும். எனினும் சில பெண்கள், நாங்கள் பல காலமாகச் சொல்லிக் கொண்டு தானே வருகிறோம்? நன்றாகத்தானே இருக்கிறோம் என்று சொல்வதும் உண்டு.

அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது, மந்திரங்கள் சுற்றுப்புறச் சூழலில் மட்டுமல்லாமல் நமது உடலிலும் அதிர்வுகளை ஏற்படுத்தும் தன்மை உடையவை. வேதம் சொன்னதை, நாம் எந்தக் காரணத்தைக் கொண்டும் மீறக் கூடாது.

• சுவாமி கமலாத்மானந்தா

**மன்மத ஆண்டு மாசி மாதம்**
**13.02.2016 முதல் 13.03.2016 வரை**




தன் மீது நம்பிக்கை வைத்து திறம்பட செயல்பட்டு வரும் மகர ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு கிரக அமைப்புகள் சாதகமாக இருப்பதால் நீங்கள் எண்ணிய எண்ணம் ஈடேறும். நினைத்ததை சாதித்து கொள்வீர்கள். எதையும் கவனமுடன் செயல்படுத்துவீர்கள்.

### பணியாளர்களுக்கு

பணியாளர்களின் வளர்ச்சியை பற்றி சிந்தித்து செயல்படுவீர்கள். திறம்பட செயல்படும் நீங்கள் பிறரின் நலனில் அக்கறை எடுத்து கொள்வீர்கள். அமைதியை வேண்டி சில நேரம் ஆன்மீக ஈடுபாடுகளில் இறங்குவீர்கள். பற்றாக்குறைகளை சரி செய்து கொள்வீர்கள்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

எல்லோருக்கும் எல்லாம் பெற்றுத் தர வேண்டுமென்று எண்ணும் பொது நோக்கம் கொண்ட நீங்கள் மக்களின் பல பிரச்சினைகளுக்கு பக்கபலமாக இருந்து செயல்படுவீர்கள். பொருளாதாரத்தில் வளர்ச்சியை பெற்று தருவீர்கள்.

### வியாபாரிகளுக்கு

தொழிலில் ஏற்றத்தையும் கருத்துகளில் மாற்றங்களையும் கொண்டு விளங்குவீர்கள். தொழிலில் சொந்த விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். இதுவரை பல தொழில்களை செய்து வந்த நீங்கள் இனி தெளிவான தொழில் வாய்ப்புகளை பெற்று நிரந்தர வருமானத்தை பெறும் வாய்ப்புகள் அமையும்.

### கலைஞர்களுக்கு

இரவு நேர நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவீர்கள். புதிய நண்பர்களின் தொடர்புகளும், வெளிநாட்டு தொடர்புகளும் உங்களின் வாழ்க்கையில் திருப்பத்தை ஏற்படுத்தும் இசைக்கலைஞர்களின் வளர்ச்சி வழிவகுக்கும்.

### பெண்களுக்கு

பெண்களின் தொடர்புகளை உங்களின் தொழிலின் வளர்ச்சிக்கு பயன்படுத்தி கொள்வீர்கள். பெண்களின் மேம்பாட்டுக்கு வழிகளை ஏற்படுத்தி கொள்வீர்கள். பொருளாதாரத்தில் படிப்படியான வளர்ச்சியை பெறுவீர்கள்.

### மாணவர்களுக்கு

ஆசிரியர் பயிற்சி, உயர்கல்வி. கணினி கல்வி பயிலும் மாணவர்களின் வளர்ச்சி நன்றாக அமையும். சொந்த முயற்சி வாழ்க்கைக்கு வளர்ச்சியை தரும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

22.02.2016 திங்கள் அதிகாலை 06.23 மணி முதல் 24.02.2016 புதன் மாலை 04.32 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள்**

மருத்துவ துறையில் சிறந்து விளங்குவீர்கள். புதிய நோய் கண்டறிந்து அதனை சரி செய்வதில் மிகவும் கைதேர்ந்தவராக இருப்பீர்கள். பொருளாதாரம் சிறக்கும்.

**திருவோணம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

திருப்பங்களை க்ண்டறிந்து எதையும் சவாலாக செயல்படுவீர்கள். எத்தனை எதிர்ப்புகள் இருந்தாலும் அதனை சிறப்பாக செயல்படுத்துவீர்கள்.

**அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

விவசாய நிலங்களை சீர் செய்து விளைச்சலை பெருக்கி கொள்வீர்கள். சகோதரரின் மூலம் சில காரியங்களை எடுத்து செய்வீர்கள். பொருளாதார நிலை முன்னேற்றம் தரும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** நீலம், சிவப்பு, வெண்மை

**அதிர்ஷ்ட திசைகள்:** மேற்கு, தெற்கு, தென்கிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள் :** சனி, ஞாயிறு, திங்கள்


### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

வியாழக்கிழமை காலை 06.00, 07.00 மணிக்குள் விநாயகரையும், தட்சிணாமூர்த்தியையும் வணங்கிவர உங்களின் எண்ணம் சிறப்பாக நடக்கும். தொழிலில் சிறப்பான முன்னேற்றம் உண்டாகும்.

### நாயன்மார்!



"நாயன்" என்ற சொல்லுக்கு "இறைவன்" என்று ஒரு பொருள் உண்டு. அதிலிருந்து "இறையடியார்" என்ற பொருளில் "நாயன்மார்" என்ற சொல் வந்தது. எனினும் அனைத்து இறையடியார்களையும் "நாயன்மார்கள்" என்று சொல்லாமல், பெரிய புராணம் குறிப்பிடும் சிவனடியார்களை மட்டும் "நாயன்மார்" என்று வழங்குவது வழக்கத்தில் இருந்து வருகிறது.



# பாபாஜி அருளிய கிரியா யோகம்

கிரியா யோகம் நெடிய பாரம்பரியத்தைக் கொண்டது. "பேரன்பின் அவதாரம்" என்று போற்றப்படுகிற பரமஹம்ச யோகானந்தர் தமது நூலில் இதன் சிறப்புக்களை விவரித்திருக்கிறார். இவருடைய குரு யுக்தேஸ்வர் கிரிஜி மகராஜ். கிரிஜி மகராஜின் குருவான லாஹிரி மகாசயர் மூலமாக இந்த யோகமுறை மிகவும் பிரபலமாயிற்று.

கிரியை என்றாலே செயல், வினை, எதிர்வினை என்று இருபொருள்படும். யோகம்சேருதல், இணைதல், பொருந்துதல், கலத்தல் என்று பொருள்படும். கிரியா யோகம் என்பது ஒரு குறிப்பிட்ட செயல் அல்லது சடங்கின் மூலம் இறைவனுடன் இரண்டறக் கலத்தல் ஆகும்.

கிரியா யோகத்தை முறையாகச் செய்து வரும் யோகி கர்மவினை அல்லது விதிப்படியான காரணகாரியத் தொடரில் இருந்து விடுபடுகிறான்.

கிரியா யோகம் நாம் உட்கொள்ளும் பிராண வாயுவின் மூலம் நமக்குப் புத்துணர்ச்சியை அளிக்கும். எப்படியெனில் மிகுதியான பிராண வாயுவின் அணுக்கள் உயிர்சக்தியாக மாற்றப்பட்டு மூளை மற்றும் முதுகுத்தண்டின் மையங்களை சுறுசுறுப்படையச் செய்யும். இரத்தம் தூய்மையடைவதால் உயிரணுக்களின் அழிவு குறையும்.

கிரியா யோக முறையைத் தமது குருவான பாபாஜியிடம் இருந்தே கற்றார் லாஹிரி மகாசயர். கால வகையில் மிகவும் பழைமையான யோக முறையை பாபாஜி எளிமைப்படுத்தி "கிரியா யோகம்" என்று பெயரிட்டார்.

"கீதை சொல்கிறது"

பகவான் கிருஷ்ணர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் அர்ஜுனனுக்கு வழங்கிய அதே யோக முறையை பத்தொன்பதாவது நூற்றாண்டில் லாஹிரிமகாசயர் மூலமாக உலகிற்கு அளித்தார் பாபாஜி.

**பகவத்கீதையில் இரண்டு இடங்களில் கிரியா யோகம் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது.**

**கீதையின் நான்காவது அத்தியாயமான ஞானகர்ம ஸத்யாஸ யோகம், சுலோகம் 29.**

**"அபாதே ஜுஹ்வதிப்ராணம் ப்ராணே ஸபாநம் ததாபரே**

**ப்ராணாப நகதீருத்த்வா ப்ராணாயாம பராயணா**

சில யோகிகள் அபான வாயுவில் பிராணனையும், பிராணவாயுவில் அபானனையும் ஆகுதி செய்கிறார்கள். சிலரோ பிராண அபான வாயுக்களின் போக்கைத் தடுத்து பிராணாயாமத்தில் ஈடுபடுகின்றனர்.

பிராணாயாமம் என்கிற ஆத்ம சாதனைக்கு யக்ஞ உருவகம் கொடுப்பதற்காக "ஜுஹ்வதி" (ஓமம் செய்தல்) என்று கூறப்பட்டது. பிராணாயாமம்

என்கிற யக்ஞம் மனிதனை கர்ம பந்தங்களில் இருந்து விடுவித்து பரமாத்மாவிடம் கொண்டு சேர்க்கும்.

பிராணவாயுவை அக்னியாகவும், அபான வாயுவை ஓமத்ரலியமாகவும் கொண்டு செய்யப்படுவது பிராணாயமம்.

சாதகன் மூக்கின் வழியாக உள்ளே இருக்கும் வாயுவை வெளிப்படுத்தித் தடுத்து நிறுத்துவது இரேசக பிராணாயாமம். அபான வாயு பிராண வாயுவில் இலயமடைகிறது.

வெளிக்காற்றை மூக்குவழியாக உள்ளே இழுத்துக் கொள்ளும் செயல்முறை பூரக பிராணயாமம். அப்பொழுது வெளிக்காற்று உள்ளே இழுத்து தடுத்து நிறுத்தப்படுவது உள்கும்பகம் (ஆப்யந்தர கும்பகம்). உள்ளிருக்கும் வாயு பலமுறை வெளியே தள்ளப்பட்டு வெளியே நிறுத்தி வைக்கப்படுவது வெளிக்கும்பகம் (பாஹ்ய கும்பகம்) எனப்படும்.

**கீதையின் ஐந்தாவது அத்தியாயமான ஸந்யாச யோகம் பகுதி சுலோகங்கள் 27, 28.**

"வெளி விடயங்களை வெளியே வைத்து, கண்களை புருவங்களுக்கிடையில் நிறுத்தி, நாசியில் இயங்கும் பிராண அபான வாயுக்களை சமப்படுத்தி புலன், மனம், புத்தி இவற்றை அடக்கி, மோட்சத்தை நாடி ஆசை, பயம், கோபம் இவற்றில் இருந்து முற்றிலும் விடுபட்டு பரமாத்மாவையே சிந்தித்துக் கொண்டிருக்கிற முனியாயிருப்பவன் எப்போதும் விடுதலை பெற்றவனே."

வெளியே உள்ள போக விடயங்களுடன் ஜீவனுக்குள்ளத் தொடர்பு காலகாலமாய் இருந்து வருவதாகும். அவற்றின் பதிவுகள் மனதில் நிரம்பிக் கிடக்கும். அவை பொருட்களின் பால் பற்றுதலை ஆசைத் தீயை வளர்ந்துவிடும். அவற்றை தியானத்தில் ஒதுக்க முயன்றாலும் முடிவதில்லை. அவை தியானத்துக்கு இடையூறாகும். விவேகத்தின் மூலம் போக விடயங்கள் துக்கமயமானவை. துக்கத்திற்குக் காரணமானவை என்பதை அறிய வேண்டும். வைராக்கியத்தின் துணை கொண்டு அவற்றின் மனப்பதிவுகளை அகற்றிவிட வேண்டும்.

கண்பார்வையை புருவ மத்தியில் நிறுத்துவதன் மூலம் கவனத்தை ஒருமுகப்படுத்த முடியும். கண்களை நாற்புறமும் செலுத்தினால் தியானத்துக்கு இடையூறு யோகத்தில் ஈடுபடுகிறவர்கள் இன்னொரு காரணமும் வைத்திருக்கிறார்கள். புருவ மத்தியில் உள்ள ஆக்ஞ சக்ரத்தை எட்டிவிட்டால் அவர்கள் மறுபிறவி எடுக்க வேண்டியிராது.

பிராண, அபான வாயுக்களின் போக்கு எப்போதும் ஒரே மாதிரி இருக்காது. சில சமயம் இடது நாசியிலும், சில சமயம் வலது நாசியிலுமாக மாறி மாறி சஞ்சரிக்கும். அந்நிலையில் மனம் சஞ்சலத்துக்குள்ளாகும். பிராண, அபான வாயுக்களின் போக்கை சீராக வைத்துக் கொண்டால். மனநிலையும் சீராகிவிடும்.

### ஆதிபராசக்தியின் வடிவங்கள்



நவராத்திரிக் கதையில் சொல்லப்படும் மகாலட்சுமி, செல்வநாயகியானவிஷ்ணு பத்தினியல்ல, மகாசரஸ்வதியும், கல்வி நாயகியான பிரம்மாவின் பத்தினியல்ல. இங்கு மகாலட்சுமி என்றும், மகாசரஸ்வதி என்றும் சொல்லப்படுபவர்கள் ஆதிபராசக்தியின் வடிவங்களே ஆவர்.

**எப்படிச் சீராக்குவது?**

முதலில் இடது நாசி மூலம் அபான வாயுவை உள்ளிழுத்து, வலது நாசி மூலம் பிராணவாயுவை வெளிவிட வேண்டும். பிறகு, அபான வாயுவை வலது நாசி மூலம் உள்ளிழுத்து இடது நாசி மூலம் பிராண வாயுவை வெளிவிட வேண்டும். இப்படி வாயுக்களை சீராக்கும் பயிற்சியின் போது பகவானின் நாமத்தை ஜபம் பண்ண வேண்டும். சரியான சீரான ஒரே வினாடிக் கணக்கில் மூச்சை இழுத்துவிட வேண்டும்.

◂ C.S.தேவநாதன்



. மன்மத ஆண்டு மாசி மாதம்
13.02.2016 முதல் 13.03.2016 வரை




உங்களின் செயல்களில் முழு ஈடுபாடுகளை கொண்டு விளங்கும் கும்ப ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு குரு பார்வை பெறுவதும், தொழில் ஸ்தானத்தில் ராசி நாதன் சனி அமர்வதும் உங்களை நல்ல பலன்களை பெற்று தரும் வாய்ப்பு அமையும். பொருளாதார மேன்மையை பெறுவீர்கள்.

### பணியாளர்களுக்கு

பணிகளின்போது தொடர்ந்து பல சோதனைகளை பார்த்து விட்ட நீங்கள் இனி அதிலிருந்து படிப்படியாக மீள ஆரம்பிப்பீர்கள். தொடர் நன்மைகளையும் லட்சியத்தில் அடைய வேண்டிய பல நன்மைகளையும் பெறுவீர்கள். பொருளாதாரத்தில் வெற்றியை பெறுவீர்கள்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது சொத்துகளை பாதுகாக்கும் பணியில் இருந்து நீங்கள் முழுமையாக செயல்படுவீர்கள். எதிரிக்கு கூட துரோகம் செய்யாத நீங்கள் எல்லோரின் வளர்ச்சியையும் பற்றி சிந்தித்து செயல்படுவீர்கள். ஒற்றுமையை ஏற்படுத்த பாடுபடுவீர்கள்.

### வியாபாரிகளுக்கு

வியாபாரத்தில் நீங்கள் எதிர்பார்த்த அளவு பலன் கிடைக்காவிட்டாலும் தொழில் சிறப்பாக அமையும். அன்றாட விற்பனை செய்யும் பழங்கள், காய்கறிகள் விற்பனையில் நல்ல லாபம் கிடைக்கும். அடைக்கப்பட்ட பொருட்களின் மூலம் அதிக லாபம் கிடைக்கும்.

### கலைஞர்களுக்கு

கலைஞர்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். தனித் திறமைகளை வெளிபடுத்தி ரசிகர்களின் பாராட்டுதலை பெறுவீர்கள். ஆடல், பாடல்களில் திறம்பட செயல்படுவீர்கள். பொருளாதாரத்தில் வளர்ச்சி கிடைக்கும்.

### பெண்களுக்கு

பெண்களின் முன்னேற்றம் சிறப்பாக அமையும். எதிலும் கவனமுடன் செயல் படுவீர்கள். சில நேரம் வீண் வம்புகள் வந்து சேரும். பண வரவு நன்றாக இருக்கும்.

### மாணவர்களுக்கு

கால்நடை மருத்துவம், சித்த மருத்துவ கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். குற்றங்கள் சார்ந்த சட்டம் சிறப்பாக அமையும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

24.02.2016 புதன் மாலை 04.33 முதல் 27.02.2016 சனி அதிகாலை 04.06 மணி வரை

### நடசத்திர பலன்கள்
### அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள்

தொழிலில் பல சோதனைகளை சந்தித்து வந்தாலும் உங்களின் ராசியை குரு பார்ப்பது சிக்கல் குறையும் வாய்ப்பு அமையும். வங்கி கடன் பெறும் வாய்ப்பு அமையும்.

### சதயம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டாகும். அன்னிய தொடர்புகளால் உங்களுக்கு சில மாற்றங்கள் உண்டாகும். தொழில் புத்துணர்ச்சி உண்டாகும்.

### பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்

திருமண வாய்ப்புகள் உண்டாகும். வீட்டில் சுபகாரியம் நடக்கும். தொழிலில் முன்னேற்றம் பெறலாம். சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள்.

அதிர்ஷ்ட நிறங்கள்: நீலம், மஞ்சள், பல வர்ணம்

அதிர்ஷ்ட திசைகள்: மேற்கு, தென்கிழக்கு, கிழக்கு

அதிர்ஷ்ட கிழமைகள் : சனி, ஞாயிறு, வியாழன்

### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

வெள்ளிக்கிழமை ராகு காலத்தில் அம்மனுக்கு மஞ்சள் பொடி அர்ச்சனை செய்து நெய்விளக்கு போட்டு வர தொழிலில் மேன்மையும், உயர்வும் உண்டாகும்.

### மகமாயி



"மகமாயி" என்பதற்கு "மகத்தான தாய், மகிமை பொருந்திய தாய்" என்பது பொருள். ஜகமாயையில் உள்ள நம்மை, மகமாயி யாக இருந்து முக்திக்கு ஜகன்மாதா அழைத்துச் செல்கிறாள்.

ஒரு மனிதன் காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்தான். அவன் வருவதை ஒரு சிங்கம் பார்த்து விட்டது. அவன் மீது பாய இருந்த சமயத்திலே அந்தச் சிங்கத்தின் மீது ஒரு பறவை பாய்ந்து, அந்தச் சிங்கத்தையே தூக்கிக் கொண்டு போய்விட்டது. "(இது என்ன புதுக்கதை) சிங்கத்தையாவது, பறவையாவது தூக்கிக் கொண்டு போவதாவது?" என்று நாம் கேட்போம். ஆனால் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு "சிம்புள்" என்ற ஒரு பறவை இருந்ததாகவும், அதற்குச் சிங்கத்தையே தூக்கிக் கொண்டு போய்ச் சாப்பிடும் வலிமை இருந்ததாகவும், பண்டைய நூல்களிலிருந்து அறிகிறோம்.



# தீவினை அகற்றும் இறைவனின் இன்னருள்!

தாயுமானவர், பாய இருந்த சிங்கத்தைக் கொடியவினையுடன் ஒப்பிட்டுச் சொல்கிறார். அவர், சிம்புள் பறவையை இறைவன் திருவருளுடன் ஒப்பிடுகிறார். ஒரே ஒரு விநாடி தாமதித்திருந்தால் சிங்கம் மனிதன் மீது பாய்ந்து அவனை அடித்துக் கொன்றிருக்கும். அதுபோல் தன்னைப் பற்ற வந்த கொடியவினையிலிருந்து இறைவன் திருவருள் தன்னைக் காத்து ரட்சித்தது என்கிறார் தாயுமானவர். இந்தக் கருத்தமைந்த அவரது பாடல் இது.

"சிங்கத்தையொத்து எனைப் பாயவரும்
வினையினைச் சேதிக்க வரும் சிம்புளே,"

பல காலம் இருள் சூழ்ந்திருந்த அறையில் ஒரு தீபம் ஏற்றினால், இருள் உடனே விலகி விடும். அதுபோல் எண்ணற்ற பிறவிகளில் செய்த தீவினையே ஆயினும், தீபம் போல் விளங்கி ஒருவனை அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுவிக்கும் ஆற்றல் இறைவனின் இன்னருளுக்கு உண்டு.

இறைவன் திருவருளை விஞ்சி நிற்கும் ஆற்றல் உலகில் எதற்கும் இல்லை. எனவே இறைவன் திருவருள் நம்மை எத்தகைய தீவினையிலிருந்தும் காத்தருள் புரியும் என்ற உறுதி நமக்கு வேண்டும்.

## உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கம்!

மாணிக்கத்தை ஓர் அண்டாவில் போட்டு நீரை நிரப்பினால், மாணிக்கம் தான் இருப்பதை மறைத்துக்கொண்டு நீரின் நிறத்தைச் சிவப்பாக்கி விடும். அப்போது மாணிக்கம் நீரில் இருப்பதே தெரியாது. அது போல் இறைவன் தன்னை மறைத்துக்கொண்டு எங்கும் இருக்கிறான். அபிராமிபட்டரும் நாம் இயற்றிய அபிராமியந்தாதியில், "உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கம்" என்று தேவியைக் குறிப்பிடுகிறார்.

இவ்விதம் அருளாளர்கள் பலர் இறைவன் அல்லது இறைவியைத் தங்கள் நூல்களில் மாணிக்கம் என்று குறிப்பிட்டதுண்டு. தூய உணர்வுகள் இல்லாதவர்களால் இறைவன் அல்லது இறைவி என்ற அந்த மாணிக்கத்தை மதிக்க முடியாது. இது. "தூசி படிந்த கண்ணாடியில் முகம் பார்க்க முடியாது" என்பது போன்றது.



# கோபிகா வஸ்த்ராமஹரணம்


கோபியர்கள் தன் மீது கொண்டிருந்த அன்பு நிலையானதுதானா என்று சோதித்து அறியக் கண்ணன் நினைத்தான். ஒரு நாள் ஊர்ப்புறத்தே உள்ள சிற்றாறு ஒன்றில் கோபியர்கள் மட்டும் ஆனந்தமாக நீராடிக் கொண்டு இருந்தார்கள். அச்சமயம் கண்ணன் அவர்கள் அறியாமல் அந்த சிற்றாற்றங்கரைக்கு வந்தான். அவர்கள் களைந்து வைத்திருந்த ஆடைகளை எடுத்துக் கொண்டு வந்தான்.

அவற்றை பக்கத்தில் இருந்த மரத்தின் மீது ஏறி உயர்ந்த கிளைகளில் செருகினான். அந்தமரக் கிளையின் மீது அமர்ந்தே தன் வேணுகான பிரவாகத்தைப் பாய்ச்சினான்.

நீர்நிலையில் நீந்தியும், கட்டியும், பிடித்தும், மூழ்கியும். வெளிவந்தும் ஆடிப்பாடி விளையாடிக் கொண்டிருந்த கோபியர்களின் கேளிக்கை விளையாட்டுகள் கண்ணன் குழலோசை கேட்டதும் நின்றன. கரைப் பக்கம் அவர்கள் கண்கள் எதையோ துழாவின. ஆம்! அவர்கள் கட்டிய வைத்து விட்டுத்தான் கானம் இசைக்கிறான் என்று கணப்பொழுதில் கண்டு கொண்டார்கள். அப்போது கழுத்தளவு நீரில் நின்று கொண்டு அவர்கள் கண்ணனை மிகவும் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டனர்.

"கண்ணா! என் கட்டித் தங்கமே! இதென்னப்பா விளையாட்டு? எங்கள் வஸ்திரங்களைக் கொண்டு போய் இப்படி எட்டாத இடத்தில் மரத்தின் உச்சியில் மாட்டி வைத்திருக்கிறாயே! அந்த ஆடையின்றி நாங்கள் எப்படிக் கரையேறுவது? தயவு செய்து நீ கீழே இறங்கி வந்து எங்கள் ஆடைகளை எங்களுக்குக் கொடுத்து விடு கண்ணா!" என்றார்கள் கோபியர்.

"மரத்தடிக்கு வந்து விடுங்கள். தான் மரத்தின் மீது இருந்தபடியே உங்கள் ஆடைகளை உங்களுக்குக் கொடுத்த விடுகிறேன்."



துணிகளைத்தான் துழாவின. "அவைகளை எங்கே? எங்கே?" என்று ஒருவரை ஒருவர் மௌன ஜாடையில் மோகன கீதத்தை ரசித்தவாறே கேட்டுக் கொண்டார்கள்.

சுற்று முற்றும் திகில் அடைந்து பார்த்த கோபியர்கள் கண்ணன் மரத்தின் மீதுகட்டி

"கண்ணா! நீ சொல்வது சரியா? ஆடையின்றி நாங்கள் வெளியேறுவது எப்படி? மேலும் அப்படியே அவ்வளவு தூரம் நடந்து வரவும் முடியுமா?"

"ஆடை வேண்டுமா? வேண்டாமா?"

"நிச்சயமாக வேண்டும்தான்!"

"அப்படியானால் மரத்தடிக்கு வந்து விடுங்கள்" என்று அவர்களைக் கண்ணன் அழைத்தான்.


"கண்ணா! சுட்டிக் கண்ணா! நீ தயவு செய்து எங்களைத் துன்பப்படுத்தாதே. விளையாடியது போதும். ஆடைகளைச் சீக்கிரம் கொடு!"

கண்ணன் அவர்கள் வேண்டுகோளை அப்போது வேண்டும் என்றே புறக்கணித்தான். அவன் சொல்கிறான், "அம்மணிகளே! இங்கே என்னைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? உங்களுக்கு என் மீது அளவு கடந்த அன்பு இருக்கிறது அல்லவா?"

"ஆம்! அன்பு நிறைய இருக்கிறது" என்றார் கோபியர். "அப்படியானால்...! அதாவது அளவற்ற அன்பை என் மீது செலுத்தும் உங்களுக்கு இங்கே கரையேறி வரத் தயக்கம் ஏன்? சொல்லுங்கள்...! தயக்கம் ஏன்?"

"கண்ணா! நீ தர்மத்திற்கு விரோதமாக நடக்கச் சொல்லுகிறாய். உன் நிபந்தனைப்படி நாங்கள் நடக்க முடியுமா? நீயே யோசித்துப் பார். ஆகவே தயவு செய்து எங்கள் ஆடைகளை எங்களிடம் தூக்கிப் போட்டு விடு!" என்று அழாக் குறையாகவே மறுகி மறுகிக் கேட்டனர்.

"தர்மத்தை எனக்கு உபதேசம் செய்கிறீர்களே! நீங்கள் தர்மப்படி நடந்து கொண்டிருக்கிறீர்களா? பெண்கள் ஆடையின்றி ஊர்ப் புறத்தே இருக்கும் ஆற்றில் நீராடுவது தர்மமா? நீங்களே தர்மத்துக்கு விரோதமாக நடந்து விட்டு, என்னை மட்டும் தர்மப்படி நடக்க வேண்டும் என்று கோருவதில் என்ன நியாயம் இருக்கிறது?" எனக் கிருஷ்ணன் கேட்டான். கோபியர்கள் காதில் இந்த வார்த்தைகள் முள்ளாய் தைத்தன. அவர்கள் ஒருவரை ஒருவர் ஏற இறங்கப் பார்த்துக் கொண்டார்கள். அவர்களுடைய



தாமரை விழிகளில் கண்ணீர் மணிகள் கோர்த்துக் கொண்டு தாரையாக வழிந்தன. "கிருஷ்ணா! ஏனப்பா இப்படி வம்பு செய்கிறாய்? நீ சொல், உன் விடயத்தில், ஏதாவது நாங்கள் தவறாக நடந்தது உண்டா? அப்படி இருக்க நீ எங்களை இப்படித் தவிக்க விடுவதில் உனக்கு என்ன மகிழ்ச்சி ஏற்படப் போகிறது?" என்று கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டார்கள்.

"என்னை உங்களில் ஒருவனாகக் கொண்டிருப்பது உண்மையானால். ஊம் சீக்கிரம் கரை ஏறுங்கள்! நான் உங்களுக்கு அன்னியன் அல்லன். உங்களையே நீங்கள் எனக்கு அர்ப்பணித்த போது. நான் வேறு நீங்கள் வேறு என்ற இந்த பாகுபாடு ஏன்? பேதமான பேதைமை புத்தி ஏன்?" என்று கிருஷ்ணன் வினவினான்.

"சியாமள சுந்தரா! நாங்கள் உன் அடிமைகள். நீர் சொன்னதைச் செய்வோம். தர்மம் அறிந்தவனே! ஆடையைக் கொடுத்து விடு. இல்லையேல் அரசரிடம் சொல்லுவோம்" என்றார்கள் கோபியர்.

(தொடரும்...)

• ஏ.எஸ்.வழித்துணைராமன்

## பெரிய புராணம் உணர்த்தும் மையக் கருத்து!



அரசனான அநபாய சோழன்இன்ப நூலைப் படித்துக் கொண்டிருந்தான். அதை அறிந்த அமைச்சர் சேக்கிழார், அரசனை நல் வழியில் செலுத்துவது தன் கடமை என்று உணர்ந்து திருத்தொண்டர் புராணம் இயற்றி, அநபாய சோழனுக்குச் சைவ நெறியை உணர்த்தினார். இறைவனுக்கும், அந்த இறைவனை வழிபடும் அடியார்களுக்கும் தொண்டு செய்பவர்கள் மிகப் பெரிய பேற்றினைப் பெறுவார்கள் இது நாயன்மார்களான பெரியவர்கள் பற்றிக் கூறும் பெரியபுராணம் உணர்த்தும் மையக் கருத்தாகும்.



# அருள்மிகு
# வில்வ வனநாதர் ஆலயம்

**பஞ்சாரண்யத் தலங்களில் ஐந்தாவது திருத்தலம் திருக்கொள்ளம்பூதூர். இத்தலத்திற்கு வில்வ வனம், பிரம்மவனம், காண்மப வனம், பஞ்சாட்சரபுரம் என்ற பெயர்களும் உண்டு. தஞ்சாவூர் மாவட்டத்தில் நன்னிலம் வட்டத்தில் கொரடாச்சேரிக்கு அருகில் உள்ளது திருக்கொள்ளம்பூதூர். கும்பகோணம் கொரடாச்சேரி பேருந்துப் பாதையில் செல்லூரில் இறங்கியும் இத்தலத்திற்குச் செல்லலாம். இத்தலத்தின் மேற்கில் அகத்திய காவிரி என்கிற வெட்டாறு ஓடுகிறது. இதற்கு முள்ளியாறு என்ற பெயரும் உண்டு. ஓடம்போக்கி ஆறு என்று உள்ளூர் மக்கள் அழைக்கிறார்கள்.**

திருக்கொள்ளம்பூதூர் ஆரவாரம் அதிகமில்லாத அமைதியான, அழகான கிராமம். பசுமையான வயல்கள் செடி கொடிகள், குவளை மலர், கொன்றை மலர் போன்ற வண்ண வண்ண மலர்கள், தென்னை மரங்கள் நிறைந்த தோப்புகள், சோலைகள் என இயற்கை எழில் கொஞ்சும் கிராமம். திருஞானசம்பந்தர் தமது தேவாரப் பாடலில் இத்தலத்தின் இயற்கை அழகை வர்ணித்துப் பாடியிருக்கிறார். பாற்கடலைக் கடைந்து தேவர்கள் அமிர்தம் பெற்றார்கள் அல்லவா? அந்த அமுதத்தின் திவலைகள் இத்தலத்தில் தெறித்து விழுந்து வில்வ மரங்களாயினவாம். வில்வமரங்கள் நிறைந்த பகுதியாக இருந்ததால் இத்தலத்திற்கு வில்வாரண்யம் என்ற பெயர் ஏற்பட்டது. படைப்புத் தொழிலை மீண்டும் பெறுவதற்க்க பிரம்மன் இத்தலத்தில் சிவலிங்க பிரதிஷ்டை செய்து பூஜையில் ஈடுபட்டார்.

பிரம்மன் தவமிருந்து வழிபட்டதால் இத்தலம் பிரம்மவனம் என்ற பெயர் பெற்றது. பிரம்மன் பூஜை செய்து பேறு பெற்ற இத்தலத்தைப் பற்றிக்



## முருகா என்றால் போதும்!

"முருகா" என்ற நாமத்தை உச்சரித்தால் போதும். ஆனால் வழக்கத்தில் இருக்கும் "சரவணபவ" என்ற ஆறெழுத்து மந்திரத்தை, அல்லது "குஹாய நம" என்ற மந்திரத்தை ஏற்கெனவே உபதேசம் பெற்று ஜபம் செய்து வரும் ஒருவரிடமிருந்து கூடுமானால் உபதேசம் பெற்று, அவர் காட்டும் வழியில் முறைப்படி ஜபம் செய்வது சிறந்தது.

கேள்வியுற்ற அகத்திய முனிவர் இத்தலத்திற்கு வந்து, கோயிலுக்கு இட திசையில் ஒரு சிவலிங்கத்தை ஸ்தாபித்து, ஒரு தீர்த்தத்தையும் உண்டாக்கி இறைவனை வழிபட்டு வந்தார். இறைவன் இத்தலத்தில் அகத்திய முனிவருக்கு ரிஷபாரூடராய்க் காட்சி கொடுத்ததாக வரலாறு. பிரம்மன், அகத்தியர், அர்ச்சுனன் போலவே விநாயகர், கங்கை, காவிரி, ஆதிசேஷன், இடைக்காடர் வரகுணபாண்டியன் கோச்செங்கட் சோழன், பிருகு முனிவர், காசிபர், மார்க்கண்டேயன், கண்ணுவர், வசிஷ்டர், வாமதேவர் எனப் பலரும் வில்வ வனப் பெருமானை வழிபட்டு நல்வாழ்வு பெற்றதாகத் தலபுராணம் கூறுகிறது. புராணப் பெருமை பெற்ற இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடையது.

சுவாமி விபுலானந்த அடிகள் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவர் பல காலம் ஆராய்ச்சி செய்து எழுதி வெளியிட்ட யாழ் நூலை இத்தலத்தில்தான் அரங்கேற்றம் செய்தார்.

பல சிவாலயங்களைத் தரிசித்துக் கொண்டு திருக்கொள்ளம்பூதூருக்கு திருஞானசம்பந்தர் வந்த போது பெருமழை காரணமாக முள்ளியாற்றில், நீர் பெருக்கெடுத்தோடியது. ஓடம் இல்லாமல் ஆற்றைக் கடக்க முடியாது என்றார்கள், உடன் வந்த அடியார்கள். கரையில் ஓடங்கள் இருந்தனவே தவிர ஓடக்காரர்கள் இல்லை. அடியார்கள் திரும்பி விடலாம் என்றார்கள். திருஞானசம்பந்தர் சம்மதிக்கவில்லை. அடியார்களுடன் நிறுத்தியிருந்த ஓடத்தில் ஏறி அமர்ந்தார். "கட்டியிருக்கும் ஓடத்தை அவிழ்த்து விடுங்கள். நாமே ஓடத்தைச் செலுத்தலாம்" என்றார். "எப்படி?" என்றார்கள் அடியார்கள். "ஓடங்கள் இருக்கின்றன. அவற்றைச் செலுத்த துடுப்பு என்ற ஓடக்கோல் இல்லையே. துடுப்பு இல்லாமல் நீரைக் கிழித்து ஓடத்தை எப்படி செலுத்துவது?" கோல் இல்லாவிட்டால் என்ன? நம் நா இருக்கிறதே?" என்ற திருஞானசம்பந்தர். "கொட்டமே கமழும்" என்ற பதிகத்தைப் பாடினார்.

இறை அருளால் ஓடம் அக்கரையில் வந்து சேர்ந்தது. கோயிலினுள் சென்று இறைவனைக் கண்குளிரத் தரிசித்து, ஓடத்தை நடத்தி தங்களைக் கரை சேர்த்ததற்காக இறைவனுக்கு நன்றி கூறி வழிபட்டார். அதனாலேயே முள்ளியாற்றுக்கு இந்தப் பகுதியில் "ஓடம் போக்கி ஆறு" என்ற பெயர் ஏற்பட்டது. இப்போதும் ஆண்டு ஐப்பசி மாதத்தில் அமாவாசைக்கு மறுநாள் இத்தலத்தில் ஓடத்திருநாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இத்தலத்தில் இறப்பவர்களுக்கு சிவபெருமான் பஞ்சாட்சர மந்திரத்தை வலச் செவியில் தாமே ஓதி முக்தி அளிப்பதாக ஐதீகம். இதைக் கருத்தில் கொண்டு தான் இத்தலம் "பஞ்சாட்சரபுரம்" என்று அழைக்கப்படுகிறது எனலாம்.

ஊருக்கு நடுவில் கிழக்கு நோக்கி கோயில் அமைந்திருக்கிறது. கோயிலுக்கு முன் பிரம்ம தீர்த்தம் என்ற திருக்குளம் உள்ளது. பிரம்ம தீர்த்தம், அர்ச்சனை தீர்த்தம், அகத்திய தீர்த்தம், வெட்டாறு (ஓடம் போக்கி ஆறு) ஆகியவை இத்தலத்தின் முக்கிய தீர்த்தங்கள். இத்தலத்தில் கோயில்கொண்டிருக்கும் வலம்புரி விநாயகர் பிரசித்தமானவர் காரியசித்தி விநாயகர் என்று போற்றப்படுகிறார்.

அம்மன் சன்னதி தெற்கு நோக்கி உள்ளது. அம்மனை சவுந்தரநாயகி என்றும் அழகு நாச்சியார் என்றும் அழைக்கிறார்கள். கல்வெட்டுக்களில் இறைவனை "திருக்கொள்ளம் புதூர் உடையார்" என்றும் தேவியை "அழகிய நாச்சியார்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

புராணப் பெருமைமிக்க இத்தலத்தின் ஆலயம் சிற்பக் கலையிலும் சிறந்து விளங்குகிறது. ஆலயத்தின் முன் வாயிலில் கோபுரம் இல்லை. உள்கோபுரம் ஐந்து நிலைகளோடு கம்பீரமாக நிற்கிறது. இரு பக்கங்களிலும் பொய்யாத விநாயகர், தண்டபாணி சந்நிதிகள் உள்ளன. உள் பிரகாரத்தில் தென்புறம் தலவிருட்சமான ஆதிவில்வமரமும் நால்வர் சந்நிதியும் உள்ளன. மேல்புற வரிசையில் வலம்புரி விநாயகர்,


ஆன்மீகச் சிறப்பும் கலை அழகும் அமைந்த திருக்கொள்ளம்பூதூர் ஆலயம் உங்களை அழைக்கிறது. வலம்புரி விநாயகரையும், அருள்மிகு சவுந்தரநாயகி சமேத வில்வாரண்யேஸ்வரரையும் வழிபட்டுப் பயன்பெறலாம்.

K.குருமூர்த்தி

# மகான் கோவிந்த தீக்ஷிதர்

1 பதினாறாம் நூற்றாண்டில், தஞ்சையை ஆண்ட மூன்று நாயக்க மன்னர்களுக்கு ராஜகுருவாகவும், மந்திரியாகவும் விளங்கியவர் ஸ்ரீகோவிந்த தீக்ஷிதர்.

2 ஆரணியில் மன்னர் அச்சுததேவராயர் முன்னிலையில் கோவிந்த தீக்ஷிதருக்கும் நாகமாம்பாவக்கும் திருமணம் நடந்தது.




3 மகனே, இனி நீ தஞ்சை சென்று சேவப்ப நாயக்கரின் மந்திரியாகப் பொறுப்பேற்று மன்னனுக்கும் மக்களுக்கும் நல்வழி காட்டு.



தங்கள் ஆசியால் அப்படியே செய்கிறேன் தந்தையே!

4 அரசவையில் சேவப்ப நாயக்கர் கோவிந்த தீக்ஷிதரை அறிமுகப்படுத்தினார்.


இவர் நம் புதிய ராஜகுரு ஸ்ரீகோவிந்த தீக்ஷிதர். சகல கலைகளையும் பதினேழு வயதிற்குள் கற்றவர். நம் மந்திரியாகவும் பொறுப்பேற்கிறார்.





5
அரசவையில்
அரசரே நாம் முதலில் மக்களின் அறிவுத் தாகத்தையும், குடிநீர் தாகத்தையும் தீர்க்க ஆவன செய்ய வேண்டும். அதனால் நூல் நிலையமும் குடிநீர் ஏரியும் அமைப்போம்.
ஆஹா, நல்ல யோசனை. உடனே நிறைவேற்றுவோம். எதிரிகளிடமிருந்து நாட்டைக் காப்பது போல் வறுமை, நோய் போன்றவைகளிலிருந்தும் மக்களைக் காப்பது அரசின் கடமை என்ற தங்களின் அறிவுரை எனக்கு நினைவிருக்கிறது அமைச்சரே!
6
நம் ஐயன் (கோவிந்த தீக்ஷிதர்) நடத்திய சோமய யாகத்திற்கு ஸ்ரீமந்த அப்பைய தீக்ஷிதர் முதலானோர் வந்திருந்தது குடந்தை செய்த பாக்கியம்.
அத்துடன் ஐயன் அதே யாகபூமியில், ஒரு வேத பாடசாலையையும் அமைத்து விட்டாரே!
7
பட்டீஸ்வரத்திற்கு அருகில் இருந்த சிங்கரசன்பாளையம் என்ற இடத்தில் ஒரு நாள் சேவப்ப நாயக்கரின் மகனான அச்சுதப்ப நாயக்கர்...
குருதேவா! பீஷ்மர், துரோணரைப் போன்று இருந்து எங்களுக்குப் போர்ப் பயிற்சிகள் அளித்துள்ளீர்கள். இந்த ஊர் இனி தங்கள் திருப்பெயரால் கோவிந்தகுடி என்றே அழைக்கப்படும்.
அரசே! தங்கள் அன்பிற்கு நன்றி!
8
அச்சுதப்பனுக்குப் பிறகு ரகுநாத நாயக்கர் அரசாண்டார். அவரும் தீக்ஷிதரும் ஒரு முறை கும்பகோணத்திற்கு வந்தனர்.
அரசே! பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த மகாமகக் குளத்தில் கங்கை, யமுனை முதலான ஒன்பது நதிதேவதைகளும் தரிசனம் தருகிறார்கள்.
உண்மையாகவா?


9
மன்னனின் ஐயத்தை நீக்க விரும்பினார் தீக்ஷிதர். உடனே குளக்கரையிலேயே பூஜை செய்து தியானித்தார்.
கங்கா! யமுனா! சரஸ்வதி! மற்ற நதிதேவதைகளே! மன்னரின் ஐயத்தை போக்க நீங்கள் எல்லோரும் இங்கு எழுந்தருளுங்கள்.
10
தீக்ஷிதர் நதிதேவதைகளுக்கு அர்க்கியம் வழங்கினார். மகாமகக் குளத்தில் ஒன்பது தேவதைகளும் தங்களது பதினெட்டுக் கைகளையும் மேலே நீட்டி அர்க்கியத்தை வாங்கிக் கொண்டனர். அரசர் அதிசயித்தார்.!
11
12
தங்கள் மகிமையே மகிமை!
மகான் கோவிந்த தீக்ஷிதரின் மகிமையை மன்னர் உலகுக்கு உணர்த்த விரும்பினார்.

13 தீக்ஷிதருக்கு நவரத்தினங்கள், பொன், வெள்ளி முதலியவைகளால் அரசர் துலாபாரம் செய்வித்தார்.




14




15

தீக்ஷிதர் தம் வாழ்நாள் முழுவதும் இறைவனுக்கும் இறையடியார்களுக்கும் தொண்டு புரிந்தார். இறை சேவையிலும் மக்கள் சேவையிலும் கவனம் செலுத்தினார். முடிவில் ஸ்ரீகும்பேஸ்வரர் கோவில் ஸ்ரீமங்களாம்பிகை சந்நிதியில் அவர் தம் மனைவியுடன் இறைவனோடு ஒன்று கலந்தார்.



16



பெரியவர்கள் பெரும் தியாகங்களைச் செய்கிறார்கள். அதன் விளைவாக வரும் நன்மைகளை மனித குலம் பெற்று அனுபவிக்கிறது. இந்த உண்மையை நீ உலக வரலாறு முழுவதிலும் காணலாம். உனது சொந்த முக்திக்காக எல்லாவற்றையும் நீ துறந்துவிட விரும்பினால் அது அவ்வளவு ஒன்றும் பாராட்டுவதற்கு உரியதில்லை. உலகத்தின் நன்மைக்காக உன் முக்தியையும் நீ தியாகம் செய்துவிட விரும்புகிறாயா? அப்படி நீ செய்தால் கடவுளாகவே நீ ஆகிவிடுவாய். இதைச் சற்றுச் சிந்தித்துப்பார்.

–சுவாமி விவேகானந்தர்

முற்றும்

# ஸ்ரீராமானுஜர் விரட்டிய பிரம்மராக்ஷசன்!

*ஸ்ரீ ரமானுஜர் தமது முதல் ஞானகுருவாகிய யாதவப் பிரகாசரிடம் படித்துக் கொண்டிருந்த சமயத்தில் நடந்த நிகழ்ச்சி இது.*

குருநாதர், ராமானுஜரின் திவ்யதேஜஸையும் புத்தி நுட்பத்தையும் கண்டு பொறாமைப்பட்டுக் கொண்டிருந்தார். அதே சமயத்தில், காஞ்சி மன்னனின் மகள், பேய் பிடித்துக் கொண்டதனால் அனைவருக்கும் கவலையை அளித்து வந்தாள். பல மந்திரவாதிகள் வந்து மந்திரம் போட்டனர். பலன் ஏதும் ஏற்படவில்லை.



அரசனின் அழைப்பினால் யாதவப்பிரகாசரும் தமது சீடர்களுடன் அங்கே வந்து சேர்ந்தார். யாதவப்பிரகாசர் மந்திரத்தைச் சொல்லத் தொடங்கியவுடன் அரசகுமாரியின் வாயிலாகப் பேய் பேசத் தொடங்கியது. "உன் வாழ்நாள் முழுவதும் மந்திரங்களை ஜபித்தாலும் என்னை நீ ஒன்றும் செய்துவிட முடியாது. ஆனால் நான் விரும்பினால் உன்னை உன் வீட்டிற்கே விரட்டிவிடுவேன். நான் சாதாரணப் பேய் அல்ல. நான் ஒரு பிரம்ம ராக்ஷசன்."

யாதவப் பிரகாசர் பயந்து அந்த இடத்தை விட்டு அகன்றார். அப்போது ஸ்ரீராமானுஜர் அந்தப் பெண்ணின் முன்னால் சென்று, "ஐயா! தங்களுக்கு இப்படிப்பட்ட வருத்தத்தைக் கொடுக்கும் உடல் ஏன் கிடைத்தது?" என்ற கேட்டார்.

அழுதுகொண்டே பிரம்ம ராக்ஷசன் சொன்னான் "நான் ஒரு சிறந்த பண்டிதனாக இருந்தேன். ஆனால் என் கல்வியை மூடி மறைத்து வைத்திருந்தேன். யாருக்கும் வித்யாதானம்' செய்யவில்லை. அதன் பயனாக ராக்ஷசனானேன். நீங்கள் மிகவும் கெட்டிக்காரர். என்னைக் கண்டு பிடித்துவிட்டீர்கள். தாங்கள் தங்கள் திருக்கரத்தை என் தலைமீது வைத்து எனக்கு அபயம் அளிப்பீர்களேயானால் நான் இந்த நிலையிலிருந்து விடுபடுவேன்" என்றான்.

ஸ்ரீராமானுஜர் பகவானை மனதில் தியானித்தபடி ராஜகுமாரியின் தலையில் தன் கையை வைத்தார். அந்தக் கணமே பிரம்மராக்ஷசனன் அந்தப் பெண்ணைவிட்டு நீங்கி முக்தி பெற்றான்.

இந்த நிகழ்ச்சியைப் படிக்கும் போது சுவாமி விவேகானந்தர் ஹைதராபாத்தில் நோயாளியைக் குணமாக்கியதும், சென்னையில் சில ஆவிகளுக்கு விடுதலை வழங்கியதும் நினைவுக்கு வருகின்றன.

• சுவாமி கமலாத்மானந்தர்

மன்மத ஆண்டு மாசி மாதம்
13.02.2016 முதல் 13.03.2016 வரை




பொது நோக்கங்களுடன் செயல்பட்டு எல்லாம் பெற வழிவகுக்கும் மீன ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு எதிர்கால நலன் கருதி நீங்கள் எடுக்கும் காரியங்கள் அனுகூலமாக அமையும். சுயதொழிலில் போட்டிகள் மறைந்து நன்மைகளை பெறுவீர்கள். திடீர் அதிர்ஷ்டம் கிடைக்கும் வாய்ப்புகள் அமையும்.

**பணியாளர்களுக்கு**

பணியின் திறமைகளை வளர்த்து கொள்வீர்கள். தொழிற்சங்க பணிகளில் உங்களின் திறம்பட செயல்பாடுகளால் தொழிலாளர்களின் அன்பை பெறுவீர்கள். குடும்பத்தில் சுபகாரிய முயற்சிகள் கைகூடும். பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொது நலனில் அக்கறையுடன் செயல்படுவீர்கள். எல்லா வளங்களையும் பெற்று தரும் பொறுப்புகளை நீங்கள் செய்து நன்மையை எல்லோருக்கும் பெற்று தருவீர்கள். நிலங்களை சீர்படுத்தல், விவசாய பொருட்களுக்கு சந்தை ஏற்படுத்தி கொடுத்து வருவாயை பெருக்கி தருவீர்கள்.

**வியாபாரிகளுக்கு**

கடல் சார்ந்த மீன், கப்பல் போக்குவரத்து சார்ந்த தொழிலில் உங்களின் வளர்ச்சி நன்றாக அமையும். கருத்துகளை வெளிப்படுத்தி வியாபாரத்தில் சர்ச்சைளை ஏற்படுத்துபவர்களை அடையாளம் காண்பீர்கள். உங்கள் மீது நம்பிக்கை வைத்து தொழில் செய்து வெற்றி பெறுவீர்கள்.

**கலைஞர்களுக்கு**

இசை, நடன கலைஞர்களின் திறமைகளால் சிறந்த முன்னேற்றம் உண்டாகும். இசை கலைஞர்கள் தொடர்ந்து வளர்ச்சி பாதையில் சென்று நன்மை பெறுவீர்கள். பொருளாதார நன்மை பெறுவீர்கள்.

**பெண்களுக்கு**

பெண்களின் ஒற்றுமைக்கு பாடுபடுவீர்கள். தொடர்ந்து செயல்பாடுகளில் குறிக்கோளுடன் செயல்படுவீர்கள். பொருளாதாரத்தில் வெற்றி பெறுவீர்கள்.

**மாணவர்களுக்கு**

கல்வியில் தெளிவான வளர்ச்சியை பெறுவீர்கள். அடுத்தடுத்து கல்வி மேன்மையை பெற்று சிறந்து விளங்குவீர்கள்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

27.02.2016 சனி அதிகாலை 04.07 முதல் 29.02.2016 திங்கள் மாலை 03.29 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**

**பூரட்டாதி 4ஆம் பாதம்**

மனரீதியான குழப்பம் இருந்து வந்தாலும் உங்களில் செயல்பாடுகளில் எந்த தடையும் இருக்காது. கனவுகளை செயற்படுத்துவீர்கள். வங்கி கடன் விரைவில் கிடைக்கும்.

**உத்திரட்டாதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

உறுதியான செயல்பாடுகளால் நீங்கள் எண்ணியதை செயல்படுத்துவீர்கள். கவலை மறந்து கருத்துகளை கேட்டு கடமையை சரியாக செய்து வருவீர்கள். பண வரவு நன்றாக இருக்கும்.

**ரேவதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

கல்வியிலும் கேள்வியிலும் உங்களுக்கு பல சவால்கள் சந்திக்க வேண்டி வரும். உங்களின் திறமைக்கு நல்ல வாய்ப்பாக இந்த காலம் அமையும். பொருளாதார நிலை நன்றாக இருக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** வெண்மை, இளமஞ்சள், சிவப்பு

**அதிர்ஷ்ட திசைகள் :** வடகிழக்கு, மேற்கு, கிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள் :** திங்கள், வெள்ளி, சனி

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

வலம்புரி விநாயகரை வணங்கி சர்க்கரை வைத்து தேங்காய் எண்ணெய் விளக்கு போட்டு வர எல்லா நலன்களும் பெற்று சிறப்பாக வாழ்வீர்கள்.


**மனக்குற்றங்கள் நீங்கி இறை தரிசனம் கிட்டும்!**

நாம் நம்மிடம் உள்ள ஆன்மீகத் தடைகளை நீக்கிக் கொண்டால், இறைவனைக் காண முடியும். மனத்தில் உள்ள குற்றங்கள் நீங்காமல் இறைவனின் தரிசனம் கிட்டாது.


**கணித்தவர் வாடிப்பட்டி**

R. ஆனந்தன்
919789341554
இந்தியா




# விமர்சன சிற்பிகள்

சோதிட மாத சஞ்சிகையை நான் வளமையாக வாசித்து வருகிறேன். பகவத் கீதை பற்றியதான கட்டுரைகள் கிருஷ்ண பகவானின் நல்லுரைகளை அப்படியே தெளிவாக எடுத்துச் சொல்கின்றன. தொடர்ந்து தாருங்கள் இந்த பகுதியை. நன்றி!

**க. மீனாம்பாள்**
**யாழ்ப்பாணம்**

சோதிடகேசரி ஆன்மீக இதழில், மிகப் பழைமையான மற்றும் சரித்திர புகழ் மிக்க ஆலயங்களில் காணப்படுகின்ற அபூர்வ கலை வண்ணம் கொண்ட சிற்பங்கள் பற்றியதான கட்டுரைகள் அற்புதமாக இருக்கின்றன. சிற்பிகளின் திறமைகளை சிற்ப கலையில் காணுகின்ற நுணுக்கங்களோடு எடுத்து இயம்புவது அபாரம். நன்றி!

**மா. சாம்பசிவம்**
**தெஹிவளை**

சோதிடகேசரியில் ஒவ்வொரு முறையும் வழங்குகின்ற கிரகப் பெயர்ச்சிகளுக்கான சிறப்பு பலன்கள் மிக உயர்ந்த துல்லியத்தோடு இருக்கின்றன. எமது மனம் கனிந்த பாராட்டுக்கள்.

**மு.வசந்தராஜா**
**வெள்ளவத்தை**

சோதிடகேசரியில் மாதந்திர இதழில் பிரசுரிக்கப்பட்டு வரும் "கனவுகளும் பலன்களும்" பகுதி எமது குடும்ப உறுப்பினர் அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. தொடரட்டும் உங்கள் சேவை.

**சொ.நாக**
**சுப்பிரமணியன்**
**நீர்கொழும்பு**

சோதிடகேசரி ஆன்மிக இதழில் கடந்த சில மாதங்களாக வெளியிடப்பட்டு வரும் போதி தர்மர் தொடர்பான கட்டுரைகள் மிகவும் சிறப்பாக உள்ளன. வாழ்க்கையில் தெரிந்து கொள்ள வேண்டிய பல விடயங்களை நறுக்கு தெறித்தாற் போல் எடுத்துரைக்கின்றன இந்த கட்டுரைகள். நன்றி!

**கே.எஸ்.சண்முகானந்த**
**பூபதி**
**திருகோணமலை**

சோதிடகேசரியில் கடந்த சில காலமாக பிரசுரிக்கப்பட்டு வரும் சிறுவர்களுக்கான பகுதி, குழந்தைகளால் பெரிதும் விரும்பிப் படிக்கப்படுகின்ற ஒரு பகுதியாக இருந்து வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். தொடரட்டும் உங்கள் அன்புச் சேவை.

**கே.அமுதா**
**சுப்பிரமணியம்**
**கொழும்பு**


வீரகேசரி
ePaper
URL : http://epaper.virakesari.com

ஸ்ரீ ராம ஜெயம்



# 49 வருட காலமாக நிரூபித்துகொண்டிருக்கும் மலையாள மாந்திரிக உண்மையின் வெளிச்சம்



வந்தாரை வாழவைக்கும் துர்க்கா தேவி அனுக்கிரகத்தில்
என்னிடம் வந்தவர்களை வாழ வைப்பேன்.

நீங்கள் ஒருவரை வாழ வைத்தால் உங்களால் ஒன்பது குடும்பமும் வாழும். நல்லது செய்து நல்லதே நினையுங்கள்.
365 நாட்களும் அன்று அன்று சுகமாக வாழ அற்புத அட்சர கூடு என்னிடம் உண்டு

01. சாந்தமான வாழ்வு பெற வேண்டுமா?
02. வண்டி வாகனம் பெற வேண்டுமா?
03. அனுதினமும் குடிப்பழக்கத்தை முற்றாக போக்க வேண்டுமா?
04. கல்யாணம் கை கூட வேண்டுமா?
05. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
06. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
07. கைத்தொழிலில் முன்னேற்றம் வேண்டுமா?
08. என்னென்ன தேவைகளுக்கு எந்த அதிஷ்டக் கல் அணிவது?
09. எதிரிகள் இல்லாது வாழ வேண்டுமா? முடியும்.
10. கடுமையான நோய் தீர வேண்டுமா?
11. நம்பக்கூடாதவர்களை நம்பி செய்யும் செயலில் இருந்து விடுபட வேண்டுமா?
12. ஆண்மை குறைபாடுக்கு அதிவிசேட லேகியம் உண்டு.
13. திடீர் குபேர வாழ்வு தேவையா?
14. அச்சுட்டான் பலனுடனான காண்ட அடிப்படையில் தெட்டத் தெளிவான ஜாதகம் எழுதிக் கொள்ள. வாருங்கள்.
15. வரவு எட்டனா செலவு பத்தனா நிலை மாறி சேமிப்புகள் உயர வேண்டுமா? முடியும்.
16. இவ்வுலகில் எப்படி ஜனனித்தீர்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டுமா? வாருங்கள்.
17. கெட்டானை தொட்டானும் கெட்டான் என்பதைப் போல யாருக்கோ போக வேண்டிய பிரச்சினை உங்களை சம்பந்தப்படுத்தி வாட்டி வதைக்கிறதா? பயப்படாதீர்கள். நான் இருக்கிறேன்.

சந்தர்ப்பத்திற்கு தொலைபேசியில் உரையாடி நேரத்தை வீணாக்குவதை விட ஒரு முடிவெடுத்த பின்பே நேரடியாக வந்து வெற்றியை குவித்துக்கொள்ளாம்.

உலக மக்களில் என்னை தெரியாதவர் யாருமில்லை



என்னால் நன்மை அடைந்தவர்கள் லட்சக்கணக்கில் என்று கூறினால் மிகையாகாது

கெட்டுப்படிப்பதை விட கேட்டுப்படிப்பதே மேன்மை என்ற பழமொழிக்கு ஒப்ப இதைத் தொடர்ந்து காதலன், காதலி காதல் செய்யும் போது காதலன், காதலி கடைசி வரை உங்களுடன் வாழ்வார்களா? இது தெரிந்தே காதலை தொடரவும்.

P.K.Samy Advertising

உண்மைக்கு எடுத்தக்காட்டு எமது நிறுவனமே

கடல் கடந்து செயல்படும் வண்ணம் வெளிநாட்டவர்க்கென தயாரித்த அதி அற்புத ஆண், பெண் வசியம், வெளிநாட்டில் நிரந்தர வசியம் கனவன், மனைவி பிணக்கு திடீர் அதிஷ்டம் இவைகளுக்கு மன்மத வசிய அச்சரங்கள் உண்டு.

•ஞானச் சாங்கு •செல்வச் சிறப்புச் சாங்கு •இஷ்ட தேவதை சாங்கு •குபேர சாங்கு •வரலக்ஷ்மி சாங்கு

வலம்புரி சாங்கு பெற விரும்புவோர் 11 நாட்களுக்கு முன்பு ஆடர் செய்து துர்காதேவியின் கருணையை பெற்றுக்கொள்ளலாம். பெரிதாகவோ சிறிதாகவோ அதனை பெற்றுக் கொள்ளலாம்.

•அரசாங்கத்திற்கு வரி செலுத்தும் ஸ்தாபனம் •இது ஒரு மதசார்பற்ற சேவை ஸ்தாபனம்
•இரகசியங்கள் எந்த சூழ்நிலையிலும் வெளியிடப்பட மாட்டாது.உறுதி

உங்கள் தேவைக்கு கீழ் காணும் தொலைபேசி வரிசை 10ல் ஒரு எண்ணை அழுத்துங்கள். உங்கள் பிரச்சினை தீரும்.

உலகப் புகழ்
மலையாள மாந்த்ரீக சித்தர் பேராசிரியர் தேசபந்து
REV, P.K. சாமி (J.D.G.A.N)JP

உங்கள் தேவைக்கு கீழ் காணும் தொலைபேசி வரிசை 10ல் ஒரு எண்ணை அழுத்துங்கள்.
உங்கள் பிரச்சினை தீரும்.
உங்கள் தேவைக்கு கீழ் காணும் தொலைபேசி வரிசை 10ல் ஒரு எண்ணை அழுத்துங்கள்.
உங்கள் பிரச்சினை தீரும்.

# ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
## மலையாள மாந்திரீக உச்சாட்டபீடம்

தலைமை காரியாலயம்
23, மேபீல்ட் ரோட், கொட்டாஞ்சேனை கொழும்பு - 13
T.P: 1 011 2342463, 2 011 2342464, 3 0112322189
4 011 2470615 Fax: 5 011 2344831, 6 0112344832
Email : drpksamy23@gmail.com

தொலைபேசியில் ஆலோசனை பெற
33, கண்டி ரோட், நுவரெலியா.
T.P: 7 052 2222508, 8 052 2223093
9 052 2235097 J.Ram- 10 0778431761

இந்த இதழ் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) பிறைவேட் லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.